ரவீந்திரநாத் டாகுர் கடிதங்கள்

[சிடிபத்ர]

வங்காளியிலிருந்து

ஸ்ரீ த. நா. ஸேனாபதி

மொழிபெயர்த்தது

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் : : சென்னை

 அக்டோபர், 1944 [1-4-0

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS
AT TIRUBHUVANAM, TIRUVADAMARUDUR POST.

3587

ஸம்ஸாரி ரவீந்திரர்

ஸ்ரீ ஹேமலதா தேவி

ஆவி குரு ரவீந்திரரின் இல்லற வாழ்க்கை எந்த விதமாக இருந்திருக்கும்? ஸம்ஸாரத்தில் அவர் எவ்வாறு நாட்களைக் கழித்திருப்பார்? - இவை போன்ற அவருடைய கிருஹஸ்த தர்மத்து விஷயங்களைப் பற்றிக் கூறும்படி என்னை அநேகம் பேர் கேட்டுக்கொண்டார்கள். அந்தப் பெரிய (டாகுர்) குடும்பத்தில் வாழ்க்கைப்பட வந்த பழைய நாட்டுப் பெண்களில் நானும் ஒருத்தி. அதனால் அந்த வீட்டு விஷயங்கள் எனக்குத் தெரிந்திருக்க வேண்டியவை தாமே? ஞாபகத்தில் உள்ள வரையில் அந்தப் பழைய விஷயங்களில் சிலவற்றை இங்கே உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

கவியின் இல்லறம் சுகமாகவே இருந்திருக்குமென்று நினைப்பவர்கள், கட்டாயம் ஏமாற்றத்தையே அடைவார்கள்.

அந்தக் காலத்தில் பெரிய இடம், பணக்காரக் குடும்பம் என்ருல், லஸ்தர் விளக்குகளும் ஜாலர் விளக்குகளும் தொங்கும் கேளிக் கிருஹங்கள், சீமைச் சாமான்கள் அலங்காரமாக இருக்கும் 'டிராயிங் ரூம்', பெண்டாட்டி உடம்பு முழுவதும் நகைகள், அழகிய பீரோ நிறையப் பனாரஸ் பம்பாய் ஜரிகைப் பட்டுச் சேலைகள், எடுத்து ஆள்வதற்கான வெள்ளிப் பாத்திரங்களின் குவியல்கள், 'பாங்கி' ல் வட்டியுடன் சேர்ந்திருக்கும் அளவற்ற பணம், சுவரில் புதைக்கப் பட்டிருக்கும் இரும்புப் பெட்டியில் நோட்டுக் கற்றைகள்—இவை யாவும் நினைவுக்கு வருகின்றன. ஆனுல், இந்தமாதிரியான ஆடம்பரங்களில் கவி ஒரு நாளும் விருப்பங் கொண்ட

தில்லை. மூன்றும் மாடியில் தம் சயன அறைக்குப் பக்கத்திலேயே, குச்சு உள் போன்ற 'காம்பரா' ஒன்றில்தான் அவர் எழுதுவது படிப்பது எல்லாம். அதைப் போலவே மற்ருேர் அறை, தம் சிநேகிதர்களுடன் பேச உபயோகித்து வந்தார். அறையினுள் அலங்காரங்கள் யாவும் கவியின் ரஸிகத் தன்மைக்கு ஏற்றவாறே அமைந்திருக்கும்.

சிறு பிராயத்தில் கவி ஒரு சமயம், தம் அங்கவஸ்திரத்தை விற்றுப் புஸ்தகம் வாங்கியதாகக் கேள்வி. ஸம்ஸாரத்தில் நுழைந்ததும், புதிய வழியில் அதைத் திருப்ப அவர் எப்போதும் முயன்று வந்தார். கவியின் பெண்கள் அந்தக் காலத்து நாகரிக ரீதியில், 'லொரெட்டா' 'பெதூன்' போன்ற உயர்தரக் கல்லூரிகளில் படித்தவர்கள் அல்ல.

அவர் தம் பிள்ளையைப் 'பிரெஸிடென்ஸி' அல்லது 'ஸெயிண்ட் ஸேவியர்ஸி'ல் சேர்க்கவில்லை. தாம் கடைப்பிடிக்கும் லக்ஷ்யத்திலேயே அவர்களுக்குக் கல்வி புகட்ட ஆரம்பத்திலிருந்தே அவருக்கு நோக்கம் இருந்தது.

கவியின் சிருஷ்டியான, பிற்காலத்தில் நிலைக்கப்போகும் ஓர் ஆதர்ச வித்தியாலயம், அவருடைய வீட்டுக் குழந்தைகள் பயின்ற கல்வி முறையை அடிப்படையாகக் கொண்டதே. வாணியின் அருள் பெற்றவர்களின் மேதை அவர்கள் குடும்பத்திலும் வெளியிலும் பரவியே தீரும். அவர்கள் நிலைத்துப் போன பல பழைய பழக்க வழக்கங்களோடும், குருட்டு நம்பிக்கையோடும் எப்போதும் போர் தொடுப்பார்கள். எதையும் புதிய நோக்கத்துடன் பார்ப்பார்கள். புதிய வழிகளைக் கண்டுபிடித்து அவற்றின் வழியே நடப்பார்கள். புதிய பாவங்களையும் உணர்ச்சிகளையும் புதிய புதிய சந்தங்களில் புகுத்தி, விசித்திரக் காவியங்களைப் புனைவார்கள். அவர்கள் கண்ணுக்கு ஏற்றனவாகவும், இயல்பாகவும் தோற்றுவன யாவும், நம் போன்ற பாமரர்களுக்கு விநோதமாகவும், ஒவ்வாதனவுமாகவே படும். கவி குரு ரவீந்திரநாதரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், இதற்கு அளவற்ற திருஷ்டாந்தங்களைக் காணலாம்.

கவிகள் எப்போதுமே ஒரு லக்ஷ்யத்தில் கட்டுண்டு செல்பவர்கள். படைப்பே தொழிலான கவி இனத்தார் இம்மாதிரியான புது லக்ஷ்யங்களைச் சிருஷ்டிப்பதிலேயே தம் ஜீவனை அர்ப்பணம் செய்துவிடுகிறார்கள். அவர்களுடைய குடும்பமும் இந்த லக்ஷ்யத்தை நோக்கியே பெரிய மாறுதல்களை அடைகிறது. ஒரே நிலையில் அசையாமல் நிற்கும் ஸம்ஸார தர்மம் லக்ஷ்ய புருஷர்கள் கடைப்பிடிக்கும் தர்மமன்று.

ஸம்ஸார விஷயங்களில் மனத்தை விடாத மகா புருஷர்களின் உள்ளத்தில் இல்லறத்தின் முறைமையும் காவிய ஸாதனையும் எவ்வாறு சேர்ந்து வாழும்? கவி குரு ரவீந்திரர் இதற்கு விலக்கானவரல்ல. தம் மனத்துள் தோன்றும் மகத்தான கிளர்ச்சியைப் புறக்கணித்துவிட்டு, ஸம்ஸாரத்தில் ஈடுபட அவரால் ஒரு நாளும் முடியவில்லை. அவர் தம்மையும் தம்மை அண்டினவர்களையும் இந்த இலக்கை நோக்கியே இழுத்துச் சென்றார். எந்த இடத்திலும் நின்றுவிடாமல் அவர் வாழ்நாள் முழுவதும் ஒரே வீட்டில் இராமல் மாறி மாறிப் பல புதிய வீடுகள் கட்டிக் கொண்டதிலிருந்து இந்தக் குணம் வெளிப்பட்டது. இதனால் அவருடைய குடும்பத்தவர்களும் எந்த இடத்திலும் நிலைத்து இருக்கவில்லை.

இசையின் நுணுக்கத்திலும், கவிதை புனைவதிலும் புதிய யாப்புக்களைப் பிறப்பித்து, தேய்ந்த பழைய வழிகளை அவர் பின்பற்றுவதை ஒழித்ததுபோல், இல்லறத்திலும் ஸுலபமாக ஸுகத்தோடு வாழும் ரீதியில் தாமும் செல்லவில்லை; தம்மைச் சேர்ந்தவர்களையும் போகவிடவில்லை. கவியின் பத்தினி குழந்தைகளுக்காக அதிக விலையில் பகட்டான துணி மணிகள் வாங்கப் போனால், 'பெரிய மனுஷ்யத் தரவில் வளர்த்தால் குழந்தைகள் உன்னத நிலைக்கு வரமாட்டார்கள்; இந்தப் பழக்கங்கள் படிந்துவிட்டால் எப்போதுமே ஒருவனை விட்டொழியா' என்று புத்தி புகட்டுவார். கவியின் மனைவி இதைக் கேட்டுப்

பெருமை கொள்வாள். ஆனால், அவள் மனத்துள் குழந்தைகளை நன்றாகச் சிங்காரித்துப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மட்டும் இருந்து வந்தது. சிற்சில சமயம் அவளுடைய அந்தரங்கவாசனை வெளியாருக்குத் தெரிந்துவிடும், பேச்சு மூலமாக இருந்தும், கணவர் காட்டிய லக்ஷ்யமார்க்கத்தையே அவள் அநுசரிக்க முயலுவாள்.

கவி பொதுஜனங்களுடன் கலந்து அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்ற மிகவும் ஆவல் கொண்டவர். அது கைகூடாது போனால் மிகவும் வருத்தமே அடைவார். பாமர மக்களுள் ஒருவராகத் தம்மை ஆக்கிக் கொள்ள எவ்வளவோ சீர்திருத்தங்களைச் செய்து பார்ப்பார். வித்தியாலயத்தை ஸ்தாபித்த பிறகு தாமும் மாணவர்களுடன் வசிக்க வேண்டி, சாந்திநிகேதனத்தில் இப்போது இருக்கும் புத்தகசாலையின் பக்கத்தில் ஒரு சிறிய குடிலைக் கட்டிக் கொண்டு வெகுநாட்கள் இருந்தார். மாணவர்களுக்குப் பரிமாறிய ஸாதாரணமான உணவையே அவர்களுடன் கலந்துகொண்டே சாப்பிடுவார்.

கவியின் இல்லாள் இயல்பாகவே அலங்கார ஆடம்பரங்களில் பிரியம் இல்லாதவள். நகையில் மோகம் என்பதே இல்லை. பெரிய இடத்து நாட்டுப் பெண்ணாக இருந்தும், படாடோபமாக உடைகளை உடுத்தவே மாட்டாள். அதோடு, கவியின் உன்னத ருசிக்கு ஏற்றவாறு அவள் எல்லோரையும்போல் ஸாதாரணமாகவே இருப்பாள். போக விலாஸங்களை மூட்டும் பொருள்களை ஒழிக்கவேண்டும் என்பதே அந்த நாளில் கவியின் உபதேசமாகும். பெண்பாலார் செயற்கைச் சாதனங்களைக் கொண்டு தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வது, கண்ணைப் பறிக்கும்படியான பல வர்ணத்திலும் ரகங்களிலும் உடுப்பு அணிவது, அழகைக் கொடுக்கும் ஆபரணங்களை அதிகமாகப் பூண்பது— இவற்றையெல்லாம் வெறுத்தவராய், வார்த்தைக்கு வார்த்தை, ''நாகரிகமற்ற ஜாதியார்தாம் முகத்தில் வர்ணம் தீட்டிக்கொண்டு இப்படித் தம்மை அழகு செய்துகொள்

வார்கள். அவர்களைப்போல் ஆக விரும்புகிறீர்களா?'' என்பார்.

நாங்களெல்லாரும் வற்புறுத்தவே, ஒரு நாள் கவியின் பத்தினி காதுகளில் 'பிர்பெளலி' என்று சொல்லப்படும் ஒருவித டோலக்கைத் தொங்கவிட்டுக் கொண்டாள். அகஸ்மாத்தாகக் கவி அங்கே வந்தார். அவரைப் பார்த்ததும் அவள் வெட்கப்பட்டு, தன் காதுகள் இரண்டையும் கைகளால் பொத்திக்கொண்டாள். அவளது கையைக் காதிலிருந்து எடுத்துவிட எவ்வளவு முயன்றும் எங்களால் முடியவில்லை. அவள் நகையே அதிகமாக அணிந்து கொள்ளாததால், அந்த டோலக்கைப் பூண்டது அவளுக்கு மானக்கேடாக இருந்தது. தனக்கு ஈடான பெண்களை அவள் நகை போட்டுக் கொள்ளும்படி தூண்டுவாளே தவிர, தான் ஒன்றையும் தொடமாட்டாள். ஏனென்று கேட்டால், ''மைத்துனர் பசங்களும், மருமக்கள்மாரும் பெரியவர்களாகச் சுற்றி வளைய வரும்போது, நான் போட்டுக்கொண்டு மினுக்குவது அழகன்று'' என்பாள்.

கவி, அவருடைய தகப்பனுருக்குக் கடைசிப் பிள்ளை. அவரைவிட வயசானவர்களும், ஸம வயசினருமான அண்ணன் வயிற்றுப் பிள்ளைகளும், மருமான்களும் இருந்தனர்.

கவியின் மனைவி ஒரு சமயம், மிகவும் சிரத்தையுடன், கணவர் பிறந்த நாளை உத்தேசித்து அவருக்குப் போடத் தங்கப் பித்தான்களைச் செய்து வைத்திருந்தாள். கவி அதைப் பார்த்து, ''சீ சீ சீ! ஆடவர் எங்கேயாவது பொன்னிழை பூண்பார்களா? இது மானக்கேடல்லவா? பேஷ்! உன் ருசியை மெச்சுகிறேன்'' என்றார் எடுப்பாக. அவள் அந்தப் பித்தானை அழித்துவிட்டு கோதந்த (ஒபால்) மணி பதித்த பித்தான்களைப் பண்ணிப் போட்டாள். தள்ளக் கூடாதே என்று அவர் இரண்டொரு தடவை அவற்றை அணிந்துகொண்டார். கவியின் அபிலாஷைகளே அலாதியானவை. அவற்றை அறிவது கடினம்.

வித்தியாலயம் ஏற்படப் போவதன் முன்னர், சாந்திநிகேதன ஆசிரமத்திலுள்ள பழைய கட்டிடத்தில், கவியின் பரிவாரமும் நாங்களும் சில காலம் ஒன்ருக வசித்து வந்தோம். சமையலேயும் வீட்டுக் காரியத்தையும் கவனிக்கும் பொறுப்பு, கவியின் இல்லாளுடையது. அவளுக்குக் கூட உதவியாக இருக்கவேண்டியது என் வேலே. வீட்டுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக்கொடுத்து, கணக்கு வழக்குகளைக் கவனிக்கும் பொறுப்பு என் *புருஷருடையது. நித்தியம் வித விதமான சாப்பாடு; கவியின் மனேவி திவ்வியமாகச் சமையல் செய்வாள். தித்திப்புப் பக்ஷணங்கள் செய்வதில் அவள் கைதேர்ந்தவள். கவி அடிக்கடி, "இேமே நான் எழுதிக்கொண்டிருக்கிறேன். ஒரு நாள் விடாமல் கவனிக்கிறேன் : நீ உன் பாட்டுக்கு நெய் வேண்டும், மாவு வேண்டும், பக்ஷணம் பண்ணச் சர்க்கரை வேண்டும், அது வேண்டும், இது வேண்டுமென்று எதையாவது கேட்டுக்கொண்டே இருக்கிருயே !" என்பார். என் புருஷரைக் குறிப்பிட்டு, "அவனும், இல்லே என்று சொல்லுவதில்லே ; கேட்ட மாத்திரத்தில் கொண்டு வந்து விடுகிருன். அவனேப்போல் ஒருவனும் உன்னேப்போல் ஒருத்தியும் ஸம்ஸாரத்தில் இருந்தால் இரண்டே நாளில் திவால்தான்" என்பார்.

கவியின் மனேவி தன் மைத்துனரின் பிள்ளேயாகிய என் கணவரைப் பெயரிட்டே அழைப்பாள். "அவனுக்கு ஸம்ஸாரத்தைக் கட்டிப்பிடிக்கத் தெரியும். இந்த விஷயத்தை நீங்கள் ஏன் கவனிக்கிறீர்கள்?" என்பாள்.

பலேந்திரநாத் (மைத்துனர்) ஒரு சமயம் எங்களுடன் இருந்தார். நான் காலேயில் பாலும் ஏதாவது ஆகாரமும் சாப்பிட்டுவிட்டுப் பிள்ளேகளேக் கூட்டிக்கொண்டு, உலாவி வரப்போவேன். பலேந்திரநாதரும் உடன் வருவார். ஆசிரமத்திற்குக் கிழக்கு மூலேயில் முரம்புப் பாய்ந்த ஒரு

---

* த்விபேந்திரநாத் டாகுர்; பரம பூஜனீயரும், ரவீந்திரரின் ஜேஷ்டப் பிராதாவுமான த்விஜேந்திரநாத் டாகுரின் பிள்ளே.

மேடான இடம் உண்டு. பார்ப்பதற்கு அது ஒரு சிறு குன்றளவு இருக்கும். அதன்மேல் ஏறிக் கீழே சறுக்கி வந்து தரையில் குதிப்பது பிள்ளைகளுக்கு ஒரு விளையாட்டு. பலேந்திரநாத் ஒரு நாள் அந்த மேட்டில் ஏறிவிட்டுக் கீழே இறங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். சமாசாரத்தை வீட்டுக்கு எட்டவிட்டு ஆளை வருவித்து, அவரை மெதுவாகக் கீழே இறக்கிவரும் காட்சியைப் பார்த்துச் சிறுவர்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கைகொட்டினர். அதற்கப்புறம் அந்த மேட்டின்மேல் ஏற அவர் துணிந்ததில்லை.

இந்த நாளைப்போல, கையில் காமிராவும், கண்டதைப் படம் எடுக்க ஸௌகர்யமும் அந்தக் காலத்தில் இருந்திருக்கும் பக்ஷத்தில், எவ்வளவோ விந்தையான காட்சிகளைக் காட்டியிருப்பேன்.

ஆசிரமத்தின் சுற்றுப்புறமெங்கும் மனிதர் நடமாட்டமே இல்லை. நாங்களே அங்கே ஏகாந்த வாசிகள். மாலை நேரங்களில் கவி தாம் எழுதியதை எங்களுக்கெல்லாம் படித்துக் காட்டுவார். 'தேவதார் க்ராஸ்' (தேவர்களின் உணவு) அந்த ஸமயத்தில்தான் எழுதியது.

கவி மனைவியின் பாகம் முதல் தரமானது. வியஞ்ஜனங்களும், தித்திப்புப் பண்டங்களும் அவள் கைப் பட்டாலே அதிக ருசியுள்ளனவாக இருக்கும். கவியின் பொருட்டு, அவள் நித்தியம் ஏதாவது ஒருவிதப் பக்ஷணம் பண்ணிக்கொண்டே இருப்பாள். அவல் கேஸரி, தயிர் வடை, மாம்பழ ரஸ பர்பி—இவற்றையெல்லாம் தின்று அநுபவித்தவர்களுக்குத்தானே தெரியும் அந்த இனிப்பு? காலஞ்சென்ற நாட்டோர் மஹாராஜா ஜகதீந்திரநாத் ராய், கவி பத்னி செய்த தயிர் வடையை மிகுதியாகப் புகழ்ந்தாராம்.

புதிய புதிய தின்பண்டங்களைக் கண்டுபிடிப்பதில் அவளுக்குச் சற்றும் சளைத்தவரல்ல இக்கவிஞர். மனைவியின் திறமையே அவரை இந்த வழிக்குத் தூண்டியது போலும்.

அவர் சமையலறையில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, தம் பத்தினிக்குப் புதுவிதமான தளிகை முறைகளைச் சொல்லுவதை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். சொல்லுவதோடு நின்றுவிடமாட்டார்; அதைச் செய்யச் சொல்லி ருசியும் பார்த்து விடுவார். அவளுக்கு ரோஷம் உண்டாகும்படி, "பார்த்தாயா, உங்கள் வித்தைகளிலும் சில நுட்பங்களை நான் கற்றுக்கொடுத்தேன்!" என்று கூறாமல் போகமாட்டார். அதற்கு அவள் ரோஷத்துடனேயே, "உங்களோடு போட்டியிட யாரால் ஆகும்? எந்த விஷயத்திலும் எங்களை வென்று விடுகிறீர்கள்" என்பாள்.

கவி எப்போதும் குறைவாகவே புசிப்பவர். இதனால் வீட்டாருக்கெல்லாம் பெரிய வருத்தம். வரவர அவர் சாப்பாட்டைக் குறைத்துக் கொண்டே வந்தால்? யார் வருத்தப்பட்டால் என்ன? கவி தம் இஷ்டப்படியே நடப்பார். பிறந்ததே தொடங்கி ஆரோக்கியமும் பலமும் இருந்து வந்ததால், அவர் உடல் இதனால் நலிந்து போக வில்லை. அவர் வேண்டுமென்றே இப்படி ஆகாரத்தை வெறுக்கிறாரென்பதே எல்லார் கருத்தும். சரீர வளர்ச்சியை விட மூளையின் வளர்ச்சிக்கு அவசியமான உணவை அவர் தேடுகிறாரென்பது அப்போது யாருக்கும் விளங்கவே இல்லை. வீட்டிலிருப்பவர்களுக்கு இதெல்லாம் எப்படிப் புரியும்? இந்தமாதிரி ஒரு விசித்திரப் பிரகிருதியை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று கலக்கமுற்றனர். இப்படி அவர் படிப்படியாக உணவை வெறுப்பதைப் பார்த்து, நாங்கள் அவர் மனைவியிடம் போய், "நீங்கள் சொல்லிப்பாருங்கள்; சித்தி சொன்னால் சிற்றப்பா கட்டாயம் சாப்பாட்டில் கவனம் செலுத்துவார்" என்று சொன்னோம். அதற்கு அவள், "உங்களுக்கு என்ன தெரியும்? பிடித்தால் ஒரே பிடிதானே? சொன்னால் இன்னும் அதிகமாகும். தானாக வயிறு வாடட்டுமே; மெத்தைப் படி ஏறும்போது கண் கிர்ரென்று சுழற்றிக்கொண்டு வந்தால் தாமே தெரிந்து கொள்ளுகிறார். யார் சொன்னாலும் கேட்கிற மனுஷ்யரல்ல அவர்" என்பாள்.

கவி அநேக வருஷகாலம் ஆமிஷ உணவுகளைத் தொடாமலே இருந்தார். மனைவியின் பிரிவுக்குப் பிறகு தம் வீட்டில் அவர் சிற்சில சமயம் அன்னத்தையும் வெறுத்து, நீரில் ஊறப்போட்ட வெறும் கடலையும், பச்சைப் பயறுமே தின்று காலத்தைக் கடத்துவார். நடு நடுவே அவர் ஜமீன் காரிய விஷயமாக 'பதிஸாருக்'குப் போக நேரிடும். கவியின் மாமியார், அந்தச் சமயம் சொந்த ஊரான யசோஹர் ஜில்லாவிலுள்ள 'புலதா' வை விட்டு, தன் பிள்ளை உத்தியோகம் பார்க்கும் பதிஸாரில் இருந்தாள். அவள் தானே ஆக்கிய மீன் கறிவகைகளை மாப்பிள்ளையின் இலையில் பரிமாறும் போது, 'வேண்டாம்' என்று தடுக்கமாட்டார். 'பெண் இல்லை; அதனால்தான் இந்த அலக்ஷ்யம்' என்று அவள் எண்ணிக்கொள்ளப் போகிறாளென்றே கவி சில சந்தர்ப்பங்களில் நியமத்தை மீறவேண்டியதாயிற்று. கூடவந்திருந்த அவருடைய சமையற்காரன் உமாசரண் திரும்பி வந்தபோது எங்களிடம் இந்தக் கதையை எடுத்து, "இங்கே பாபு வயிற்றுக்குச் சாப்பிட இவ்வளவு சிங்கி நாதம் செய்கிறாரே. பதிஸாரில் பார்க்கவேண்டும். மாமியார் அம்மாள் இலையில் எதைப் போட்டாலும் வேண்டாமென்று தடுப்பதே இல்லை. கப்சிப்பென்று சாப்பிட்டு விடுகிறார். என்ன இருந்தாலும் மாமியாரல்லவா!" என்று சொல்வான்.

பணியாட்கள் எப்போதும் கவியினிடம் சிரித்த முகமாகவே பேசுவார்கள். அவரும் அவர்களிடத்தில் அன்புடன் நடந்துகொள்வார். தமக்கு நடுங்கிக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்பதை அவர் வெறுப்பார்.

சாந்தி நிகேதனில் வீட்டு மாடியில், ஒரு நாள் சாயங்காலம், கவி தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். தமக்காக நல்ல தின்பண்டங்கள் தயாராவதை அறிந்து, திடீரென அவர், "எனக்காக எந்தத் தின்பண்டமும் பண்ணவேண்டிய அவசியமில்லை" என்றார். சித்தியின் கைதேர்ந்த இனிப்புப் பக்ஷணங்களின் கவனம் வந்து அவர் மனம் வேதனை உற்றதோ என்னவோ? உள்ளத்தில் குமுறும் வேதனையை

அடக்கிக் கொள்வார் ; அன்று என்னவோ துயர் நிரம்பிய அந்தச் சொற்கள் வெளிவந்தன.

அதிகப் பாத்திரம் பண்டங்களை வீட்டில் நிரப்பிக் கொள்வது அவருக்குப் பிடிக்காத விஷயம். ஸூக்ஷ்மமான அறிவைப் படைத்தவர்கள் இவற்றைப் பெரும் சுமையாகவே கருதுவார்கள். அதனால் அவர்களுக்குத் தொந்தரவே. ஓரிடத்தில் தங்காத மனப்பான்மை உடையவரான கவி வேரூர் இடத்தில் சில காலம் வாஸம் செய்யப் புறப்பட்டபோது, "பாத்திரம் பண்டம் எதையும் கட்டிக்கொண்டு வரவேண்டாம்" என்றார். ஸம்ஸாரத்திற்கு அவசியமான அரிவாள்மணை, கத்தரி, தேங்காய் துருவி, தாம்பாளம், அண்டா, சருவம் – இவற்றையெல்லாம் பார்த்தவுடன் கவி அமர்க்களம் செய்வார். கட்டிக்கொள்ளத் துணி இரண்டு எடுத்துக்கொண்டாலே யதேஷ்டம் என்பது கவியின் கொள்கை.

பிரயாணம் போவதாக இருந்தால் பெண்கள், கைக்குக் காவலாக இரண்டொரு சாமான்கள் வேண்டியதற்குமேல் எடுத்துக்கொண்டு புறப்படுவது இயல்பு. அவை புருஷர்கள் கண்ணுக்கு அவசியமில்லாதனவாகவே படும். அதிக மூட்டை முடிச்சு எதற்கென்று அவர்கள் முணு முணுத்துக்கொண் டிருப்பார்கள். சமய சந்தர்ப்பங்களில் அவை உதவும் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? இவ்வாறே ஒவ்வொருவர் வீட்டிலும் புருஷர்களுக்குத் தெரியாமல், சில அதிகப்படி சாமான்களை எடுத்துச் செல்வதுதான் பெண்களின் வழக்கம். கவியின் வீட்டுக் காரியும் இதை அநுசரித்து, சில சாமான்களை மறைத்தே கட்டி வைப்பாள். எங்களைக் கூப்பிட்டுத் தனியாகச் சொல்லுவாள்: "இந்தமாதிரி மனுஷ்யரோடு எப்படி ஸம்ஸாரம் பண்ணமுடியும்? இப்போது எல்லாவற்றையும் போட்டுவிடு என்று சொல்லுகிறாரே. வீடு நிறைய விருந்தாளிகள் வந்து விட்டால், நினைத்தமாத்திரத்தில், 'தயிர் வடை கொண்டு வா. பஜ்ஜி போட்டாயா? உப்புச் சீடை

எங்கே? சுடச்சுடச் சோமாசி' என்கிறாரே! இவை யாவும் எதிரே நிற்கவேண்டும், அதுவும் தட்டுத்தட்டாக வேண்டும். இந்தச் சாமான்களெல்லாம் பக்கத்தில் இராது போனால் அதெல்லாம் எப்படிப் பண்ணிப்போட முடியும்? அவருக்கு இதையெல்லாம் யார் சொல்லுவார்கள்?''

தம் லக்ஷ்யத்தைக் கடைப்பிடிப்பதனால் கவி சில சமயங்களில் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார். அதற்காக அவர் எள்ளளவும் பின் வாங்கியது இல்லை. இந்த லக்ஷ்யமோகம் அவரை ஏதாவது சங்கடத்திற்கு உள்ளாக்கி விடுமோ என்று கவலை கொள்வாள் அவர் துணைவி. கவி, தம் குடும்பத்தை விட்டுத் தனியாக வாழ்ந்தவரல்ல. அதனால் அவருக்கு ஒரு நஷ்டம் ஏற்பட்டால் குடும்பத்தையும் அது பாதிக்குமல்லவா? கணவனும் குழந்தையும் நோய் நொடி இராமல் பார்த்துக் கொள்வதே, பத்தினி அன்னை இவர்களின் கவலை. ஸம்ஸாரம் சிதைவுறாமல் இருப்பதே இதன் நோக்கம். புருஷர்கள் வாரி இறைப்பவர்கள். பெண்கள் அதைத் திரட்டி வைப்பார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே திகழும் இந்த லக்ஷ்யப் போராட்டம் பிரபஞ்ச சிருஷ்டியில் ஒரு முக்கியமான படலமாகும்.

இத்தகைய இல்லாளை இழந்த பிறகே கவி பிதுரார்ஜிதமான தம் சொத்துக்கு அதிகாரியானார். சொத்து தம் கைக்கு வந்த சில வருஷங்களுக்கெல்லாம், அதைத் தம் பிள்ளை பெண்களுக்கு எழுதி வைத்துவிட உத்தேசித்து விட்டார். ஒரு வித்தியாலயத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். பத்திரங்கூட எழுதியாகி விட்டது. கவியின் நெருங்கிய உறவினர் ஒருவர், ''குழந்தைகளெல்லாம் சிறியவர்கள். இப்போது இந்தக் காரியத்தைச் செய்வது உசிதமாயிராது'' என்று தகுந்த காரணங்களை எடுத்துக் காட்டவே, அவர் அந்த யோசனையை விட்டொழித்தார். சொத்து, உடைமை—இவற்றின் சுமையைப் போக்கிக்கொள்ள கவி மூர்த்தன்யமாயிருந்தார். தாம்

எழுதிய வங்காளி மொழியிலுள்ள புஸ்தகங்களின் உரிமையைக்கூட விற்று அந்தத் தொகையைக் கொண்டு சாந்திநிகேதன் ஆசிரமத்தை ஒட்டினாற்போல் பெண்கள் கல்விப் பயிற்சிக்கென்றே தனி ஏற்பாடு செய்ய முற்பட்டார். எதையும் விரயம் செய்வதிலேயே கவி முனைந்திருந்தார்.

அந்த ஸமயம் குறிப்பிடத் தகுந்த ஒரு ஸம்பவம்: அவருடைய மகளைச் சீர்வகைகளுடன் புக்ககம் அனுப்பவேண்டியிருந்தது. எளிய முறையிலே அவளை அலங்கரித்து அனுப்பினார். பந்துக்கள் அனைவரும், "பெண் இந்த மாதிரிப் புக்ககம் போவதைப் பார்த்தால் நாலுபேர் நகைப்பார்களே!" என்று சொன்னபோது, கவி என்ன பதில் சொன்னார் தெரியுமோ? "இந்த உடையில் வரும் என் பெண்ணை அவர்கள் தகுந்த மரியாதையுடன் அழைத்துக் கொள்ளாதுபோனால் போகட்டும். அவர்கள் காட்டும் மரியாதை அவளுக்கா அல்லது அவளது உடைக்கா?" என்றார்.

கல்வியைப் பரப்புவதில் ஊக்கம் கொண்ட கவி, ஆதர்ச வித்தியாலயத்தை நிறுவியபோது, அவருடைய பத்தினியும் அந்தப் பெரும் தொண்டில் பங்கு எடுத்துக்கொண்டாள். மாணவர்களுக்கு ஆகாராதிகளைத் தன் கையாலேயே செய்து போடுவதில் அவளுக்கு ஒரு திருப்தி. அன்புடன் ஒவ்வொரு பிள்ளையையும் உபசரிப்பாள். வித்தியாலயம் தொடங்கி ஓராண்டு முடிவதற்குள், அதற்கு உயிர் ஊட்டிய தாயான கவி-பத்தினியின் ஆயுளும் முடிவெய்தியது. அவள் மறைந்ததால் கவியின் அழகிய இல்லறம் அகாலத்தில் சிதைவுற்றது. மரணத்தை நோக்கும் மனைவியின் பக்கவிலேயே கவி, கடைசி வரை இருந்து அவளுக்குச் சுச்ருஷை செய்த ஓர் அற்புதம் இன்றும் குடும்பத்தவர் மனத்துள் பதிந்திருக்கிறது. இரண்டு மாதம் அவள் படுக்கையாகக் கிடந்தாள். காசுக்கு உழைக்கும் தாதிகளை நம்பி, அவர் தம் ஆருயிர்த் துணைவியை ஒரு நாளும் விட்டதில்லை.

கொழுநர் கையின் ஸேவையிலுள்ள இனிமை, பாக்கிய வதிகளான ஸதிமணிகளுக்கே தெரியும்.

தம் பத்தினிமேல் கவிக்கு இருந்த பேரன்பு அவளுடைய மரண ஸமயத்தில்தான் உன்னதமாக வெளிப் பட்டது. அந்தக் காலத்தில் மின்சார விசிறியின் நாமதேயமே இல்லை. விசிறியைக் கையிலெடுத்து இரவு பகல் ஓயாமல் அவளுக்கு விசிறிக்கொண்டே இருப்பார். சற்றுக் கீழே வைக்கமாட்டார்.

பத்தினி நோய் வாய்ப்பட்டிருக்கும் சமயம் கவி தம் புதல்வரைச் சாந்தி நிகேதன் வித்தியாலயத்திலேயே விட்டு வைத்திருந்தார். கவியின் பத்தினி பிணியினால் வருந்தும் நிலையில் பல தடவை, "தூங்கு தூங்கென்று என்னைச் சொல்லுகிறார். சமியைச் சாந்திநிகேதனத்தில் விட்டு விட்டார். அவன் இராமல் எனக்குத் தூக்கம் எப்படி வரும்? அது அவருக்குத் தெரியவில்லையே!" என்பாள். அவளுடைய கடைசிப் பிள்ளை சமி அப்போது சிறு குழந்தை. அந்த நெருக்கடியில், குழந்தை சாந்திநிகேதனத்தில்தான் ஆதரவுடன் வளருமென்று எண்ணியே அவ்வாறு செய்தார். மரணத்தின் துயர் இருள் அச்சிறுவர் மனத்துள் படிவதைச் சற்றும் அவர் விரும்பவில்லை.

தம் மக்களிடத்தில் கவிக்கு அளவிறந்த வாஞ்சை. முதலில் பிறந்த பெண்ணுக்கு அவர் தகப்பனாராயிருந்தும், செவிலித்தாயின் அன்புடன் அவளை எடுத்து வளர்த்தார். மனைவி தம்மைவிடப் பல வருஷங்கள் சிறியவள்; அதனால் குழந்தையைக் கவனிக்க அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ என்ற அவநம்பிக்கை அவருக்கு. குழந்தைக்குப் பால் புகட்டுவது, குளிப்பாட்டிச் சொக்காய் போடுவது, அது சுகமாகக் கண் துயிலப் பஞ்சணையைத் தட்டிப் போடுவது — இவ்வேலையெல்லாம் அவரே சிரத்தையுடன் செய்ததை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

வங்காள ஸம்வத்ஸரம் 1309-கார்த்திகை மாதம், 7-ஆம் தேதி (1902 நவம்பர், 23) ஞாயிற்றுக்கிழமை

யன்று சாந்தி நிகேதனத்தில் பிரம்மசர்யாச்ரமம் ஸ்தாபித மாகிச் சரியாகப் பதினேராவது மாதம், முப்பத்தொன்ப தாவது வயசில் கவியின் வாழ்க்கைத் துணைவி பரலோகம் சென்ருள். அன்று எனக்கு உடம்பு சரியாக இல்லை. படுக்கையில் கிடந்தேன். கடைசி மூச்சு இருக்கும்போதே அவளைப் போய்ப் பார்க்க என்னுல் முடியவில்லை. அன்றிரவு என் கணவர், "சித்தி இறந்துவிட்டாள்; சிற்றப்பா தனியாக மேல் மாடிக்குப் போய்விட்டார்; தம்மிடம் யாருமே வரவேண்டாமென்று சொல்லிப் போனுர்" என்ருர்.

அன்று இரவு முழுவதும் அவர் மாடியிலேயே குறுக்கும் நெடுக்கும் உலாவிக் கொண்டிருந்ததாகச் சொன்னுர்கள். கவியின் பிதா மகரிஷி தேவேந்திர நாத் டாகுர் அந்த ஸமயம் ஜீவித்திருந்தார். தம் குமாரருக்கு ஏற்பட்ட பெருந்துயரைக் கேட்டதும் அவர், "ரவிக்காக நான் வருத்தப் படவில்லை. அவன் எழுதுவதில் கவனம் செலுத்தி விடுவான். அவனுடைய குழந்தைகளைப் பற்றித்தான் கவலை எனக்கு" என்ருர். பாக்கியவதியான கவியின் மனைவி மிருணுளினிதேவி மாமனுர், கணவர், பெண், பிள்ளை, மாப்பிள்ளை எல்லோரும் பச்சென்று இருக்கும் போதே நீங்கிவிட்டாள் உலகினின்று. ஆனுல் கவியின் சம்சாரம் முறிந்துவிட்டது. அதுமுதல் சிதைவுற்ற தம் குடும்பத் தவருடன் அவர் வாழ்க்கையை ஒருவிதமாக நடத்திவந்தார்.

இதைப்போல் எங்கள் பெரிய குடும்பத்தில் நிகழ்ந்த எவ்வளவோ துன்பங்களுக்கிடையே நிமிர்ந்து நின்று, அவர் விசுவபாரதியின் மகத்தான இயக்கத்தில் உயர்வான ஓர் இல்லறத்தைக் கண்டார்.

கடிதங்கள்

(முதல் பாகம்)

ரவீந்திரநாத் டாகுர்

— மனைவிக்கு —

முன்னுரை

ரவீந்திரநாதர் தம் நீண்ட ஆயுட்காலத்தில், பல தசைகளில், கணக்கற்ற கடிதங்கள் வரைந்துள்ளார். அவர் எழுதியவற்றுள் பெரும்பான்மை - பிரதான மானவை - கடிதங்களே. கவி தம் கற்பனையில் நிருமித்த மாளிகையின் நுட்பமெல்லாம் இந்தக் கடிதத்தினுள் புதைந்து கிடக்கின்றன. ரவீந்திர ருடைய ஜீவியம் எழுதுவதற்கு வேண்டிய பல உபகரணங்களும் இக்கடிதங்களில் இங்கும் அங்கும் சிதறிக் கிடக்கின்றன. இதுவரை, புத்தக உருவில் தொகுத்து வெளியாகியிருக்கும் கடிதங்களைவிடப் பத்திரிகையிலும் தனிப்பட்டவர்களிடமும் இருப்ப வைகளே பெரும்பான்மையானவை.

விசுவபாரதி பிரசுராலயத்தார் இந்தமாதிரி சிதறுண்டு துண்டு துண்டாக இருக்கும் கடிதங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக் 'கடிதங்கள்' (சிடிபத்ர) என்ற தலைப்பில் வரிசையாகப் புத்தக உருவில் வெளியிடத் தீர்மானித்துள்ளனர். முன்னே, கவியரசரது ஜீவிய தசையில், 'துண்டுக் கடிதங்கள்' (சின்னபத்ர), 'பானுஸிம்ஹரின் கடிதக்கோவை' (பானுஸிம்ஹோர் பத்ராவளி), 'வழியும் வரப்பும்' (பத ஓ பதப்ராந்தே) என மூன்று பாகங்களாக

அவரது மேற்பார்வையிலேயே கடிதத் தொகுதிகள் வெளியாயின. இவற்றில் வெளிவந்த கடிதங்களில் பல வேறு இடங்களில் தாமே மாற்றியும் நீக்கியும் திருத்தம் செய்துள்ளார்: அவற்றை எழுதியவருக்குத் தானே எப்போதும் அந்த உரிமை உண்டு? ஆகவே, இப்போது 'கடிதங்கள்' என்ற தலைப்பில் வெளியிட உத்தேசித்திருக்கும் ஒவ்வொரு தொகுதியிலும் அந்தரங்கமான விஷயங்களையும், ஸம்பந்தமில்லா விஷயங்களையும் தவிர மற்றவைகளை நீக்கவோ திருத்தவோ செய்யும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நீக்கிய அம்சம் இதுவென்று தெரிய வழக்கம்போல்...என்ற குறியிட்டு வெளியிடுவோம். அவரது மூலக் கடிதத்தில் உள்ளபடியே - சிறிய குறி ஏதேனும் இருந்தாலும் அதைக்கூட விடாமல் அப்படியே இதிலும் வெளியிட முயன்றுள்ளோம். தனிப்பட்டவர்களுக்கு எழுதியவை அதிகமாக இருந்தால், கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதிலிருந்தோ அநுமானத்தினால் அறிந்தோ அவை காலக்கிரமப்படி வெளியிடப்படும்.

இம் முதல்பாகத்தில் கவி தம் ஸஹதர்மிணி மிருணாளினி தேவிக்கு எழுதிய முப்பத்தாறு கடிதங்கள் பிரசுரமாகியுள்ளன. பத்தினி இறந்தபின் (எ வ அக்ரஹாயண மீ கங௦கூ) இக்கடிதங்களைக் கவி கவனமாக எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார், இத்தனை நாள். இவற்றைத் தவிர அவர் தம் மனைவிக்கு எழுதிய வேறு எந்தக் கடிதமும் கிடைக்கவில்லை; அவற்றைப் பத்திரப் படுத்திவைக்கவில்லை போலும்!

மிருணாளினி தேவி எழுதிய மூன்று கடிதங்கள் எங்களுக்குக் கிடைத்துள்ளன. அவற்றையும் இதன் இறுதியில் சேர்த்திருக்கிறோம். கவியரசருக்கே அந்த அம்மாள் எழுதிய கடிதம் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

ஸ்ரீமதி இந்திரா தேவி* இத்தொகுதியைப் பதிப்பிக்கும்போது விசுவபாரதி பிரசுராலயத்தாருக்கு விசேஷத் துணை புரிந்தார். இனி வரப்போகும் தொகுதிகளைப் பதிப்பிக்கும் விஷயத்திலும் அவர் சகாயம் புரிவார் என்று நம்புகிறோம். அவருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

ஸ்ரீநிகேதனம். சாருசந்திர பட்டாசாரியர்.
உரு உ வைசாக மீ கநசக.

அன்பில் மூழ்கிநாம் அந்நாள் இருந்ததன்
சின்னம் போன்ற சிற்சில பழைய
துண்டுக் கடிதம் தொகுத்துநீ வைத்ததைக்
கண்டெடுத் தனன்யான் கால வெள்ளம்
தன்னில் மிதந்து சென்றன எண்ணில்
சந்திர சூரிய தாரா கணங்கள்
இவற்றிற் கஞ்சிஅவ் வற்பப் பொருளை
'எவர்க்கும் இதனை எடுக்கும் உரிமை
இல்லவே இல்லை; என'தென் றுளித்தாய்!
இவ்வுல கினிலே இனிமேல் யார்உளர்
அவற்றிற் கடைக்கலம் அருளும் தகையார்?
அவற்றின் மீதுநீ அன்பு செலுத்தினை
உன்னிடம் அதுபோல் அன்புகொண் டுருகுவார்
இன்றொரு வருமே இலையோ அந்தோ!

—நினைவு (ஸ்மரண்)

* கவியின் சகோதரர் புதல்வி.

“தூரத்தில் இருக்கும்போது அதிக இன்பம் அளிப்பது கடிதந்தான். நேரில் பார்த்து அளவளாவுவதைவிட அதில் ஒரு விசேஷம் இருக்கிறது. அது அற்பமானதுதான்; இருந் தாலும் அதற்குரிய மதிப்பு என்னவோ அதிகம். அதனால் இரண்டோரு விஷயத்தை நாம் அறிந்துகோள்கிறோம். அதில் இருப்பதையெல்லாம் படித்துத் தீர்த்துவிடுகிறோம். ஆனால் நேரில் பார்க்கும்போது பேச்சுவாக்கில் எத்தனையோ வார்த்தைகள் காற்றோடு போய்விடுகின்றன. நேரில் பார்த்துப் பேசிக்கோள்வதில் ஓர் இன்பம் அடைகிறோமே யோழிய என்ன பேசினோம் என்று மறுபடியும் அலசிப் பார்ப்பதில்லை. ஒருவரையோருவர் நேரில் கண்டு அறிமுகமாவதைவிடக் கடிதமூலம் பரிசயம் கோள்வதில்தான் புதுமை இருக்கிறது. அதில் ஒரு மறைவான - ஆழ்ந்த - விசேஷமான - இன்பம் உண்டு. உனக்குக்கூட அப்படித்தானே படுகிறது?”

1

ஓம்

குட்டி மாட்டுப் பெண்ணே!

உன்னை வைதால்தான் என் கடுதாசிக்குப் பதில் எழுதுவாய்போல் இருக்கிறது! நல்ல மனுஷ்யர்களுக்குக் காலம் இல்லை இது! கெஞ்சினால் மிஞ்சுகிறது; மிஞ்சினால் கெஞ்சுகிறது! இதுதான் வங்காளியின் குணம் என்கிறது! சீச்சீ! குழந்தைகளைக்கூட இப்படியே வங்காளிகளாக வளர்த்து விட்டாயோ இல்லையோ! உம். இன்று உன் கடிதம் கிடைத்தது. நாலு பேர் வந்து விட்டார்கள் அப்போது. அவர்களோடு பேசிக்கொண் டிருந்தேன், இத்தனை நாழிகை. கடிதத்தைப் பிரிக்கவும் முடியவில்லை; எழுந்து போகவும் முடியவில்லை.—சில வக்கீல்களும் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயருந்தான். என் புஸ்தகத்தைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும்படி ஏற்பாடு பண்ணிவிட்டேன்; ஆனால் புஸ்தகந்தான் கிடைக்கவில்லை இன்னும்! இன்றைக்குக்கூட வந்து சேரக் காணோமே; ஏன்? உம்; நல்ல சங்கடத்தில் மாட்டி விட்டாய்! என்னிடம் இருந்த 'ராஜரிஷி'யையெல்லாம் இன்ஸ்பெக்டர் கையில் கொடுத்து விட்டேன்—'ஞ அக்கா கதைகளைக்கூட. மறுபடியும் இன்ஸ்பெக்டருக்குத் தொண்டை கட்டிக்கொண்டது; 'ஹோமியோபதி' மருந்து கொடுத்திருக்கிறேன். இதனால் எவ்வளவோ அநுகூலம் ஏற்படலாம்.

தொண்டை சரியாகாவிட்டாலும் மனசுக்காவது திருப்தி ஏற்படும். வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு ஸம்பாதிக்க என்ன என்ன உபாய மெல்லாம் பண்ணுகிறேன், பார்த்தாயா ? காலையில் எழுந்ததும் புஸ்தகம் எழுத உட்கார்ந்துவிடுகிறேன். அதனுல் எவ்வளவு வருமானம் உண்டு ? யோசித்துப் பார் ! அச்சிட்ட செலவு கைக்குக் கிட்டாவிட்டாலும் தோராயமாக இருபது இருபத்தைந்து ரூபாயாவது எடுக்கலாம். இப்படி ஏறிக்கொண்டே போனுல் ஆஸ்தி குவிந்து விடுகிறது ! வெறுமே பணத்தைச் செலவழிக்கத்தான் தெரியும் உங்களுக்கு ! ஒரு பைசா கொண்டுவந்து வீட்டில் சேர்க்க வகை உண்டா ? சாமான்களைப் பிராஹிம்புருக்கு அனுப்பி விட்டதாக எழுதியிருக்கிருன் குஞ்ஜன். நாளைக்கு இங்கே வந்து சேருமோ என்னவோ ! அடுத்த நாளே துரை வந்து விடுவார் ! ஆஹா ! எப்பேர்ப் பட்ட சுபதினம் ! என்ன ஆனந்தம் ! எங்கள் துரை வருவார் ; துரைசானியம்மாளும் அவரோடு வருவாள் ! என் அறைக்கு வந்து சாப்பிட்டுப்போவார். இல்லா விட்டால், 'பாபு ! நேரம் இல்லை' என்பார். அப்படி யானுல் என் பாடு அதிர்ஷ்டந்தான் ! 'அவருக்கு அவகாசமே இராது போகட்டுமே' என்றுதான் பிரார்த்திக்கிறேன். ஆனுல் திண்டியின் பெயரைக் கேட்டு விட்டால் அப்படிச் சொல்வார் என்று தோன்றவில்லை. பேலி, குழந்தை இவர்களைப் பார்க்க வேண்டுமென்று மனசு அடித்துக் கொள்கிறது. ஒவ்வொரு தடவை, பேலிக்கு என் பெயரைச் சொல்லி இரண்டு 'அட்டு' (லட்டு) தின்னக் கொடு. நான் இருந்தால்தான், பாவம், அவளுக்குத் தின்ன நாலுவிதப் பக்ஷணமும் கிடைக்கும். குழந்தைக்கும் எந்த விதமாவது என்னைப் பற்றிக் கவனமூட்டிக் கொண்டே இரு. கம்பளி நூலில் போட்ட என் படத்தைப் பார்த்து அது அடையாளம் புரிந்து

கொள்கிறது என்கிருயே, அதைக் கேட்டு அப்படி ஒன்றும் பிரமாதமாக ஸந்தோஷம் உண்டாகவில்லே. எனக்கு......

[ஸாஹாஜாத்புர்,
ஜனவரி, 1890]

ஸ்ரீ ரவிந்திரநாத் டாகுர்.

பேலி—கவியின் மூத்த பெண் மாதுரீலதா; பேலா என்று அழைப்பார்கள். குழந்தை—மூத்த புதல்வர் ரதீந்திரநாத்.

இக் கடிதத்தில் குறிப்பிட்ட ஸம்பவம் 'துண்டுக் கடித' (சின்ன பத்ர)த்தில் வெளியாகிய 1890 - ஜனவரிமீ எழுதிய லிகிதத்திலே விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பல கடிதங்களில் — முக்கியமாக இத்தொகுதியில் அடங்கிய கடிதம் எதிலும் தேதியே காணவில்லே. ஆகவே, கடிதப் போக்கிலிருந்து அதை ஊகித்தறிவதைத் தவிர வேறு வழியில்லே. இவ்வாறு அநுமானித்த தேதிதான் இங்கே [ ] என்பதனுள் தரப்பட்டுள்ளது.

2

ஓம்

சின்ன மாட்டுப் பெண்ணே !

இன்று நாங்கள் ஏடென் என்னும் இடத்துக்கு வந்து சேருவோம். அதிக நாள் கழித்து மறுபடியும் கரையைப் பார்க்கலாம். ஆனல் அங்கே இறங்க முடியாது ; அங்கே யிருந்து ஏதாவது தொத்து வியாதியைக் கொண்டுவந்து விட்டோமானல் என்ன பண்ணுகிறது ? அதனலேதான் ஏடெனுக்குப் போய்ச் சேர்ந்ததும் வேருெரு கப்பலில் மாற வேண்டும்; அதில் ஒரு பெரிய தொந்தரவு இருக்கிறது. இந்தத் தடவை ஸமுத்திரத்தில் நான் ஜ்வரத்தில் படுத்துக்கொண்டு அவதிப்பட்டது உண்டே, அப்பாடா, என்னவென்று சொல்வேன் ! - மூன்று

நாட்களாக எதை வாயில் போட்டுக்கொண்டாலும்' சரி, வாந்திதான்! தலையைச் சுழற்றி 'ஓக்காளம் வருகிறது. படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேயில்லை. 'எப்படித்தான் பிழைத்திருந்தோம்' என்று எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது! ஞாயிற்றுக்கிழமை இரவு என் உடம்பு இங்கே இருந்ததே தவிர உயி ரெல்லாம் ஜோடாஸாங்கோவிலேயே இருந்தது. ஒரு பெரிய கட்டிலில், ஒரு பக்கம் நீ படுத்துக்கொண் டிருக்கிறாய்; உன் பக்கத்திலேயே பேலியும் குழந்தையும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் உன்னோடு சற்று வேடிக்கையாகப் பேசி, 'குட்டி மாட்டுப் பெண்ணே! இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை, கவனம் இருக்கிறதா? அதுதான் உன்னைக் காண உடலை அங்கே விட்டு விட்டு வந்திருக் கிறேன்' என்று நான் சொல்வதுபோல் கனாக் கண்டேன். சீமையிலிருந்து திரும்பி வந்ததும் 'அந்தமாதிரி நடந்ததா?' என்று கேட்கவேண்டும் என்று இருக்கிறேன். அப்புறம் பேலி, குழந்தை இரண்டு பேரையும் கொஞ்சிவிட்டுத் திரும்பிவந்து விட்டேன். நான் இப்படி ஜ்வரத்தோடு படுத்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் யாவரும் என்னைப் பற்றி நினைத்துக்கொண் டிருந்தீர்களா என்ன? திரும்பி உங்களண்டை வந்துவிடவேணும் என்று மனசு அலை பாய்கிறது. 'என்னதான் சொல்லு. வீட்டைப்போல் ஆகாது எந்த இடமும்'— இப்போ தெல்லாம் ஸதா இந்த யோசனைதான். இந்தத் தடவை அகத்துக்குத் திரும்பி வந்தேனானால் அதை விட்டு எங்கேயும் நகரப்போவதில்லை. ஒரு வாரம் ஆயிற்று, குளித்து. இன்றைக்குத்தான் முதல் தடவையாக ஸ்நாநம் பண்ணினேன். பண்ணியும் சுகம் இல்லை. உப்பு ஜலமோ இல்லையோ, ஸமுத் திரத்தில்; அதில் ஸ்நாநம் செய்யவே உடம்பெல்லாம் 'பிசுக்கு, பிசுக்கு' என்று ஒட்டிக்கொள்கிறது

தலைமயிரும் என்னவோ விகாரமாகச் சிட்டு ஏறிச் சிக்குப் படிந்திருக்கிறது—உடம்பு மாதிரியே! 'எத்தனை நாள்தான் ஆகட்டும்; கப்பலைவிட்டு இறங்கினுலொழிய ஸ்நாநம் பண்ணுவதில்லை' என்று தீர்மானித்து விட்டேன். ஐரோப்பா போய்ச் சேர இன்னும் சில வாரம் ஆகும். அங்கே போய்ச் சேர்ந்து கரையில் காலை வைத்தேனுனல் என்னைப் பாட்டில் போடும். இப்போதெல்லாம், இரவாயிருந்தாலும் சரி, பகலாயிருந்தாலும் சரி ஸமுத்திரத்தைப்பார்க்கவே பிடிக்கிறதில்லை. ஸமுத்திரத்தில் இப்போது கொந்தளிப்பு அடங்கித்தான் இருக்கிறது; கப்பல் அப்படி ஆடவில்லை. தேக அசௌக்கியமும் இல்லை. நாள் முழுவதும், கப்பலின் மேல்தட்டில் ஒரு பெரிய கூர்ச்சியில் சாய்ந்துகொண்டு லோகேனுடன் வம்பளந்துகொண்டாவது இருக்கிறேன்; இல்லாவிட்டால் ஒரு யோசனையும் செய்யாமல், புஸ்தகங்கூடப் படிக்காமல், சும்மாவாவது கிடக்கிறேன். இரவு படுக்கையைப் போட்டுக்கொண்டு தூங்குகிறதெல்லாங்கூட அங்கேயேதான். அவசியமாயிருந்தாலொழிய அறையில் நுழைவதில்லை. உள்ளே போனுலே உடம்பை என்னவோ பண்ணுகிறது! நேற்று இரவு மறுபடியும் திடுமென்று அடைமழை பிடித்துக்கொண்டு விட்டது. சாரல் அடிக்காத பக்கமாகப் பார்த்துப் படுக்கையை இழுத்துப் போட்டுக் கொண்டேன். அப்போதே பிடித்து மழை விடாமல் பெய்துகொண்டிருக்கிறது. நேற்று ஒரே வெயில்! எங்கள் கப்பலில் இரண்டு மூன்று பெண்குழந்தைகள் - குட்டிகள் – இருக்கிருர்கள். அம்மா செத்துப் போய்விட்டாளாம், பாவம்! அப்பாவோடே சீமைக்குப் போகிருர்கள். அந்தக் குழந்தைகளைப் பார்த்தால் எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. அப்பன் தன் கிட்டவே அவர்களை ஸதா வைத்துக்கொண்டு திரிகிருன்.

ஒழுங்காகத் துணி மணி உடுத்திக் குழந்தைகளை வைத்துக்கொள்ளத் தெரியவில்லை அவனுக்கு; என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என ஒன்றுமே புரியவில்லை. குழந்தைகள் மழையிலேயே அல்லாடுகிறார்கள். அப்பன் 'கூடாது' என்று தடுத்தால் "மழையிலே திரியணும்னு ஆசையாயிருக்கிறதே!" என்கிறார்கள். அப்பன் சற்றே சிரிக்கிறான்—குழந்தைகள் குதூகலமாக விளையாடுவதைப் பார்த்து. அவர்களைத் தடை செய்ய மனசு வரவில்லைபோல் இருக்கிறது! அவர்களைப் பார்த்தால் நம் குழந்தைகளின் கவனம் வருகிறது எனக்கு. நேற்று இரவு பேலி ஸ்டீமரில் வந்திருப்பதுபோல் கனாக் கண்டேன். ஆஹா! அவள் எப்படி இருந்தாள் தெரியுமோ! அவள் அழகைச் சொல்லி முடியாது! ஊருக்குத் திரும்பி வரும்போது குழந்தைகளுக்கு எந்தமாதிரி ஸாமான் வாங்கிவரவேண்டுமோ சொல்லு. இந்தக் கடிதம் கிடைத்தவுடனே பதில் எழுதினால் சரி; 'நான் இங்கிலாந்தில் இருந்தாலும் உன்னிடமிருந்து கடுதாசு வரும்' என்று எதிர்பார்க்கலாம். ஞாபகம் இருக்கட்டும்: செவ்வாய்க்கிழமை சீமைக்குத் தபால் அனுப்புகிற தினம். என்மாதிரியே செல்லங் கொடுத்துக் குழந்தைகளை வளர்த்து வா—...

"சியாம்", வெள்ளிக்கிழமை,

[29 ஆகஸ்டு, 1890] ஸ்ரீ ரவீந்திரநாத் டாகுர்

ஜோடாஸாங்கோ: கவியின் கல்கத்தா மாளிகை; இணைப்பாலம் என்று பொருள்படும்.

லோகேன்: தாரக் பாலித் என்பவரின் புத்திரர் லோகேந்திரநாத், ஐ. ஸி. எஸ். 'ரவீந்திர ரசனாவளி' முதல் பாகத்திலுள்ள 'ஐரோப்பா யாத்திரிகன் டயரி'யைப் பார்க்க.

3

ஓம்

ரூட்டி எஜமானியம்மா!

முந்தாநாள் உனக்கு ஒரு கடிதம் போட்டிருக்கிறேன். இன்றும் ஒன்று எழுதுகிறேன். இந்த இரண்டு கடுதாசுயும் ஒரே நாளில் கிடைக்கலாம். அதனுல் என்ன வந்தது? நாளைக்குள் வந்து சேருவோம் கரைக்கு. அதனுல்தான் இன்றைக்கே எழுதி வைத்து விடுகிறேன். மறுபடியும் இங்கிலாந்து போய்ச் சேர்ந்த பிற்பாடுதான் உங்களுக்கெல்லாம் எழுத அவகாசம் ஏற்படும். இறங்கி ஏறுகிற கலவரத்தில் அடுத்த வாரம் கடிதம் வருவதற்குத் தவறினுல், மனசில் ஒன்றும் வைத்துக் கொள்ளாதே! கப்பலில் கடுதாசு எழுதிவிடலாம்; அது பிரமாதமல்ல. கரையில் வந்து சேர்ந்ததும் ஊர் சுற்ற வேண்டியிருக்கும்; எந்த ஸமயத்தில் எங்கே இருப்போம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இரண்டொரு கடுதாசு தவறியும் விடலாம். இன்னும் கேட்டால், முந்தாநாளே நாங்கள் ஐரோப்பாவை அடைந்து விட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும். அடிக்கடி தூரத்தில் ஐரோப்பாக் கரை தெரிகிறது. எங்கள் கப்பல் இப்போது, வலது பக்கம் கிரீஸுக்கும் இடது பக்கம் ஏதோ ஒரு தீவுக்கும் நடுவில் போய்க்கொண் டிருக்கிறது. தீவு வெகு ஸமீபத்தில் தெரிகிறது: சில குன்றுகள்; அவைகளின் நடு நடுவே வீடுகள்; ஓர் இடத்தில் மிகவும் பெரிய ஊர் ஒன்று. தூரதரிசினி மூலம் அதிலுள்ள வீடுகளையெல்லாம் நன்ருகப் பார்க்க முடிகிறது. ஸமுத்திரக் கரையிலேயே நீலக்குன்றின் நடுவில் பளிச்சென்று வெளுப்பாகத் தெரிகிறது அந்த ஊர்! உனக்குக்கூட ஆசையாக இல்லையா, பார்க்கவேண்டுமென்று? சின்னி! நீ கூட ஒருநாள் இந்தப் பக்கம்

வரவேண்டி யிருக்கும், தெரியுமா? அப்படி நினைக்கும் போதே உனக்குக் குதூகலமா யிருக்கிறதோ இல்லையோ? கனவில்கூட எண்ணியிராத அற்புதங்களையெல்லாம் இங்கே பார்க்கலாம். இரண்டு நாளாகச் சற்றுக் குளிராகத்தான் இருக்கிறது — அப்படி ஒன்றும் அதிகம் இல்லை — இராவிட்டாலும் 'டெக்'கில் உட்கார்ந்திருக்கையில் காற்று ஜோராக வீசும்போது கொஞ்சம் ஒடுக்கத்தான் ஒடுக்குகிறது. கம்பளியையேதான் போட்டுக்கொண் டிருக்கிறேன். இப்போதெல்லாம் இராவேளைகளில் 'டெக்'கில் படுப்பதில்லை. மேல்தட்டில் படுத்துக்கொண்டதால் லோகேனின் எயிறெல்லாம் கொழுத்துப் போய் மிகவும் அவதிப்பட்டான் அவன். இப்போது இங்கே குளிர் அப்படி ஒன்றும் அதிகமாக இல்லை; தார்ஜிலிங்கை விட மிகவும் குறைவுதான். இங்கிருந்து திரும்பும்போது சற்று ஒடுக்கித் தள்ளும். அனுவசியமான துணிமணிகளையும் அந்த மெல்லிய திண்டையும் நடுமதனியிடம் கொடுத்து அனுப்பி யிருக்கிறேன், உனக்கு. அதெல்லாம் கிடைத்ததா? கிடைத்திராத பக்ஷத்தில் கேட்டு வாங்கிக்கொள். லக்ஷ்மி கையில் சிக்கினுல் எல்லாம் நடுமதனி பீரோவில் நுழைந்துவிடும். மதனி மூலமே பேலியம்மாவுக்கு ஒரு மேலாடையும் பாவாடையுங் கூட வாங்கி அனுப்பியிருக்கிறேன். — இத்தனை நாளைக்கு வந்து சேர்ந்திருக்கலாம் நிச்சயமாக. செக்கச் செவேல் என்று இருக்கும் மேலாடை— பேலிக்குப் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன்—பாவாடையும் மிகவும் புதுத் தினுசு — இல்லையா? மதனியும் பேலிக்குக் கொடுக்கவேணுமென்று மேலாடை வாங்கினுள், நீலத்திலும் வெளுப்பிலும். அதெல்லாங்கூடப் பேலி ராஜாத்திக்குப் பிடித்திருக்கும். விஷயம் புரிகிறதோ இல்லையோ? புது மேலாடையைப் பார்த்ததும் ஸந்தோஷம் அண்டுகொள்ள முடியாது,

அவளுக்கு. என்னைப்பற்றி ஞாபகம் இருக்கிறதா அவளுக்கு? திரும்பி வரும்போது குழந்தை எப்படி யெல்லாம் மாறி இருப்பானோ, யார் கண்டார்கள்? அதற்குள்ளே இரண்டு மூன்று வார்த்தையாவது பேசக் கற்றுக்கொண்டு விடமாட்டானா? என்னை அடையாளம் கண்டு கொள்ளவே முடியாது அவனால்; அது மட்டும் நிச்சயம். ஒருவேளை பெரிய துரையாகவும் வந்து சேரலாம் நான்; உங்களுக்கே கூட அடையாளம் புரிந்துகொள்ள முடியாது போகலாம்! விரலில் வெட்டுக் காயம் பட்டதே, அது ஆறிப் போய்விட்டது; வடுமட்டும் இரண்டு இடத்திலே அப்படியே ஆழமாகத் தெரிகிறது— சரியான காயம்! வெகு நாளுக்கப்புறம் நேற்றும் முந்தாநாளுமே குளித்தேன். நாளைக்கு மறுநாள் பாரிஸ் போய்ச் சேர்ந்த பிறகுதான் மறுபடியும் அதைப்பற்றி யோசனை செய்யவேண்டும். அங்கே 'டர்க்கிஷ் பாத்' என்று ஒருவித ஸ்நான முறை உண்டு; அப்படி ஸ்நானம் பண்ணினால் உடம்பு மிகவும் சுத்தமாக இருக்கும். 'ஐரோப்பா யாத்திரிகன் கடித'த்தில் நீ அதைப்பற்றிப் படித்திருப்பாய். அவகாசம் மட்டும் இருந்தால் அங்கே போய் ஸ்நானம் பண்ணுவதாக எண்ணியிருக்கிறேன். இப்போது உடம்புக்கு ஒன்றுமில்லை; நன்றாகத்தான் இருக்கிறேன். கப்பலில் மூன்று வேளையும் கிடைக்கிற திண்டியில் ஆள் சற்றுப் பருத்துத்தான் போய் விட்டேன். நான் திரும்பி வரும்போது நீயும் உடம்பெல்லாம் சொஸ்தமாகி வாட்டசாட்டமாக இருக்கவேண்டும். தெரியுமா, சின்ன மாட்டுப் பெண்ணே! இப்போதுதான் வண்டி உன் கிட்டவே இருக்கிறதே!— தினந்தோறும் தவறாமல் வெளியே உலாவி விட்டு வா; வெறுமே யாருக்கும் இரவல் கொடுக்காதே வண்டியை. நேற்று இரவு எங்கள் கப்பலின் மேல்தட்டில் 'ஸ்டேஜ்'

(நாடகமேடை) அமைத்து ஏதோ நாட்டியம் ஆடினார்கள். பல தமாஷ்கள் எல்லாம் செய்து காட்டினார்கள். ஒருத்தி வெகு ஜோராக நடனம் ஆடினாள். தூங்கப் போகும்போது இரவு வெகு நேரமாகிவிட்டது. இன்று இரவோடு தீர்ந்தது கப்பல்வாசம்.

[6 ஸெப்டெம்பர், 1890] ரவி

நடுமதனி: கவியின் இரண்டாம் தமையனார் ஸத்தியேந்திரநாதருடைய மனைவி ஞானதாநந்தினி தேவி.

4

ஓம்

ஸெப்டெம்பர் 9
செவ்வாய்க்கிழமை
1890,
பாரிஸ்.

சின்ன மாட்டுப்பெண்ணே!

நாங்கள் 'இஃபெல் டவர்' என்னும் மிகவும் உயரமான இரும்பு ஸ்தம்பத்தின்மேல் ஏறினோம். அங்கேயிருந்து உனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். இன்று காலைதான் பாரிஸுக்கு வந்து சேர்ந்தேன். லண்டனுக்குப் போனதும் உனக்கு விவரமாகக் கடிதம் எழுதுவேன். இன்று இவ்வளவுதான். குழந்தைகளுக்கு என் அன்பு.

மிஸஸ் ஆர். டாகுருக்கு,
6, துவாரகநாத் டாகுர் சந்து.
ஜோடாஸாங்கோ
கல்கத்தா. (இந்தியா)

5

ஓம்

குட்டி மாட்டுப் பெண்ணே!

காளிக்கிராமம் வந்து சேர்ந்து இன்றைக்கு மூன்று நாள் ஆகின்றன. பல தினுசான இடங்களைத் தாண்டி வந்தோம். முதலில் பெரிய ஆறு ஒன்று, அப்புறம் ஒரு சிற்ருறு. இரண்டு பக்கமும் மரஞ் செடிகள்; பார்க்கப் பார்க்க மிக அழகாக இருந்தன. அப்புறம் ஆறு வரவரக் குறுகிக்கொண்டே வந்து கால்வாயைப்போல் ஆகிவிட்டது; இரண்டு பக்கக் கரையும் உயர்ந்து மிகவும் நெருக்கமாக இருந்தது. அப்புறம் ஓர் இடத்தில் ஜலம் பயங்கர வேகத்துடன் பாய்ந்து வந்தது. இருபது இருபத்தைந்துபேர் எங்கள் படகைப் பிடித்து இழுத்துக் கொண்டே போனார்கள். அங்கே ஒரு பெரிய மடு; சலன் மடு என்கிருர்கள் அதை. ஜலம் மடுவிலிருந்து ஆற்றில் வந்து விழுகிறது. அப்புறம் படகை இழுத்துக்கொண்டே வெகு சிரமப்பட்டு ஆபத்தெல்லாம் கடந்து மடுவில் வந்து சேர்ந்தோம். நாலு பக்கமும் பளபளவென்று ஜலம். நடுநடுவே புதரும் புல்லும் படர்ந்த மேடு—ஒரு பெரிய மைதானத்தில் மழை ஜலம் தேங்கினுல் எப்படி இருக்கும்; அந்த மாதிரியே இருந்தது. அடிக்கடி படகு மணலில் சிக்கிக்கொண்டுவிடும். சுமார் ஒரு மணி அல்லது ஒன்றரை மணிநேரம் அதோடு மல்லுக் கொடுத்தால் தான் ஜலத்திலே மிதக்கும். ஒரே கொசு! மொத்தத்தில், இந்த மடுவைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. மேலே போகப் போகச் சிற்ருறும் மடுவுந்தான். இப்படியே ஒருவிதமாக வந்து சேர்ந்துவிட்டோம். திரும்பவும் இந்த வழியாகத் தான் பிராஹிம்புருக்குப் போக வேண்டும்; என்னவோ, எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவேயில்லை.

இந்தப் பக்கத்து ஆறுகளில் நீரோட்டமே இல்லை. பாசிதான் மிதக்கிறது. நடுவிலே நடுவிலே புதர் அடர்ந்து கிடக்கிறது. நாட்டுப்புறத்துக் குட்டைகளில் வீசுமே, அதுபோல் ஒரு துர்க்கந்தம் எங்கும் வீசுகிறது. அதோடு இரவு கொசு உபத்திரவம் வேறு. பார்க்கிறேன்; அப்படி மிகவும் ஸகிக்கமுடியாது போய்விட்டால் நேராகக் கல்கத்தாவுக்கு ஓடிவந்து விடுகிறேன்! என் சர்க்கரைக்குட்டி பேலு ராஜாத்தி எழுதின கடுதாசு வந்து சேர்ந்தது. அப்போதே அகத்துக்குப் புறப்பட்டு வந்துவிட மாட்டோமா என்று இருந்தது. பாவம், என்னைப் பார்க்க மனசு எப்படி அடித்துக் கொள்கிறதோ, அவளுக்கு! — அவளே ஒரு மாதிரி—ஒன்றும் வராதிருக்க வேண்டுமே அவளுக்கு! அவளுக்கு நிறைய 'அட்டு'ம் (லட்டு) 'ஜாமு'ம் (Jam) கொண்டுவருவேன் என்று சொல்லி வை. நேற்று இரவு குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு தாலாட்டினதுபோல் கனக் கண்டேன்; ஆனந்தம் அண்டு கொள்ள வில்லை எனக்கு! அவன் பேச ஆரம்பித்திருக் கிருனா இப்போது? அவன் வயசில் பேலா பொழிந்து தள்ளிவிட்டாள்; இல்லையா? எனக்கு அப்படி என்றுதான் ஞாபகம். அங்கே குளிர் எப்படி? இங்கே ஓடுக்கித் தள்ளுகிறது என்னை. நேற்று இரவு மட்டும் இறுக்கமாய்த்தான் இருந்தது. நெருக்கமான ஓர் இடத்தில் படகை நிறுத்தி யிருந்தார்கள். அதோடு படுதாவும் போட்டு விடவே இறுக்கம் தாளாமல் எழுந்துவிட்டேன். போதாக் குறைக்குப் பக்கத்திலேயே சிலபேர் அந்த நள்ளிரவில் காது புளிக்கும்படி, "எத்தனை நேரம் நீ உறங்கிடுவாய்? எழுந்திரடி என் இன் னுயிரே!" என்று பாட ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் 'இன்னுயிர்த் துணைவி'கள் மட்டும் பக்கத்திலே இருந்திருந்தால் குடிசை அதிர்ந்து

போயிருக்கும்! படகோட்டிகள் அவர்களை அதட்டிப் பாட்டை நிறுத்திவிட்டார்கள். ஆனால், "எழுந் திரடி என் இன்னுயிரே!" என்ற அந்த அடிமட்டும் திரும்பத் திரும்ப என் மூளையில் வட்டமிட்டுக் கொண்டே இருந்தது; தலையை என்னவோ பண்ணிற்று. கடைசியில், படுதாவைத் தூக்கி ஜன்னலைத் திறந்துவிட்டேன். இரவு பின் நேரத்தில் கொஞ்சம் தூக்கம் வந்தது; அதனால்தான் இன்றைக்கெல்லாம் கண்ணை உறக்குகிறது............ கல்கத்தாவுக்கு வந்திருக்கிறானே உன் தம்பி, எப்படி இருக்கிறான் அவன்? அவனைப்படிக்கவைக்க ஏற்பாடு ஏதாவது பண்ணினாயா? மாசச் செலவுக்குப் பணம் கிடைத்ததா? இன்னும் ஒரு பதினைந்துநாள் கழித்து இங்கிருந்து புறப்படலாமென்று பார்க்கிறேன் — இப்போதே ஒன்றையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

[காளிக்கிராமம்,
டிஸம்பர், 1890] ஸ்ரீ ரவீந்திரநாத் டாகுர்

பிராஹிம்புர், ஸாஹாஜாத்புர், காளிக்கிராமம் இந்த மூன்று ஜமீன்களையும் பார்த்துவரக் கவி ஜலமார்க்கமாக அடிக்கடி போய்வருவது வழக்கம். பிராஹிம்புர் பர்க்கனாக் கச்சேரி சிலாயிதஹ் என்னும் இடத்திலும், காளிக்கிராமப் பர்க்கனாக் கச்சேரி பதிஸர் என்ற கிராமத்திலும் நடை பெறும். ஸாஹாஜாத்புர் என்பதும் ஒரு கிராமமே; இதை உத்தேசித்தே அந்தப் பர்க்கனாவுக்கும் அப்பெயர் இடப் பட்டது. அவ்வூர் யமுனையின் கிளையாறு ஒன்றின் கரையில் உள்ளது. பதிஸர் என்பது சலன் மடுவிற்கு ஸமீபத்தில் நாகர நதிக்கரையில் உள்ளது.

௬

ஓம்

சின்னி !

இன்று காலை இந்தப் பிராந்தியத்தில் பிரசித்தி பெற்ற ஒரு ஜோஸ்யன் என்னைக் காண வந்திருந்தான். காலை முழுவதும் எனக்கு எரிச்சல் மூட்டிக்கொண்டே இருந்தான். விஷயத்தைத் தீர யோசித்து வைத்துக்கொண்டு எழுத உட்கார்ந்தேன். வளவளவென்று பேச ஆரம்பித்துவிட்டான்; என்னை எழுத விட்டால்தானே? என் ராசி, லக்னம் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு அவன் என்ன சொன்னான் தெரியுமோ, ஜோஸ்யம்? ஒழுங்காக உடுத்துவேனும்; லக்ஷணமாக இருப்பேனும்; வெளுப்புக் கலந்த மாநிறமாம் நான்; அப்படி அதிகச் சிவப்போடு சேர்த்தி இல்லையாம்.—என்ன ஆச்சரியம்! எப்படித்தான் அறிந்து சொன்னானே? அப்புறம், எனக்குச் சொத்துச் சேர்க்கிற எண்ணம் இருந்தாலும் அது கைகூடாது என்றான். ஏராளமாகச் செலவழிப்பேனும். ஆனாலும் லோபி என்றுதான் பெயரெடுப்பேனும். சுபாவத்திலேயே கொஞ்சம் முன் கோபியாம். (அப்போது என் மூஞ்சி இருந்த விதத்தைப் பார்த்து அப்படிச் சொல்லியிருக்கவேண்டும்.) என் பெண்டாட்டி ரொம்ப நல்லவளாம். என் சகோதரர்களோடு சண்டை போடுவேனும். நான் யாருக்கு உபகாரம் செய்தாலும் அவர்கள் அபகாரமே செய்வார்களாம். அறுபது அறுபத்திரண்டு வயசுக்கு மேல் இருக்க மாட்டேனும். அப்படி ஒருவேளை அந்த வயசைத் தாண்டினாலும் எழுபதுக்குமேல் ஜீவித்திருக்க மாட்டேனும். இதைக் கேட்டதிலிருந்து எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது! இவ்வளவுதான் ஸமாசாரம்; நீ வீணாகத் திகில்படவேண்டாம். குறைந்த பக்ஷம் இன்னும் முப்பது

அல்லது நாற்பது வருஷமாவது என்னோடு வாழலாம்; அதற்குள்ளே என்மேல் வெறுப்புத் தட்டாதிருக்க வேண்டுமே! என் ஜாதகம் மட்டும் கையிலே இருந்திருந்தால் அவனைப் பார்க்கச் சொல்லி யிருப்பேன். அது **பிரிய** பாபுவிடம் இருக்கிறது. இப்போது எனக்கு நல்ல தசையாம்;—"குருதசை!" என்றான். பங்குனிமாசம் ராகுதசை ஆரம்பமாம். நல்லதசை என்றால் என்னவென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

[ஸாஹாஜாத்புர், 1891] **ரவி**

பிரியபாபு: பிரியநாத் ஸேன். 'பிரிய புஷ்பாஞ்ஜலி' என்ற நூலில் 'ஜோஸ்யம் பலித்தது' என்ற கட்டுரையைக் காண்க.

7

ஓம்

சின்னி!

இந்த ஊர் இடைச்சேரியிலே ஒரு வீடு பாக்கி இராமல் சுரண்டி, பேஷான வெண்ணெய் காய்ச்சின நெய் வாங்கி அனுப்பியிருந்தேனே பக்ஷணம் பண்ண; நீ ஒன்றுமே எழுதவில்லையே? ஏன்? உபகாரம் செய்யச் செய்ய நீ நன்றிகெட்டவ ளாகிக்கொண்டே வருகிறாய்! பிரதிமாதம் 15 சேர் நெய் சுலபமாகக் கிடைக்கிறது என்பது உன் எண்ணமா? ஏதோ கல்யாணம் ஆவதற்கு முன்னு லிருந்தே இந்தமாதிரித் தரவேண்டுமென்று நாம் பேசிக்கொண்ட மாதிரிதானே இருக்கிறது? உங்கள் **போலா**வின் அம்மா படுக்கையாகப் படுத்துக்கொண் டிருக்கிறாளோ இல்லையோ; இப்போது நாலு பேருக்கு உபயோகப்படும் அந்த நெய். பேஷ், அதிலும் ஒரு நன்மைதான். நல்ல நெய்யைத் திருடித் தின்றால் ஆள்காரர்களுக்கு ஜுரம் வராமலாவது இருக்கும்! என்னிடமிருந்த மாம்பழம் முக்கால்வாசி தீர்ந்து

விட்டது. இதிலே இரண்டு ஜாதி இருந்ததாக இப்போதுதான் ஞாபகம் வருகிறது. ஒன்று ரொம்ப நன்றாக இருந்தது. இன்னொன்றும் பரவாயில்லை; ஆனால் அப்படி ருசி என்று சொல்ல முடியாது. இரண்டொன்று அழுகியும் போய் விட்டது. எப்படியோ ஒரு வாரம் தள்ளியாயிற்று! நான் சாப்பிடும் ஆகாரத்தைப் பார்த்து இங்கே இருக்கிறவர்களெல்லாரும் அதிசயப்படுகிறார்கள். நான் சாதமே சாப்பிடுவதில்லை என்பதைக் கேட்டு, பட்டினியாய் இருந்து தபஸ் பண்ணுகிறேன் என்று எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். பதினெட்டு ரொட்டி வெறும் சோற்றைவிட எத்தனையோ மடங்கு மேல் என்பது இவர்களுக்கு ஏனோ புரியவில்லை! ஒரு பெரியவர் அடிக்கடி என்னைக் காண வருவார். ஒவ்வொரு தடவையும் நான் சாப்பிடுகிற ஆகாரத்தைப் பற்றியே பேச் செடுப்பார்; ஆச்சரியப்படுவார். ஸாஹாஜாத்பூர் முழுவதும் இந்த ஸங்கதி பரவிவிட்டது. நான் சாதமே சாப்பிடாதிருப்பதால் பெரிய தர்மாத்மா என்று எண்ணிக்கொண் டிருக்கிறார்கள் — சிரமப் படாமலே பெயரும் புகழும் வரும் என்றுதான் என் ஜாதகத்திலே எழுதி யிருக்கிறதே!

[ஸாஹாஜாத்பூர், 1891] ரவி

8

ஓம்

ரின்னி!

வெளியூர் சுற்ற ஆரம்பித்து இன்று சரியாக ஒரு மாசம் ஆகிறது. இப்பொழுதுதான் தெரிகிறது; எனக்கு அலுவல் மட்டும் இருந்தால் எப்படியாவது ஒரு மாசம் வெளியூரிலே காலந் தள்ளிவிடுவேன். அதற்கு மேலேதான் வீட்டுக்குத் திரும்பமாட்டோமா என்று மனசு ஏங்குகிறது. நேற்றுச் சாயங்காலம்

இங்கே வழக்கம்போல் சற்றுப் புயலும் மழையுமாக இருந்தது. பேய்க்காற்று இரைச்சலில் ரொம்ப நாழி தூக்கமே வரவில்லை. நேற்று மத்தியான்னம் முழுவதுங்கூட அடைமழை பெய்தது. வயல்களெல்லாம் ஜலத்தில் மூழ்கிப் போய்விட்டன. ஜலம் இன்னும் ஓர் அடி அதிகமானால் நம் தோட்டத் தண்டை வந்துவிடும். எந்தப் பக்கம் பார்த்தாலும் திட்டுத்திட்டாக மேடும் அதைச்சுற்றி ஜலமுந்தான். பெண்டுகளெல்லாரும் அவரவர்கள் வீட்டெதிரே உள்ள ஜலத்திலேயே பாத்திரங்களை அலம்புகிறார்கள்; மற்ற வீட்டுக்காரியமும் அங்கேயேதான். எவ்வளவு தூரம் துணியால் மறைத்துக் கொண்டால் ஒழுங்காயிருக்குமோ அந்த அளவுக்கு நாலு ஐந்து விரற்கடை மேலேயே தூக்கிக்கொண்டு போகிறார்கள் பெண்டுகளும் புருஷர்களும். வெயில்நாளில் ஜலக்கஷ்டம் என்றால், மழை நாளில் அதற்கு நேர்மாறு. நம்முடைய மூன்றும் மாடியில்கூட இப்படித்தான் இருக்கும், மழை பெய்தால். தாராளமாக வாசற்படியண்டை உட்கார்ந்துகொண்டு குளிக்கிறதோ, பாத்திரம் அலம்புகிறதோ எல்லாம் செய்யலாம், வராந்தாவில் தேங்கியிருக்கிற ஜலத்தில்! மழைநாளில் இப்படிச் செய்; சிரமம் எவ்வளவோ குறைகிறதா இல்லையா பார்! இப்போதெல்லாம் இரண்டு வேளையும் சற்று நேரமாவது மொட்டை மாடியில் உலாவுகிறாயா இல்லையா? பதில் எழுது. மற்ற நியமங்களையும் சரிவர அநுஷ்டிக்கிறாயா இல்லையா? அதையும் தெரிவி. அந்தக் கூர்ச்சியில் உட்கார்ந்து காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டே நாவல் படிக்கிறாயா என்ன?—எனக்கு என்னவோ ஸந்தேகமாகத்தான் இருக்கிறது. தலைவலி என்றாயே, எப்படி இருக்கிறது?

[ஸாஹாஜாத்புர், 1891] ரவி

௧

ஓம்

சின்னி!

இன்று சாப்பிட்டானதும் உறங்கி விழுந்து கொண்டே உனக்கு ஒரு கடுதாசி எழுதினேன். அப்புறமும் சற்றுநேரம் இப்படித் தூக்கக்கலக்கத்திலேயே 'ஸாதனா' (பத்திரிகை) வேலையைக் கவனித்தேன். அப்புறம், இங்கே இருக்கும் பிரதான குமாஸ்தாக்க ளெல்லாரும் பெரிய பெரிய தஸ்தர் கட்டை எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள்; எனக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு என் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றார்கள். தூக்க மயக்கமும் பகற்கனவும் எங்கோ ஓட்டம் பிடித்தன. மனசுக்குள்ளேயே, "இப்போது யாரேனும் திடீரென்று, 'நிமிர்ந்து சற்றே நோக்கிடுவாய்? நின் விழிகளில் உறக்கம் ஏன் மொழிவாய்?' என்று ராகம் இழுத்துப் பாடியிருந்தால் தேவலையே; 'மாயையின் லீலை' இரண்டாம் பதிப்பிலிருந்து அந்தப் பாட்டை நீக்கி விடலாமே" என்று எண்ணினேன். ஆனால் ஒருவராவது அப்படிப் பாட வந்திருப்பதாகத் தெரியவில்லை. இரண்டொருத்தருக்குச் சற்று மூக்கு ஸ்வரம் உண்டு; ஆனால் அவர்கள் சொல்ல வந்திருக்கிற விஷயமே வேறு; தூக்க மயக்கம், மயல் இவைகளுக்கும் அதற்கும் ஸம்பந்தமே இல்லை. சம்பளம் உயர்த்தவேண்டுமாம். அவர்கள் குழந்தை குட்டிக்காரர்களாம். எஜமான் தயவை நம்பியே இருக்கிறார்களாம்; அவரை விட்டால் வேறு கதி இல்லையாம். தாய் தகப்பன் எல்லாரும் அவரே தானும். இதைத் தவிரப் பழைய குத்தகைக்காரர் சில பேர் மேல் அவர்கள் தரவேண்டிய பாக்கிக்காக 'டிக்ரி' ஆகி யிருந்தது; அவர்கள் வட்டியையும் மற்றச் செலவையும் தள்ளிவிட வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறார்கள்; ஒவ்வொரு தவணையாக அந்தத் தொகையை அடைத்து விடுகிறார்களாம். பாக்கிக் கணக்கில் எவ்வளவோ பிசகு இருக்கிறதாம். அதையெல்லாம் சரிவர விசாரிக்கவேண்டும் என்று அவர்கள் முறையிடுகிறார்கள். இதில் சோகரஸமும் கண்ணீருந்தான் பார்க்க முடியும். எத்தனைபேர் வீடு வாசல் ஏலம் போய்ச் சொத்தையெல்லாம் இழந்து நிற்கிறார்களோ! — இங்கே பாட்டையும் கூத்தையும் எதிர்பார்க்க முடியுமோ? — ஆனால் நாடகமேடையில் 'குவளை விழிக்கடையிலிருந்து பல பலவென்று நீர்' உதிரட்டும்; பாரேன்; பாடகன் உச்சஸ்தாயியில் கவி வாக்கைப் பாட, பக்கவாத்தியக்காரன் அதோடு இழைந்து வாசிக்க எல்லாம் ஒரே அமர்க்களமாய் இருக்கிறது! பார்க்கிறவர்கள், கேட்கிறவர்கள், அதை வாசிக்கிறவர்கள் எல்லோர் உள்ளமும் உருகிவிடுமே! உலகமே இப்படித்தான். கடற்கரையிலும் கடலலைமீதும் அமர்ந்து கவிதை எழுதும்போது இந்தக் காணியையும் வேலியையும் பற்றி யார் சிந்திக்கிறார்கள்? அந்த எல்லை காணாக் கடலும் கரையுங்கூடப் பதினான்கு அக்ஷரங்களுக்குள் அடங்கிவிடுகின்றன! அந்தக் கடற்கரையில் ஒரு சின்னப் பங்களா கட்டப் போனாலோ? — எஞ்ஜினீயர், கண்டிராக்டர், செலவுத் திட்டம், ஆலோசனை, கடன், அப்புறம் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் வட்டி! — அதோடு கவியின் மனைவிக்குப் பிடிக்காது போய்விடும் — வீண் விரயம் என்பது அவள் அபிப்பிராயம். அகமுடையானுக்கு மூளை பிசகிப் போய் விட்டதோ என்றும் அவளுக்கு ஸந்தேகம் வந்து விடும். கவிதை, ஸம்ஸாரம் இரண்டுக்கும் ஒத்து வராதுபோல் இருக்கிறது! கவி கட்டுவதில் செலவு ஒன்றுமில்லை (புஸ்தகம் அச்சுக்குப் போகிற வரைக்குமாவது); ஸம்ஸாரத்திலோ எதற்கெடுத்தாலும் செலவும் சண்டை சச்சரவுந்தான். இப்படிப்

பலவிதமாக எண்ணமிட்டுக் கொண்டே இருக்கிறேன். கால்வாயில் படகை இழுத்துக்கொண்டு போகிறார்கள். ஆகாயத்தில் கருநீலமாக மேகம் கவிந்து வருகிறது. சில்லென்று வாடைக்காற்று வீசுகிறது. சூரியன் அஸ்தமிக்கிற ஸமயம். சிலவேளை மேலே ஒரு சால்வையைப் போட்டுக்கொண்டு யோசனை பண்ணுவேன் — ஜோடாஸாங்கோ மொட்டை மாடி, அதில் உள்ள என் இரண்டு கூர்ச்சி, அங்கே பண்ணுகிற பக்ஷணம்—இவற்றைப்பற்றியெல்லாம். பக்ஷணம் கிடக்கட்டும்; வழக்கம்போல் இரவுச் சாப்பாடு கிடைத்தால் போதுமே! **கோபுர் மியான்** படகின் பின்பக்கம் கையடுப்பு மூட்டி ஏதோ சமைத்துக்கொண் டிருக்கிறான். நடு நடுவில் நெய்யிலே ஏதோ சொட சொடவென்று பொரிக்கிற சப்தம் கேட்கிறது; வாசனையும் கம்மென்று மூக்கைத் துளைக்கிறது; ஆனால் மழை வந்ததோ எல்லாம் பாழ்தான்...

[காளிக்கிராமமோ ஸாஹாஜாத்புரோ, 1892] ரவி

வெள்ளிக்கிழமை.

1891 நவம்பர் முதல் *1895* நவம்பர்வரை நாலுவருஷ காலம் 'ஸாதனா' என்ற பத்திரிகை வெளிவந்தது.

10

ஓம்

இன்னி!

படிக் மஜூம்தார் வழக்கில் பிரதிவாதி வக்கீல் எனக்கு விரோதமாக என்ன என்ன பேசினார் என்று பிராஹிம்பூர் பேஷ்கார் எழுதின கடிதம் ஒன்றுதான் இன்று வந்தது; அதுவும் வராதிருந்தால் 'இன்னும் தபால் ஏன் வரவில்லை? ஏன் வரவில்லை?' என்றுதான் எண்ணிக்கொண்டிருப்பேன். உங்களைப்போல் நன்றி கெட்டவர்களை நான் பார்த்ததே இல்லை. உங்களுக்குக்

கடிதம் வந்துசேர ஒருவேளை, ஒரு நாள் அரை நாள் தடைப்படுமோ என்று நான் வெளியில் சுற்றும் போதெல்லாம் தினத்துக்கு மூன்று கடுதாசாவது மேலே மேலே போட்டுக்கொண்டே இருக்கிறேன்; இனிமேல் என் கடிதத்துக்குப் பதில் வந்தாலொழிய எழுதப்போவதில்லை. இப்படி நான் எழுதி எழுதித் தான் உங்களுக்குச் சொரணை கெட்டுப் போயிற்று. உங்களுக்குக் கொஞ்சமாவது மனசில் நன்றி இருந்தால்தானே! வாரத்துக்குத் தவருமல் இரண்டு கடுதாசு போட்டாலே போதும், எனக்குத் திருப்தியாக இருக்கும்; என் கடுதாசியையே நீ லக்ஷ்யம் பண்ணுகிறதில்லை. வரவர எனக்கு என்னவோ அப்படித்தான் படுகிறது. இரண்டு வரி எழுதுவ தற்குக் கூடவா முடியாது? அவ்வளவு அலக்ஷ்யம்! நான் மடையன்; உனக்குத் தினம் கடுதாசு எழுதிக் கொண்டே இருந்தால் ஏதோ ஸந்தோஷப்படுவாய் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். எழுதா விட்டாலும் நீ திகில் படுவாயோ என்னவோ? எல்லாம் பகவானுக்குத்தான் வெளிச்சம்!—இது வீண்பிகு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் என்னால் ரொம்ப நேரம் இப்படி இருக்க முடியாது. இனிமேல் இதை விட்டு விடுவோம், சாயந்தரம் உடம்பு அசதியாயிருக்கவே இப்படி யெல்லாம் எழுதினேன். நாளைக் காலை அதற்காக நான் வருத்தப்படலாம். 'இந்த உலகத்திலே பிறர் காரியத்தில் நாம் தலையிட்டு அவர்களைக் கண்டிப்பானேன்? நாம் உண்டு, நம் பாடு உண்டு என்று இருந்தால் போயிற்று' என்று தோன்றலாம். ஆனால், சமயம் வாய்த்தால் பிறரைக் குற்றங்கண்டு பிடிக்கிறதே என் சுபாவமாகப் போய்விட்டது! உன் தலைவிதி: இதை வாழ்நாள் முழுவதும் சகித்துக் கொண்டு போகவேண்டியிருக்கிறதே! திட்டும்போது என்னவோ உரக்கத் திட்டிவிடுகிறேன்; அப்புறம்

மனசுக்குள்ளேயே அநுதாபப் படுகிறேன்; அது யாருக்குத் தெரியப்போகிறது?

[சிலாயிதஹ்] ரவி

11

ஓம்

சின்னி!

இங்கே காலையிலிருந்து புயல் அடிக்கிற மாதிரி ஒரே பேய்க்காற்று. நின்று நின்று தூற்றல் போடுகிறது. ஒரே மந்தாரமாய் இருக்கிறது. ஜோஸ்யன் சொல்லி யிருப்பதுபோல், ஜூன் 27-ல் - அதாவது நாளைக்கு - ஒரு பெரிய சூறுவளி அடிக்கும் என்றுதான் தோன்றுகிறது. நாளைக்கு நீங்களெல்லாரும் மூன்ரும் மாடியை விட்டு இரண்டாம் மாடிக் கூடத்திற்கு வந்துவிட்டால் தேவலே; ஆனால் என் கடுதாசு அடுத்த நாள்தானே கிடைக்கும்! — வாஸ்தவமாகவே நாளைக்குப் புயலாக இருந்துவிட்டால் இதைச் சொல்லித்தான் என்ன பிரயோஜனம்? அப்படிச் சூறுவளி அடிக்கும்போல் இருந்தால் நீங்களாகவே இறங்கி வந்துவிட மாட்டீர்களா? எதுவோ, பகவான் இருக்கிருர்; அவர் விட்ட வழி ஆகிறது! நேற்று நீ எழுதின கடிதத்தைப் பார்த்ததும் என் மனசு என்னவோபோல் ஆகிவிட்டது. நாம் மட்டும் எந்த ஸந்தர்ப்பத்திலும் திடமாக இருந்து, நேரான வழியில் போனுல், பிறரைப் பற்றி நமக்கு ஏன் அக்கறை? கொஞ்சம் சிரமப்பட்டால் போதும்; மனசைச் சமாளித்துக்கொண்டு விடலாம். தன்னந் தனியே உட்கார்ந்துகொண்டு அப்படிப் பழகிக் கொள்ளப் போகிறேன். எதற்கும் சளையாமல் என் கடமையை நான் செய்யத்தான் போகிறேன். யார் எது வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும்;

நான் துளிக்கூடக் கவலைப்படப் போவதில்லை. இது எவ்வளவுதூரம் சாத்தியமாகுமோ தெரியாது. நாள் தோறும் சோம்பல் இராமல் நம் காரியத்தை யெல்லாம் நாமே செய்து முடித்தால், நம்பேரிலும் சரி, சுற்றுப்பட்டவர்கள் பேரிலும் சரி ஏன் அதிருப்தி ஏற்படப்போகிறது? கிடக்கிற இடத்திலேயே நாம் செய்ய வேண்டியதையெல்லாம் தாராளமாகச் செய்ய முடியும். மனசில் எந்தக் காரணத்தினாலோ அதிருப்தி ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்; அதை வளர்த்துக்கொண்டே வந்தால் நாளாவட்டத்தில் பிரமாதமாகத்தான் முடியும். அதைப் பொருட்படுத்தாதே; — என்னால் முடிந்தவரை அவசியம் இதற்கு ஏதாவது வழி தேடுகிறேன் — முடியாவிட்டால் ஈசுவரன் இருக்கிறான்; அவனை நம்பி மனங்கலங்காமல், அந்தப் பாரத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன். நிம்மதியாக இருக்கவேண்டு மென்றால் இதைத் தவிர வேறு வழியில்லை. எனக்குக்கூட நீதுவைச் சிலாயிதஹ் அனுப்பி அவனையே குடித்தனத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்ல வேண்டுமென்றுதான் இருக்கிறது. இந்தத் தடவை திரும்பி வந்ததும் அவனோடு இதைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். நீ அனுப்பிய புஸ்தக ஜாபிதாவில் இரண்டு புஸ்தகம் விட்டுப் போயிற்று என்று தோன்றுகிறது — 'ராம்மோஹன் ராயும்', 'மந்திரி அபிஷேக'மும். முதல் புஸ்தகம் ஸமாஜத்தில் கிடைக்கும். இரண்டாவது மூன்றாம் மாடியிலேயே இருக்கும். 'பத ரத்னாவளி'யையும் முடிந்தால் அனுப்பு.

[ஸாஹாஜாத்புர், 26 ஜூன், 1892] ரவி

ஞாயிற்றுக்கிழமை.

நீது - கவியின் மூத்த சகோதரர் துவிஜேந்திரநாதருடைய மூன்றாம் புதல்வர் நீதீந்திரர்.

12

ஓம்

ஜின்னி!

மயிரிழை தப்பி இருந்தால் இன்றைக்கு என் பாடு தீர்ந்துபோயிருக்கும்; படகோடு படகாக நானும் மூழ்கியிருக்க வேண்டியதுதான்! இன்று விடியற்காலை **பாண்டி**யிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தோம். **கோராயி** வாராவதியின் கீழே வந்ததும் எங்கள் படகின் பாய்மரம் அதில் மாட்டிக் கொண்டு விட்டது - சரியான ஆபத்தில்தான் வந்து சிக்கிக் கொண்டோம் - ஒரு பக்கம் நீரோட்டம் படகைப் பிடித்து இழுக்கிறது. மற்றொரு பக்கம் பாய்மரம் தடைப்பட்டு நின்று வளைந்து மளமள வென்று முறிய ஆரம்பித்தது. பேராபத்தாக முடிந் திருக்கும்; நல்ல வேளை! அப்போது கூலிப்படகு ஒன்று வந்து எங்களை மீட்டது. எங்கள் படகுக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு இரண்டு ஆட்கள் ஜலத்தில் குதித்து நீந்திக்கொண்டே அதைக் கரைப் பக்கமாக இழுத்தார்கள் - நல்ல காலம்! அந்தப் படகிலும் கரையிலும் அநேகம் பேர் இருக்கவே நாங்கள் மீண்டோம்; இல்லாவிட்டால் நான் பிழைப் பது ஏது? நான் நீந்திக் கரையேற முடிந்திருக்குமோ முடியாதோ? படகு கட்டாயமாக மூழ்கியிருக்கும். அவ்வளவு விசையாக வாராவதியின் கீழ் ஜலம் போய்க்கொண் டிருந்தது! இந்த முறை பிர யாணத்தில் இரண்டு மூன்று தடவை இப்படி ஆபத்து நேர்ந்தது. **பாண்டி**க்குப் போகும்போது ஒரு தரம் ஆலமரத்தில் பாய்மரம் மாட்டிக் கொண்டது. அப்போதுகூட இதே மாதிரி ஆபத் துத்தான், ஏறக்குறைய. **குஷ்டியார்** படித்துறையில், பாய்மரத்தை நிறுத்தும்போது கயிறு அறவே, அது கீழே விழுந்து விட்டது. சற்றே பிசகியிருந்தால்

புலசாந்த் செத்துப் போயிருப்பான்! படகோட்டிக ளெல்லாரும், 'புறப்பட்ட வேளை நல்ல வேளை இல்லை' என்கிறார்கள். மப்புப்போட்டு ஒரே யடியாக இருட்டிக்கொண்டு வருகிறது. நதி முழுவதும் அலை கொந்தளிக்கிறது. கண்ணுக்கு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் பார்க்க நேரம் இல்லையே!— மணி பன்னிரண்டு அடிக்கப் போகிறது. குளிக்கப் போகவேண்டும். மழைக் காலத்தில்தான் நதியில் போகவேண்டும். அப்போதுதான் அதன் அழகு தெரியும்! ஆனால் அந்த ஸமயத்தில்தான் போக முடிகிறதில்லை. இந்தத் தடவையாவது முடிந்ததே! —சரி; குளிக்கப் போகிறேன்.

[சிலாயிதஹ், ஜுலை 20, 1892] ரவி

'துண்டுக் கடிதங்கள்' 1892. ஜுலை 20-ஆம் தேதிக் கடிதம் பார்க்க.

13

ஓம்

பின்னி!

இன்று சிலாயிதஹ்ஹை விட்டுப் புறப்படுவதற்கு முன்னமேயே உன் கடுதாசி கிடைத்தது; அதைப் பார்த்ததிலிருந்து மனசு ஒரு மாதிரியாக இருக்கிறது. நீங்களெல்லாரும் வருவதாக எழுதியிருக்கிறாய். அதுவும் ஒரு விஷயத்துக்கு நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால் கல்கத்தாவுக்குத் திரும்பிப் போக எனக்கு மனசே இராது. பிடிக்காது; அதோடு உடம்பும் சரியாக இல்லை. எனக்கு, நீங்கள் எல்லாரும் கிட்ட இருக்கக் கூடாதா என்று மனசு அடிக்கடி ஏங்குகிறது. ஆனால் நீங்கள் ஷோலாபுரில் இருக்கிற வரைக்கும் நல்லதுதான். குழந்தைகள் அங்கே

படிந்து, நன்ருகப் படிக்கும், வளரும் என்றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். உலகத்தில் எல்லாம் நம் கையிலா இருக்கிறது? நடக்கிறபடிதான் நடக்கும். நாம் ஓர் இடத்தில் இருந்துதான் தீர வேண்டுமென்ருல் என்ன பண்ணுகிறது? மனசைப் பிடித்துக்கொண்டு நம்மால் ஆனவரை நம் கடமையைச் செய்யவேண்டியதுதான். அதையும் கூடியவரை ஒழுங்காகச் செய்யவேண்டும்; அதற்குமேல் மனுஷனுல் என்ன ஆகும்? மனசில் அதிருப்திக்கே இடங்கொடுக்காதே. அதனுல் தீமையே ஒழிய நன்மை ஒன்றும் இல்லை. சிரித்த முகத்தோடு, ஸந்தோஷமாய் இரு; மனசில் ஓர் உறுதியோடு ஸம்ஸாரத்தில் ஈடுபடவேண்டும். என் சுபாவம், எதிலும் அதிருப்திதான் எனக்கு; இதனுலே வீண் சிரமந்தான் படவேண்டியிருக்கிறது — ஆனுல் நீங்களெல்லாரும் எப்போதும் சிரித்த முகமாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸம்ஸாரமே இருளடைந்துதான் போகும். என்னுல் ஆனதைச் செய்து பார்க்கிறேன். நீயும் உள்ளுக்குள்ளேயே வருத்தப்பட்டு உருகக்கூடாது; சின்னி! உனக்குத்தான் தெரியுமே; நான் எப்போதுமே சிடுசிடு என்றிருப்பேன். எவ்வளவு நேரம் தனியாக உட்கார்ந்து அதைத் தணித்துக்கொள்ளப் பார்க்கிறேன் தெரியுமா? எனக்குள்ள இந்த ஸ்வபாவத்தை மாற்ற வேண்டியவள் நீ; அதை விட்டுவிட்டு நீயே என்னைப்போல் ஆகிவிடுகிருயே! இப்போதே புறப்பட்டிருந்தால் சரி, கல்கத்தாவில் வந்து பார்க்கிறேன் உன்னை. முடியுமானுல் உன்னையும் அழைத்துக்கொண்டு உரிஷ்யா (Orissa) வுக்குப் போகப் பார்க்கிறேன். தேக ஆரோக்கியத்திற்கு நல்ல இடம் அது. நானும் அப்பாவிடம் சொல்லித்தான் வைத்திருக்கிறேன். அவருக்கும் புரிந்திருக்கும். இன்னும் இரண்டொரு தடவையும் சொல்லிப்

பார்க்கிறேன் : ஏதாவது பலன் ஏற்படலாம். ஆனால் இப்போதே கோட்டை கட்டிக்கொண்டிருக்க வேண்டாம். இந்தக் கடுதாசுகூட நீங்கள் ஷோலா புரிலே இருக்கும்போதே வந்துசேரும் என்று நம்புகிறேன். 'இன்றைக்குப் போகலாம்', 'நாளைக்குப் போகலாம்' என்று குறிப்பிட்ட தினத்துக்கு எட்டு ஒன்பது நாள் கழித்துக்கூட நீங்கள் புறப்படுவீர்கள். பார்க்கலாம்! இன்று முழுவதும் படகு போய்க் கொண்டே இருக்கிறது. சாயங்காலமாகிவிட்டது ; இன்னும் **பாப்னு** போய்ச் சேர்ந்தபாடில்லை. அங்கிருந்து ஒன்றரைக் குரோசதூரம் பல்லக்கில் போகவேண்டும்.

[சிலாயிதஹ், நதிமார்க்கம், 1892] **ரவி**

திங்கட்கிழமை.

கவியின் தமையனார் ஸத்தியேந்திரநாத் டாகுர் அப்போது ஷோலாபுரில் நீதிபதியாக இருந்தார்.

உரிஷ்யாவிலுள்ள ஜமீனைப் பார்க்கக் கவி கல்கத்தா விலிருந்து அடிக்கடி ஜலமார்க்கமாகப் படகில் புறப்பட்டுச் செல்வார். அவருக்கு அதில் ஓர் இன்பம். 1893-ல் அம்மாதிரிப் பிரயாணம் செய்யுமுன் வரைந்த கடிதம் இது.

14

ஓம்

சின்னி!

நேற்று டிக்கின்ஸன் கம்பெனியிலிருந்து மறு படியும் ஓலை வந்துவிட்டது. நூற்றெண்பத்திரண்டு ரூபாய்க்குப் பில் அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் தடவையும் **ஸத்யன்** காலைத்தான் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதோடு தொள்ளாயிரம் ரூபாய் அவனிடம் கடன் வாங்கியாயிற்று! உனக்குக்கூட

நானூறு ரூபாய் கொடுத்திருக்கிறான் போலிருக்கிறதே! இத்தனை நாளாக அதைப்பற்றி நீ ஏன் ஒன்றுமே எழுதவில்லை? இன்று பிபியிடமிருந்து வந்த கடுதாசியில் உங்களைப்பற்றி யெல்லாம் தீவிரமாக எழுதியிருக்கிறது. நீங்களெல்லாரும் அங்கே அடிக்கடி வந்து போகிறதாகவும் எழுதியிருக்கிறாள். கைக் குழந்தை மன்னி மடியில் படுத்துக்கொண்டு அப்படியும் இப்படியும் கைகால்களை ஆட்டி, கத்தி அமர்க்களம் பண்ணுகிறதாமே? அதைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆடிமாசம் வெளியூரிலேயே கழிக்கிறதாயிருந்தால் அதற்குள் குழந்தை எவ்வளவோ மாறியிருக்கும்; புதிது புதிதாக எத்தனையோ வித்தை கற்றுக்கொண்டுவிடும். பேலி யோடு குழந்தையும் பாட்டுக் கற்றுக்கொள்கிறானா? குரல் எப்படி இருக்கிறது அவனுக்கு? வெறுமே ஸ, ரி, க, ம மட்டும் சொல்லித் தரவேண்டாம்; கூடவே ஏதாவது பாட்டும் கற்றுத்தரச் சொல்லு. அப்போதுதான் குழந்தைகளுக்குப் பிடித்திருக்கும்; இல்லாவிட்டால் வரவர வெறுப்புத் தட்ட ஆரம் பிக்கும். சின்ன வயசில் விஷ்ணுவிடம் பாட்டுக் கற்றுக்கொள்ளும்போது ஸ, ரி, க, ம என்றாலே எனக்குப் பிடிக்காது. புதிதாக ஏதாவது பாட்டுச் சொல்லித் தருகிறாரே அன்றைக்குத்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும். நீ கூடப் பசங்களோடு உட்கார்ந்துகொண்டு ஸ, ரி, க, ம பழக ஆரம்பியேன். அப்புறம் மழைநாளில் நான் அங்கே திரும்பி வரும் போது அகமுடையானும் பெண்டாட்டியும் சேர்ந்து கொண்டு அந்த மழையில் ஸங்கீத சர்ச்சை பண்ண லாமோ இல்லையோ? என்ன சொல்கிறாய்?— வித்யேபூஷன் இப்போதெல்லாம் சரியாக வேலை செய்கிறானா? சூடு கொடுத்த அப்புறமாவது ஆசாமி கொஞ்சம் மாறி யிருக்கிறானா? – பாவம், வெகு நாள் கழித்து வந்திருக்கிறாள், அவன் பெண்டாட்டி!

ஞாபகம் இருக்கட்டும். உன் தாய் எப்படி இருக்கிருள்?

[சிலாயிதஹ், 1893] ரவி

ஸத்யன் : கவியின் மருமகன் (ஸகோதரி புதல்வர்) ஸத்ய ப்ரஸாத் கங்கோபாத்யாயர்.

பிபி : கவியின் தமையனுர் ஸத்யேந்திரநாதரின் பெண் இந்திரா. கைக்குழந்தை : மூன்ரும் பெண் மீரா.

விஷ்ணு : விஷ்ணுராம் சட்டோபாத்யாயர்; பாடகர்; கவிக்குச் சிக்ஷை சொல்லி வைத்தவர்.

15

ஓம்

ஙின்னி!

இன்றைக்கு மணி பதினென்று ஆவதற்குள்ளேயே சாப்பாட்டை யெல்லாம் முடித்துக்கொண்டு புறப்படவேண்டும். போகிற வழியில் ஒரு 'டாக்' பங்களாவில் கழிக்கவேண்டியிருக்கும், இன்று இராப் பொழுதை. அப்புறம் நாளை ஸாயந்தரத்துக்குள் புரிக்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்று நினைக்கிறேன். மிஸஸ் குப்தாவும் அவளுடைய குழந்தை குட்டிகளும் கூடவே வருகிருர்கள். அவர்கள் சாமான், மூட்டை முடிச்சு எல்லாம் முன்னுலேயே மாட்டு வண்டியில் போய்க்கொண்டிருக்கின்றன. மூன்று நாலு நாட்களாக இந்த ஏற்பாடெல்லாம் செய்து முடிப்பதற்குள்ளே விஹாரி பாபுவுக்குப் பாவம், ஒரேயடியாகப் பைத்தியம் பிடித்து விடும்போல் ஆகிவிட்டது. மிஸஸ் குப்தாவாலே ஒன்றும் ஆகவில்லை. எந்தக் காரியத்தையுமே சீராகச் செய்து முடிக்கத் தெரியவில்லை அவளுக்கு. நிம்மதியாக வாயை மூடிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கிருள். கேட்டால், "என்னுலே முடியாது; என் மூளைக்கு ஒன்றுமே ஏறவில்லை" என்கிருள். விஹாரி பாபுவுக்கும் ஏறக்

குறைய என் சுபாவந்தான் - பார்த்தேன். எதற்குக் கண்டாலும் பரபரப்பும் கவலையுந்தான் அவருக்கு. மிஞ்சிமிஞ்சி ஏதோ நாலுநாள் புரியில் தங்கப் போகிருர்கள். ஏழு கடலையும் பதின்மூன்று ஆற்றை யும் தாண்டிப் போவதாயிருந்தால்கூட இவ்வளவு ஆத்திரப்படமாட்டார்கள் மனிதர்கள்! ஆனல், ஒன்று: என்னைப்போல் சள்ளுப்புள்ளென்று எரிந்து விழவில்லை அவர். அந்த விஷயத்திலே அவர் பெண் டாட்டியின் பாடு சௌகரியந்தான். எல்லாவற்றை யும் கம்மென்று சகித்துக்கொண்டு போகிற சுபாவம் அவருக்கு. 'இந்த மாதிரிப் புருஷன் உலகத்தில் அகப்படுவதே துர்லபம்' என்றுதான் தோன்றுகிறது எனக்கு. விஹாரி பாபு நல்ல குடும்பஸ்தர். குழந்தை குட்டிகளிடத்தில் பிரியம் உள்ளவர். எனக்கு அவரைக் கண்டால் மிகவும் பிடித்திருக்கிறது. வீட்டு மனிதர்களைப் போலவே கவனித்துக் கொள்கிருர் எங்களை. அதிகமாகத் தூக்கி வைத்துச் சலிக்கப் பண்ணவுமில்லை; எங்கள் அறையில் நாங்கள் பாட் டுக்கு எங்கள் இஷ்டம்போலேதான் இருக்கிரேும். அப்படி அவர் ஆதரவு காட்டினுலும் சகஜமாகத்தான் இருக்கிறது; பிரமாதமாகக் காட்டிக் கொள்ளவில்லை. பலுவைக்கூடச் சுமாராக வளையக் கட்டிக்கொண்டு வந்துவிட்டார் என்ருல் பாரேன்! ஆனல் இன்னுங் கூடக் கொஞ்சம் கூச்சம் இருக்கத்தான் இருக்கிறது; அடிக்கடி வெட்கத்தினுல் அவன் மூஞ்சி சிவந்து போகிறது. ஒரே யடியாகச் சாப்பிடுவதையே நிறுத்திவிட்டான். அவர்கள் எதைச் சாப்பிடச் சொன்னுலும் 'வேண்டாம்' என்று தலையை அசைக்கிருன். நல்ல வேளையாக, அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்துகொண்டு அதிகத் தொந்தரவு பண்ணி இரண்டொரு வாய் சாப்பிட வைக்கிருர்கள். இல்லாவிட்டால் இத்தனை நாளைக்குச் சுக்காய்ப் போயிருப்பான். வழியில் இரண்டு நாள் கடுதாசு

எழுத முடியாதிருக்கலாம்; அதற்காக வீண் கவலைப் படாதே! இன்னும் ஒன்று சொல்கிறேன், ஞாபகம் இருக்கட்டும்: புரியிலிருந்து கடுதாசு வந்து சேரக் கட்டக்கைவிட இரண்டு நாள் மேலேயே பிடிக்கும்; அது இன்னும் தூரத்தில் இருக்கிறது. அதனாலே, மூன்று நாலுநாள் கடுதாசு வராமலும் இருக்கலாம்.

[கட்டக்கிலிருந்து புரிக்குச் செல்லும் வழி; பிப்ரவரி 1893] ரவி

மிஸஸ் குப்தா: விஹாரிலால் குப்தர் என்னும் உத்தியோகஸ்தர் மனைவி, ஸௌதாமினி.

விஹாரி பாபு: விஹாரிலால் குப்தர், ஐ. ஸி. எஸ்.

பலு: கவியின் சகோதரர் வீரேந்திரநாதரின் புதல்வர், பலேந்திரநாத்; 'துண்டுக் கடிதம்' 1893 பிப்ரவரி 14-ஆம் தேதிக் கடிதம் பார்க்க.

16

ஓம்

சின்னி!

இன்று டாக்காவிலிருந்து திரும்பிவந்ததும் உன் கடுதாசு கிடைத்தது. சரி; சீக்கிரமாகவே காளிக் கிராமத்து வேலையை யெல்லாம் ஒருவிதமாக முடித்துக்கொண்டு, கல்கத்தாவுக்கு வந்து செய்ய வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்துவிட்டுப் போகிறேன். ஆனால் நீ மட்டும் வீணாக மனசை வருத்திக் கொள்ளக்கூடாது. நிதான புத்தியோடு இரு, உறுதியாக. நடக்கிறதெல்லாம் நடக்கட்டும் என்று பொறுத்துக் கொண்டுபோ. எப்போதும் இந்தமாதிரி இருக்கவேண்டுமென்றுதான் பாடுபடுகிறேன். என் வாழ்நாளில் அது சாத்தியமாகும்படி பார்க்கிறேன். ஆனாலும் எல்லா ஸமயத்திலும் அது முடிகிறதில்லை. நீங்களும் மனசை இப்படி நிதானப் படுத்திக் கொண்டால் தேவலை; நம் இரண்டுபேர் முயற்சியாலும் பலம் பிறக்கலாம்; எனக்கும், ஸந்தோஷமும்

மனநிம்மதியும் ஏற்படும். என்னைவிட வயசில் நீ எவ்வளவோ சிறியவள்; உலக விஷயமும் ஓர் அளவுதான் தெரியும்; அதோடு ஒரு விஷயத்தில் என்னைவிட அடங்கிப்போகிற சாந்த சுபாவம் உனக்கு; பொறுத்துக்கொண்டு போகிற சக்தியும் உண்டு; அதனுல் எந்தவிதமான கஷ்டமாயிருந்தாலும் மனசைச் சமாளித்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பமே அதிகமாக இல்லை உனக்கு. ஆனுல் எல்லாருடைய வாழ்நாளிலும் பெரிய பெரிய சங்கடங்கள் எப்போதாவது ஒரு சமயம் வந்துதான் தீரும்; அப்போது பொறுமையும் சரி, ஸந்தோஷமும் சரி நிச்சயமாக வேண்டித்தான் இருக்கிறது. அப்போது யோசித்துப் பார்த்தால், "பிரதிதினமும் நேருகிற சின்னஞ் சிறு குற்றங்குறைகள், கஷ்ட நிஷ்டுரங்கள் வேதனையையெல்லாம் பார்த்து அப்படி மனங்குன்றிப் போகிருமே; இப்போது அதெல்லாம் ஒன்றும் காணுமே" என்றுதான் தோன்றுகிறது. உன்மேல் ஆசையாகத்தான் இருக்கிறேன். இன்னும் அதிக ஆசையாகவும் இருக்கப் பார்க்கிறேன். பரஸ்பரம் உள்ள கடமைகளைப் பூர்ண திருப்தியோடு ஸந்தோஷமாகச் செய்யப் பிரயத்தனப் படுகிறேன். அப்புறம் நடக்கிறது நடக்கட்டும். அதிக நாள் என்னவோ யாரும் வாழப் போகிறதில்லை; சுக துக்கமும் நிரந்தரம் அல்ல; அவைகளும் மாறிக்கொண்டேதான் இருக்கும். சுயநலம், குற்றங்குறைகள், வஞ்சனை எல்லாவற்றையும் லேசாகச் சகித்துக்கொண்டு போவது சிரமந்தான். ஆனுலும், அப்படிப் போகாவிட்டால் உலகத்தில் இருப்பதே பெரும் பாரமாய் வரவர ஸகிக்க முடியாமல் ஆகிவிடும்; மனசில் இருக்கும் உன்னத லக்ஷ்யம் அப்படியே நிலைத்து இருக்கவேண்டும் என்பதும் கைகூடாமல் போய் விடும். இப்படியே ஒவ்வொரு நாளும் கவலையும் வெறுப்பும் தட்டத் தட்ட ஏதாவது சின்ன விஷயமா

யிருந்தால்கூட அடிக்கடி சச்சரவு ஏற்பட்டுக் கொண்டேதான் போகும்; வாழ்க்கையே வீணுகி விடும். பேரமைதி, பரந்த வைராக்கியம், தன்னலம் பாராட்டாத அன்பு, நிஷ்காமகர்மம்—இவை இருந் தால்தான் வாழ்க்கை பயனுடையதாகும். உன் மனசுக் குள்ளேயே சாந்தி ஏற்பட்டால் சுற்றி இருக்கிறவர் களுக்கும் அதனுல் ஆறுதல் ஏற்படும்; அப்புறம் உன் வாழ் நாள் ஏன் வீண் நாள் ஆகிறது? ராணி என்ன? அவளைவிட ஒரு படி மேலேயேதான் இருப்பாய், சின்னி! மனம் போகிற போக்கில் விட்டு விட்டு ஸதா வெறுப்புத் தட்டிக்கொண்டே போனுல் ஒன்றும் உருப்படாது. இதில் முக்கால்வாசி நாமாகவே தூக்கிப் போட்டுக்கொள்கிற துன்பந்தான். ஏதோ பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிப் பிர சங்கம் பண்ணுகிறேனே என்று என்மேல் கோபித்துக் கொள்ளாதே. இதெல்லாம் எவ்வளவு உள்ளூறச் சொல்கிறேன் என்று உனக்குத் தெரியாது! உன் பேரில் உள்ள அன்பு, சிரத்தை, உன்னோடு ஒத்துழைக்க வேணும் என்கிற உறுதி எல்லாம் வரவர அதிகமாகிக் கொண்டே வரு கின்றன. நிர்மலமான சாந்தியும் இன்பமுமே இந்த ஸம்ஸாரத்தில் எல்லாவற்றையும்விட மேலானவை; அவற்றுக்கு எதிரே மற்றத் துன்பமோ ஏமாற்றமோ எல்லாம் எந்த மூலே? இந்த எண்ணந்தான் மனசில் தலை தூக்கி நிற்கிறது. இப்போதெல்லாம், சிறு வயசில் ஆண் பெண்கள் கூடிக் குலாவுவதில் ஒரு வெறி இருக்கிறது; இதை உன் வாழ்க்கையில் நீயே உணர்ந்திருக்கலாம். வயசு ஏற ஏறத்தான் –, ஸம்ஸார அலைச்சலில்தான் – ஆண் பெண்களுக்குள் வாஸ்தவமான, நிலையான அன்பு—ஆழ்ந்து அடங்கின அன்பு உண்டாகிறது. தங்கள் குடும்பம் விருத்தியாக ஆக வெளியுலகு தொலைவில் போய்விடுகிறது. ஒரு விஷயத்துக்கு, ஸம்ஸாரம் பெருகப் பெருக

அவரவர் குடும்பம் தனி என்று ஆகிவிடுகிறது. ஆண் பெண்களுக்கு உள்ள நெருங்கின ஸம்பந்தம் இருவரையும் பிணைத்து விடுகிறது. மனித உள்ளம் போல் விசித்திரமானது வேறென்றும் இல்லை; அதை ஆழ்ந்து கவனித்தால்தான், அதை நேருக்கு நேர் கண்டு அறிந்தால்தான் — உண்மை அன்பு உதயமாகும். அதில் எந்தவிதமான மயக்கமும் இல்லை; ஒருவரையொருவர் தெய்வம் என்று பாராட்டவேண்டிய அவசியமும் இல்லை. அப்போது, கூடிக் களிப்பதிலும் பிரிந்திருப்பதிலும் வெறியே மூளாது — அதற்கு மாறாக, தூரத்திலும் சமீபத்திலும், ஆபத்து ஸம்பத்துக்களிலும். ஏழைமையிலும் ஐசுவரியத்திலும், ஓர் ஆனந்தமே நிலவுகிறது நம் மனத்தில். என்றால் எவ்வளவோ கஷ்டம் உனக்கு; அதுவும் எனக்குத் தெரியும். பின்னால் ஒரு நாள், கஷ்டப்பட்டது யாருக்காக, எனக்காகத்தானே என்று அதில் நீயே கூட ஸந்தோஷப்படுவாய்! காதலர் ஒருவரை ஒருவர் மன்னித்து ஒருவர் படும் துன்பத்தை மற்றவர் பகிர்ந்து கொள்வதில் இருக்கும் இன்பம், இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதிலும் தம்மையே திருப்தி பண்ணிக் கொள்வதிலும் இல்லை; இப்போதெல்லாம் இதுதான் என் பிரார்த்தனை: சகஜமாகவும் எளிமையாகவும் நாம் வாழ்க்கை நடத்த வேண்டும். நம்மைச் சுற்றிலும் விசால நோக்கமும் ஸந்தோஷமும் நிலவவேண்டும். நம் குடும்ப வாழ்க்கை ஆடம்பரம் இல்லாமல் சுபமாக நடக்க வேண்டும். அதிகமாக ஆசைப்படாமல், உயர்ந்த லக்ஷ்யத்தைக் கடைப்பிடித்து, சுயநலம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். நம் காரியத்தைவிடத் தேசத் தொண்டையே பிரதானமாகக் கவனிக்க வேண்டும். நம்முடைய பிள்ளை குட்டிகள் இந்த ஆதர்சத்தை விட்டு நழுவிப் போய்விட்டால்கூட நாம் இருவர்மட்டும் கடைசி வரையில் பரஸ்பரம்

ஒத்துழைக்க வேண்டும். உலகமே வெறுத்துப் போயிருக்கும் ஜீவன்களுக்கு நாம் ஆதரவாயிருந்து வாழ்நாள் இனிது ஈடேற முயல்வோம். இதனுல்தான் கல்கத்தாவில் சுயநலமே தாண்டவமாடுகிற அந்தப் பாழும் இடத்திலிருந்து உங்களையெல்லாம் தூரத்தி லுள்ள தனிமையான கிராமத்திற்கு அழைத்துக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று அவ்வளவு ஆவ லாயிருக்கிறேன். பட்டணத்தில் இருந்தால் இந்தக் குணம் குறைகளையும், தான் பிறரென்பதையும் மறந்து நிம்மதியாக இருக்கவே முடியாது. அங்கே சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் மனம் குன்றிப்போய்க் கடைசி நாளில் நம் தாராள நோக்கமெல்லாம் மண் ணோடு மண்ணுகப் போகவேண்டியதுதான். இங்கே இருந்தாலோ, அற்பமாக இருந்தாலும் யதேஷ்ட மாகத் தோன்றும்; பொய்யை மெய்யென்று நம்பி ஏமாறவேண்டிய அவசியமும் இல்லை. இந்தப் பிர திக்ஞை மட்டும் எப்போதும் ஞாபகத்தில் இருக்க வேண்டும்; அது அவ்வளவு சிரமமும் அல்ல. *"**ஸுகம் வா யதிவா துக்கம் பிரியம்வா யதிவா பிரியம், பிராப் தம் பிராபத்முபாஸீத ஹ்ருதயேனபராஜிதா.**" பிரமத், ஸுரேன், பிரமத்தின் குஜராட்டி சிநேகிதன் ஒருவன் இவர்களெல்லாருங்கூடச் சிலாயிதஹ்ஹில்தான் இருக் கிருர்கள்.

[சிலாயிதஹ், 1899 ஜூன்] **உன் ரவி**

ஸுரேன்: கவியின் தமையனர் ஸத்யேந்திரநாதரின் புதல்வர் ஸுரேந்திரநாத். பிரமத்: பிரமத் சௌதுரி (வீரபல்) ஸத்யேந்திரநாதரின் மாப்பிள்ளை.

1898 - ஜூன் மாசம் டாக்காவில் கூடின வங்க மாகாண அரசியல் மகாநாட்டிற்குப் போய் வந்தபின் எழுதிய கடிதம் இது.

** இன்பமோ துன்பமோ, அன்போ வெறுப்போ எது வரினும் அதை மனப்பூர்வமாக ஏற்பார் வெல்லுதற்கரிய ராவர்.*

17

ஓம்

சின்னி !

நீது இவர்களெல்லாருக்குமே பிறர் கஷ்டத்தைச் சகித்துக்கொண்டுபோகிற தன்மை இல்லே.

அதற்காக நீ சலித்துப் போவானேன் ?........... 'ஒரே பிள்ளே ; ஸம்ஸாரத்தில் இருந்த ஒரு பற்றும் அறுந்து போய்விட்டது ; அவ்விதம் இருந்தும் பார் : இராப் பகல் துட்டே கண்ணுக இருக்கிருன்' என்று எல்லோரும் ஆச்சரியப்படுகிருர்கள். எல்லோருக்கும் அவன்மேல் வெறுப்புத்தான், அந்த விஷயத்தில். ஆனுல் மனுஷ்யனுடைய குணங்களே யெல்லாம் ஆராய ஆராய இதைப் பொறுத்துக்கொண்டு போகவேண்டுமென்று தோன்றுகிறது ; அப்படியே பிரயத்தனம் செய்கிறேன். ஒவ்வொரு சமயம் சீ என்று வெறுத்துததான் போகிறது. இருந்தாலும் அந்த வெறுப்பை உதறித் தள்ளப் பார்க்கிறேன். நமக்கு வெளியே யார் எப்படி நடந்துகொண்டாலும் சரி, பற்றுதல் இல்லாமல் தூரத்தில் இருந்து பார்ப்பதுபோல் கவனிக்க வேண்டும். நம் வருத்தம் துன்பம், வெறுப்பு, விருப்பு, பசி, தாகம் குடும்பத் தொல்லேகள் எல்லாம் நம்மை மீறியவை ; எல்லாவற்றுக்கும் 'நான்' என்று வரமுடியாது. நம்மை மீறி இருக்கும் இந்த விஷயத்தை, அது இருக்கிற பிரகாரமே வெளியிலிருந்தபடி கவனித்தால்தான் நம்முடைய சாதனே பூர்த்தியாகும். அது என்னவோ மிகவும் சிரமந்தான். ஆனுல் கொஞ்சங் கொஞ்சமாக அப்படி மனசைப் பழக்கிக் கொள்ளவேண்டும். யார் மேலாவது பிடிக்காது போய்விட்டாலோ, ஏதாவது ஒரு விஷயத்தில் மனத் தாங்கல் ஏற்பட்டாலோ உடனே நமக்குள்ள அழியாமலிருக்கும் அந்தத்

தன்மையை நினைத்துப்பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு நாள் ராத்திரி வெளியறையில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது காலில் தேள் கொட்டி விட்டது. வேதனை அதிகமாக ஆரம்பித்தது. உடனே என் சரீரம் வேறு, நான் வேறு என்ற பாவனையில் அந்தக் கால்வலியை அநுபவிக்கப் பார்த்தேன், டாக்டர் மற்ற நோயாளிகள் அவதிப் படுவதைப் பார்த்துக்கொண் டிருப்பதுபோல். ஆச்சரியமான பலன் கிட்டியது. உடம்பில் சிரமம் தட்டினாலும் அது மனசை அப்படியாக ஒன்றும் பாதிக்கவில்லை. அந்த வலியோடேயே தூங்க முடிந்தது! அதிலிருந்து, முக்திக்குப் புது மார்க்கம் ஒன்று கண்டு பிடித்து விட்டதாகவே எனக்குப் பட்டது. இப்போதோ சுக துக்கமெல்லாம் நமக்குப் புறம்பானவை, க்ஷணநேர உலகவாழ்வைச் சேர்ந்தவை என்பது அடிக்கடித் தெளிவாகத் தெரிகிறது. இதை விட வேறு என்ன வேண்டும், நிம்மதியும் ஆறுதலும் அடைய? ஆனாலும் இதை அடிக்கடி ஞாபகப் படுத்திக்கொண்டு சகலவிதமான அருவருப்பையும் மீறி வர முயலவேண்டும். நடு நடுவில் இந்த முயற்சி வீணாகலாம். இருந்தாலும் சலித்துப்போய் விட்டு விடக்கூடாது. இந்த க்ஷண நேர வாழ்வுக்காக நித்தியமான ஆத்ம சாந்தியைப் பறி கொடுப்பது சரியா? அதைப்போல் நஷ்டம் வேறொன்றுமே இல்லை. இரண்டு பைசாவுக்குப் பார்த்து லக்ஷ ரூபாய் தோற்ற கதைதான். கீதையில், 'எவனொருவனைப் பிறர் துன்புறுத்த இயலாதோ, எவனொருவன் பிறருக்குத் துன்பம் செய்யாதிருக்கின்றானோ, எவனொருவன் இன்ப துன்பம், பயம் குரோதம் இவற்றை மீறியுள்ளானோ அவனே என் அன்பிற்கு உரியவன்' என்று சொல்லியிருக்கிறது.

நாளைய செவ்வாய்க் கிழமை பலுவுக்குச் சிராத்தம். அப்புறம் காரியங்களெல்லாம் முடித்துக்

கொண்டு வர ஒருவாரமாவது நிச்சயம் ஆகும்; வேறு வழி இல்லை. நகேந்திரன் இதற்குள்ளாக யசோரில் வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வந்து விடலாம். எதற்கும் சீக்கிரமாகத் திரும்பி வந்தால் நல்லது; இங்கே அவன் அவசியம் இருக்கவேண்டி யிருக்கிறது.

[கல்கத்தா, ஆகஸ்டு, 29, 1899] ரவி

நகேந்திரன் : கவியின் மைத்துனர் நகேந்திரநாத் ராய் சௌதுரி.

18

ஓம்

சின்னி !

இன்றைக்குப் புறப்பட்டுப் போகவில்லை நான்; பேலாவுக்கு எழுதின கடுதாசில் அதைப்பற்றி எழுதியிருக்கிறேன். வீட்டிலேயே தங்கி விட்டேன். தபால் வருகிற நேரத்திலே தபால் வந்தது. மூன்று கடிதங்கள் வந்தன. ஆனால் உன் கடிதம் கிடைக்க வில்லை. வரும் என்று எதிர் பார்க்காவிட்டாலும் தப்பித் தவறி ஒரு கடுதாசாவது போட்டிருக்கக் கூடாதா என்று எண்ணி யிருந்தேன். தூரத்தில் இருக்கும்போது அதிக இன்பம் அளிப்பது கடிதங் தான். நேரில் பார்த்து அளவளாவுவதைவிட அதில் ஒரு விசேஷம் இருக்கிறது. அது அற்பமானதுதான். இருந்தாலும் அதற்குரிய மதிப்பு என்னவோ அதிகம். அதனால் இரண்டொரு விஷயத்தை நாம் அறிந்து கொள்கிறோம்; அதில் இருப்பதை யெல்லாம் படித்துத் தீர்த்துவிடுகிறோம். ஆனால் நேரில் பார்க்கும் போது பேச்சுவாக்கில் எத்தனையோ வார்த்தைகள் காற்றோடு போய்விடுகின்றன. நேரில் பார்த்துப் பேசிக்கொள்வதில் ஓர் இன்பம் அடைகிறோமே

யொழிய என்ன பேசினேம் என்று மறுபடியும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஒருவரையொருவர் நேரில் கண்டு அறிமுகமாவதைவிடக் கடிதமூலம் பரிசயம் செய்துகொள்வதில்தான் புதுமை இருக்கிறது. அதில் ஒரு மறைவான — ஆழ்ந்த — விசேஷமான இன்பம் உண்டு. உனக்குக்கூட அப்படித்தானே படுகிறது?...

இக்கடிதத்தின் மீதிப்பகுதி கிடைக்கவில்லை.

19

ஓம்

சின்னி!

நீ என்ன பண்ணிக்கொண்டு இருக்கிருய்? உன் கவலையே பெரியதாக அதிலேயே மூழ்கி யிருந்தா யானல் ஸம்ஸாரத்தில் சரிப்படுமா? அதுவரைக்கும் பிழைத்துக் கிடந்தேனுனல் எத்தனை சாவைப் பார்க்க வேண்டியிருக்குமோ வீட்டில், யார் கண்டார்கள்? சாவைவிட நிச்சயமானது வேறென்றுமில்லை — வருத்தமோ, ஆபத்தோ நேரும்போது பகவானே துணை என்று அவனை நம்பி இரு; இல்லாவிட்டால் தீராத ஏக்கந்தான்!

நீதுவுக்கு உடம்பு தேவலை; மெல்ல மெல்லத் தேறிக்கொண்டுதான் வருகிருன். கொஞ்ச நாளாக ஒரு டாக்டர் இராவெல்லாம் எங்களோடேயே இருந்துகொண்டு மருந்து கொடுத்துக்கொண் டிருந்தார். நேற்று அவசியம் இராததால் அவர் வர வில்லை. அதனுல் இரவு முழுவதும் நானே அவனைக் கவனித்துக் கொள்ளவேண்டி யிருந்தது. இப்போது ஜூரம் 99 டிகிரி; இருமல் சுமார்தான். அப்படி ஒன்றும் இரைப்பு வாங்கவில்லை. நாடியும் சகஜமாகத் தான் அடித்துக்கொள்கிறது. நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது. ஆனுலும் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலையில் எதற்கும் தயாராகத்தான் இருக்க

வேண்டும்; என்ன பண்ணுவது? இன்றையிலிருந்து டாக்டர் இரண்டு வேளை தான் வருவார். இந்தச் சில நாளாக நாலு தடவை வருவதோடு ராத்திரியும் ஒருவர் வந்து பார்த்துக்கொள்வார். வருத்தத்தாலேயே இப்படிச் சோர்ந்து போகிறாய் நீ! நானோ வேலையில் ஈடுபட்டு ஓய்ந்து போகிறேன். இப்போதெல்லாம் நான் எந்த விதமான சாவுக்கும் பயப்படுவதில்லை. ஆனால் உன்னைப்பற்றித்தான் சங்கடமாயிருக்கிறது. ஒரு துணையும் இல்லாமல் எதுவுமே சலித்துப் போய்க் கிடக்கிறாய் நீ! இதுதான் எனக்கு மிகவும் கவலையாயிருக்கிறது.

[கல்கத்தா, 1899] ரவி

20

ஓம்

சின்னி!

குழந்தைகளைப் பற்றியே ஸதா கவலையாக இருக்கிறது; இருந்தாலும் அதை உதறித் தள்ளப் பார்க்கிறேன். அவர்கள் நன்றாக இருக்கவேண்டும், நன்றாகப் படிக்கவேண்டும் என்றுதான் என்னால் முடிந்த வரை பார்க்கிறேன். ஆனாலும் அதே கவலையில் ஆழ்ந்து இருப்பதும் சரியல்ல. அவர்கள் மேன்மையாகவும் வாழலாம்; கஷ்ட தசையிலும் இருக்கலாம்; நடுத்தரமாகவும் ஜீவிக்கலாம்; எப்படியோ அவரவர்களுக்கு ஏற்ற காரியத்தைச் செய்துகொண்டுதான் போகப் போகிறார்கள். நம் குழந்தைகள் தாம்; இருந்தாலும் அவர்கள இஷ்டப்படிதானே விட வேண்டும்? அவர்கள் சுகதுக்கம், பாவபுண்ணியம் அவர்களுக்கு; ஜன்ம ஜன்மாந்தரமாக அவர்கள் ஒரு வழியில் போய்க்கொண் டிருப்பார்கள். அதற்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம்? நம்முடைய கடமையை நிறைவேற்ற வேண்டியது; அவ்வளவுதான். பலனை

எதிர்பார்த்து ஏங்கி நிற்கமாட்டேன். அவர்கள் எப்படி ஆவார்கள் என்பதை நாமா கண்டோம்? ஈசுவரன் கையில் இருக்கிறது அது! அதைப்பற்றி அதிகமாகக் கோட்டை கட்டவும் மாட்டேன். 'அவர்கள் எல்லாரையும்விட நன்ருக இருப்பார்கள்' என்று என் குழந்தைகளைப் பற்றியே நான் அதிகமாகப் பெருமைப்பட்டுக் கொள்வதற்குக் காரணம் என்ன? மமதைதான். என் குழந்தைகளிடம் அதிகமாக எதிர்பார்க்க எனக்கு என்ன அதிகாரம் உண்டு? எத்தனையோ குழந்தைகள் எவ்வளவோ கஷ்ட தசையில் அவதிப்படுகிருர்கள். அவர்களைப் பற்றியெல்லாம் கொஞ்சமாவது விசனப்படுகிருேமோ? ஸம்ஸாரத்தில் என்னதான் பிரயத்தனப்பட்டாலும் அதது, அததன் பிரகாரமேதான் நடந்து தீரும். அதை யாராலும் தடுக்க முடியாது. நம் கடமையைச் செய்துகொண்டு போகவேண்டியது; அவ்வளவுதான் நம் கையால் ஆகக் கூடியது. அதன் பலாபலன்களைக் கண்டு வீணுக நம்மை நாமே நொந்துகொள்வதில் பிரயோஜனம் இல்லை. நல்லதோ கெட்டதோ எதுவாயிருந்தாலும் சகஜமாக எண்ணி அதை அநுபவிக்கச் சக்தி இருக்கவேண்டும். கொஞ்சங் கொஞ்சமாக, படிப்படியாக இராப்பகல் இப்படிச் செய்யப் பழகிக் கொள்ளவேண்டும். மனசு ஒரு மாதிரி இருந்தால் உடனே நம்மைச் சமாளித்துக் கொள்ளவேண்டும். 'ஸம்ஸார சுகதுக்கம், பலாபலன் – இவைகளுக்கும் நமக்கும் ஸம்பந்தமில்லை. இந்த ஸம்ஸாரம் வேறு; நாம் வேறு. ஜன்ம ஜன்மாந்தரமாக இதற்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம் இருந்தது? பின்ருல் வரப் போகிற காலத்தையும் யோசித்தோமாளுல், இந்தச் சுகதுக்கம், நன்மை தீமை, லாப நஷ்டம் எல்லாம் எந்த மூலை?' என்று உறுதி ஏற்படவேண்டும். 'எங்கே எத்தனைநாள் இருந்தாலும் சிரமப்பட்டாவது நம் காரியத்தை நாமே பூர்த்தி

செய்துகொள்ளவேண்டும். வேறு எதன்மேலும் கவனம் செலுத்தக் கூடாது. எப்போதும் சிரித்த முகமாக இருக்கவேண்டும், அதனால் சுற்றுப்பட்டவர்களுக்கும் ஸந்தோஷம் உண்டாகும். எல்லாரும் சுகமாக வாழவேண்டும்.' இதுதான் என் கோரிக்கை. என்னால் முடிந்தவரை சிரித்தமுகமாக, சலிப்பில்லாமல் அப்படி நடந்துகொள்ளப் பார்க்கிறேன். அப்படியும் விபரீதம் நேர்ந்தால், அதைப் பற்றி எனக்கு என்ன வந்தது? நல்ல காரியங்கள் செய்தால் தான் வாழ்க்கை ஈடேறும்; பலன் ஈசுவரன் கையில் இருக்கிறது. கடமையைச் செய்வதோடு திருப்தி அடைய வேண்டும். அதனால் பலன் ஏற்படாவிட்டாலும் ஸந்தோஷமாகத்தான் இருக்கவேண்டும் — அதற்கு ஒரே வழிதான் உண்டு: சகலவிதமான ஆசைகளையும் மனசை விட்டு அகற்றிப் பற்றில்லாமல் இருப்பதுதான்.

[1899] ரவி

21

ஓம்

சின்னி!

இன்று அலாஹாபாத் வந்து சேர்ந்தேன். ஸுஸியையும் அவள் தாயையும் பார்த்தேன். ஸுஸியும் வருவதாக ஒப்புக்கொண்டாள்; அவள் தாயும் சம்மதித்து விட்டாள். கல்கத்தா வழியாகவே சிலாயிதஹ் போகிறதாகத் தீர்மானித்து விட்டேன். நான் நினைத்ததுபோல் தடங்கல் எதுவும் நேரவில்லை. விஷயத்தைத் தெளிவாகச் சொன்னதும் இரண்டு பேரும் சம்மதித்து விட்டார்கள். நாளைக்கு அடுத்த நாள் — அதாவது சனிக்கிழமை — இதை விட்டுப் புறப்படுவோம். நல்ல வேளை, ஸுரேன் மொகல்ஸராயியிலிருந்து என்னோடு

வந்தான்; இல்லாவிட்டால் தன்னந்தனியாக இந்த ஹோட்டலில் விழுந்துகிடக்க வேண்டியதுதான்; இத்தனை நாள் இங்கே எப்படியடா கழிப்பது என்று சிரமப்பட்டிருப்பேன். கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு வரும்போது உடம்பு சரியாகவே இல்லை எனக்கு; அன்றைக்குப் பத்துக் கிரெயின் கொயினா சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டேன். வருகிற வழியிலேயே மிகவும் குணந்தான். இப்போது உடம்பில் அசதியே இல்லை.

நேற்று ராத்திரி வண்டி புறப்பட்டதும், விளக்கைப் படுதா போட்டு மறைத்து இருட்டாக்கி விட்டேன். வெளியில் ஜம்மென்று நிலாக் காய்ந்து கொண்டிருந்தது. வண்டியில் நான் ஒருவன்தான். என் மனம் ஒருவித இனிமையில் ஆழ்ந்திருந்தது. நீ அப்போது எங்கே இருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்? மொட்டை மாடியில் இருந்தாயா? உள்ளே இருந்தாயா? என்ன யோசனை பண்ணிக் கொண்டிருந்தாய்? வெள்ளிய தண்ணிலவைப் போலவே என் உள்ளமும் உங்கள் எல்லோர் மீதும் பரவி நின்றது. ஆசை, வேதனை இவற்றின் வெறி அதில் இல்லை. இன்பமும் துயரமும் கலந்து, சுபம் நிரம்பிய ஓர் இனிமைமட்டும் இருந்தது.

[அலாஹாபாத், 1900] ரவி

ஸ்ஹி: கவியின் தமையனார் புதல்வர் பலேந்திர நாதரின் மனைவி.

22

ஓம்

சின்னி!

நேற்று உன்னிடமிருந்து கடுதாசே கிடைக்கவில்லை. இன்றைக்குக் கூட வராவிட்டால் தந்தி

அடிக்கலாமா என்று இருந்தேன். அப்புறம் ஸ்நானம் பண்ணிவிட்டு வந்ததும் உன் கடிதம் கிடைத்தது. ஆனுல் அதில் நேற்றுக் கடுதாசு போடாததைப் பற்றி ஒரு சமாசாரமும் ஏன் எழுத வில்லை? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

நேற்று நகேந்திரனைப் பிரிய பாபு அழைத் திருந்தார்; நானும் அவனோடு போய் இருந்தேன். நேற்றுச் சுமார் ஒரு மணியிலிருந்து ராத்திரி ஏழரை வரைக்கும் 'ரிஹர்ஸல்' (ஒத்திகை) நடந்தது. அதற் கப்புறம் பிரிய பாபு வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுத் திரும்ப ராத்திரி அதிக நாழி ஆகிவிட்டது.

நீது நேற்று ராத்திரி தூங்கினுன். அவனுக்கு வயிற்று வலி தேவலை. இன்றைக்கு 100 டிகிரிக்குக் கிட்டத்தட்ட இருந்தது ஜுரம். 'லிவ'ரைப் பரிசோதித்துப் பார்த்தார் டாக்டர். இப்போது மிகவும் குறைந்துதான் இருக்கிறது என்கிருர்.

இன்று சாயங்காலந்தான் எங்கள் ஆட்டம். டாக்டரும், பாவம், பார்க்கவேண்டும் என்று ஆசைப் பட்டார். அவருக்கும் ஒரு டிக்கட்டு கொடுத்திருக் கிறேன். நகேந்திரனும் வருவான். டாக்டரும் அவனும் நாளைக் காலையே புறப்பட்டுப் போய் விடுவார்கள். நகேந்திரனை இங்கேயே நிறுத்தி வைத்துக்கொண்டு விட்டால் மற்றக் காரியமெல்லாம் கெட்டுப் போய்விடும்.

கிரிச் வந்திருந்தான். வெள்ளைக்காரச் சமையல், நம் சமையல் இரண்டும் நன்ருகப் பண்ணத் தெரியும் அவனுக்கு. கொஞ்சம் சம்பளம் அதிகமாயிருந்தாலும் பரவாயில்லை; சாப்பாட்டைப் பற்றிக் கவலையே வேண்டாம். உன் அபிப்பிராயம் என்ன?

இந்தத் தடவை திரும்பி வந்ததும் நதியிலேயே காலங் கழிக்கலாம் என்று பார்க்கிறேன். அது

உனக்கும் பிடித்து இருக்கும். அதற்குள்ளே நீதுவும் உடம்பு குணமாகி எழுந்துவிட்டானுனல் பரவா யில்லை; அவனை மதுபுருக்கு அனுப்பிவிட்டு நிச் சிந்தையாக இருக்கலாம்.

உன் தாய்க்கு, 15 ரூபாய் அனுப்பச் சொல்லி யிருக்கிறேன் யதுவை.

விபினுக்கும் உடம்பு தேவலை. இன்னுங்கூடக் குனிந்து வேலை செய்ய முடியவில்லை அவனுல். ஆனுலும் எழுந்து நடமாடுகிருன். இன்னும் இரண்டு நாளில் ஆள்காரர் யாராவது சிலாயிதஹ் போவார்கள். புதிதாக வந்த பையன் எப்படி வேலை செய்கிருன்? இன்றைக்கு முதல் தேதி. தைமீ' 7-ஆம் தேதி வரவேண்டியதை இன்னும் ஆரம்பிக்கக் கூட இல்லையே என்றுதான் கவலையாக இருக்கிறது. நாளைக்கு எப்படியாவது அதை எழுத உட்கார்ந்து விடவேண்டும்.

[கல்கத்தா, டிஸம்பர் 15, 1900] ரவி

யது : யதுநாத் சட்டோபாத்யாயர்; மணியகாரர்.

விபின் : கவியின் பழைய வேலையாள்.

'ஸங்கீத ஸமாஜ'த்தில் 'முதல் கோணல் முற்றுங் கோணல்' என்ற நாடகத்தின் ஒத்திகை நடந்துகொண் டிருந்தது அப்போது.

23

ஓம்

இின்னி!

மத்தியான்ன வேளையில்தான் என்னைப்பற்றிக் கொஞ்சமாவது நினைக்கிருயாக்கும்! அப்புறம் சாயங் காலத்திலே என்னைப்பற்றி எண்ணமே இல்லைபோல் இருக்கிறது? சூரியன் மறைந்ததும் நானும் அஸ்த மித்து விடுகிறேன் என்பது உன் அபிப்பிராயமா? உன் மனசில் தோன்றுகிறதையெல்லாம் நீ ஏன்

எழுதக் கூடாது? இந்த இரண்டு மூன்று தடவையாக உன் கடுதாசைப் பார்த்ததும் எனக்கு ஒரு மாதிரியாகி விட்டது. அது இன்னது என்று சரியாக ஆராய்ந்து சொல்ல முடியவில்லை. ஆனால் எதையோ மறைக்கிற மாதிரி இருக்கிறது? இருக் கட்டும். இருதயத்தில் இருக்கிற நுட்பமான மர்மங்களை ஆராய்ந்து பார்ப்பதில் பிரயோஜன மில்லை. எல்லாவற்றையும் சகஜமாக எண்ணிப் பொறுத்துக்கொண்டு போகவேண்டியதுதான்.

இன்று நீதுவுக்குக் குணந்தான். கொஞ்சம் ஜுரம் இருக்கிறது. **பிரதாப் பாபு**, 'அமாவாஸை போகட்டும்; ஜுரம் நின்றுவிடலாம்' என்கிறார். அது நின்றதும் உடனே மதுபுருக்கு அவளை அனுப்பி விடவேண்டும் என்பது அவர் அபிப்பிராயம். நானும் அப்படித்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். லிவர் எவ்வளவோ குறைந்து இருக்கிறது; வலியும் தேவலை.

என்மேல் உனக்குக் கோபம் மாதிரியும் என்னைக் கண்டபடி நீ திட்டுகிறது போலவும் நேற்று ராத்திரி முழுவதும் கனா. கனாத்தான் காண்கிறோமே நல்ல கனா வரக்கூடாதா? ஸம்ஸாரத்தில்தான் வாஸ்தவமாகவே எவ்வளவோ சச்சரவு இருக்கிறது; அது போதாது என்று கனவுலகில்கூட இந்தச் சண்டை வந்து விட்டால் சகிக்க முடிகிறதில்லை. அந்தக் கனா ஞாபகமே, இன்று காலையில்கூட மனசு ஒரு மாதிரி யாக இருந்தது. அதோடு இன்று காலை முழுவதும் எத்தனையோ பேர் வந்துவிட்டார்கள். தைமீ 7-ஆம் தேதி வரவேண்டியதை எழுதவிட்டால்தானே? இன்று காலை குளிக்கும்போது 'நைவேத்ய'த்தில் இரண்டு பாட்டு எழுதி முடிந்தது; அவ்வளவுதான்.

[கல்கத்தா, டிஸம்பர், 1900] ரவி

பிரதாப் பாபு: ஹோமியோபதி டாக்டர் பிரதாப சந்திர மஜும்தார்.

24

ஓம்

3587

சின்னி !

பெரியதோ சின்னதோ, நன்ருயிருக்கிறதோ இல்லேயோ, பிரதிதினமும் ஒரு கடுதாசு எழுது வதற்கு என்ன? தபால் வரும் நேரத்திலே ஒரு கடுதாசும் வராவிட்டால் வெறிச்சென்று இருக் கிறது. இன்று உன் கடுதாசுக்காகவே காத்துக்கொண் டிருந்தேன். ரதி வருவானே இல்லேயோ என்று இன்று காலேயில் வரும் கடிதத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமென்றிருந்தேன். எது எப் படியோ? கடுதாசு வராவிட்டால் என் மனசு எப்படி இருக்கும்? அது உங்களுக்குத் தோன்ற வேண்டும்! நாளே ஸாயங்காலம் நாங்கள் போல்புருக்குப் புறப் பட்டுப் போவதால் நீ இதற்குப் பதில் எழுத வேண் டாம். ஒரு நாள் 'ஹாய்' என்று இருக்கலாம் நீ! ஞாயிற்றுக்கிழமை காலே அங்கே வந்ததும் உன் கடிதம் ஒன்ருவது கிடைக்குமென்று நம்புகிறேன். சனிக்கிழமை நாங்கள் சாந்திநிகேதனத்தில் இருப் போம். அன்றைக்கு எனக்குக்கூடக் கடுதாசு எழுத அவகாசம் இராது.

காரியஸ்தர் தம்பி ஸமாசாரம் என்ன ஆயிற்று? நீதுவின் லிவரைப் பரிசோதித்துப் பார்த்தார்கள்: நன்ருகக் குறைந்துவிட்டதாம். இனிமேல் இருமலும் ஜுரமுந்தான் நிற்கவேண்டும். நின்றதும் அவனே மதுபுருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். கொஞ்சங் கொஞ்சமாகத்தான் ஜுரம் மட்டுப்பட்டுக் கொண்டு வருகிறது. அமாவாசை கழிந்ததும் விட்டு விடும் என்று பார்க்கிருேம்.

உங்கள் தோட்டம் எப்படி இருக்கிறது? ஏதாவது பலன் கிடைக்கிறதா? கொத்தவரங்காய்

காய்க்க எத்தனை நாள் பிடிக்கும்? அன்றன்று தூரவில் ஜலம் இறைக்கிறுனு படிக்? ஜலம் சுத்தமாயிற்ரு? பரிசாரகப் பிராமணனும் சமையற்காரியும் ஒற்றுமையாக இருக்கிறுர்களா? விமலாவைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன? சீக்கிரம் எழுது. எவ்வளவோ தடங்கல்களுக்கு நடுவில் தை 7-ஆம் தேதி படிக்கவேண்டிய அந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கிறேன்; இன்னும் முடிந்தபாடில்லை. இப்போது அதை எழுதுவதற்குத்தான் போகிறேன்.

[கல்கத்தா, டிஸம்பர், 1900] ரவி

25

ஓம்

ஸினி!

இன்றைக்கு ஒரே நாளில் உன் இரண்டு கடிதங்களும் கிடைத்தன. ஆனல் பதில் எழுத அவகாசம் இல்லை எனக்கு...இன்று போல்புர் போகவேண்டும். அப்பாவுக்கு நான் எழுதினதைப் படித்துக் காட்டினேன். அவர் இரண்டோர் இடத்தை விஸ்தாரப் படுத்தி எழுதச் சொன்னர். அதை எழுதி முடித்தாக வேண்டும். கொஞ்ச நேரந்தான் இருக்கிறது.... என்னைச் சௌக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நீ அதிகமாகப் பாடு படாதே! ஆந்தரிக அன்பு இருந்தாலே போதும். வாஸ்தவமாகவே உனக்கும் எனக்கும் எல்லா விஷயத்திலும் ஒற்றுமை இருந்தால் நல்லதுதான். ஆனலும் எல்லாம் நம் இஷ்டத்தைப் பொறுத்ததா? நீ என்னேடு எல்லா விஷயத்திலும், கல்வி ஸம்பந்தமாகக்கூட ஒத்துழைத்

தாயானல் எனக்கு ஸந்தோஷமாகத்தான் இருக்கும். நான் தெரிந்துகொள்வதை உனக்கும் சொல்லலாம்; ஏதாவது கற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் உன்னேடு சேர்ந்து கற்றுக் கொள்ளலாம்; அப்போது எனக்கு இன்னும் ஸந்தோஷமாகவும் இருக்கும். வாழ்க்கையில் நாம் இருவரும் சேர்ந்து எல்லா விஷயத்திலும் முன்னேற்றமடைய முயலவேண்டும். எந்த விஷயமாய் இருந்தாலும் சரி, உன்னை விட்டு விட்டு முன்னேற எனக்கு இஷ்டமில்லை. ஆனல் உன்னை வற்புறுத்தவும் எனக்கு மனசு வர வில்லை. அவரவர்களுக்குரிய சொந்த அபிப்பிராயமோ, இஷ்டமோ, அதிகாரமோ அவரவர்களுக்கு உண்டு. என் மனேபீஷ்டத்திற்கு ஏற்றபடி உன் சுபாவத்தை மாற்றிக்கொண்டு போகிறது என்னவோ சாத்திய மல்ல. ஆகவே, அதைப்பற்றி இனிமேல் கொஞ்சங் கூடக் கவலைப்படாதே! என்மேல் அன்பு செலுத்தி உன் கடமையைச் செய்து வா; என் வாழ்வு இனிமை யுறும். எனக்கு அநாவசியமான தொந்தரவு நேராதபடி பார்த்துக் கொண்டாலே போதும்; அதுவே பெரிய பாக்கியம் என்று எண்ணுவேன்.

[கல்கத்தா, டிஸம்பர், 1900] ரவி

வங்காப்தம் 1307ல் 10-ஆம் தைத் திங்கள் கொண்டாட்டத்தின்போது 'பிரம்மமந்திரம்' என்ற ஒரு கட்டுரை படித்தார். ஒருவேளை அதுவாக இருக்கலாம், இங்கே குறிக்கும் விஷயம். தை 1-ஆம் தேதி அதை எழுத ஆரம்பித்தார். 6-ஆம் தேதி போல்புருக்குப் புறப்பட்டுப் போனர், 7-ஆம் தேதி அங்குள்ள ஆலயத்தில் இதைப் படிக்கப் போகிருர்.

26

ஓம்

இன்னி!

நேற்று வீட்டுக்குத் திரும்பும்போது டங் டங் என்று மணி பன்னிரண்டு அடித்தது. காலையில் பாட்டுக் கற்றுக் கொடுக்கிறதை யெல்லாம் முடித்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டு **நாட்டோர்** அரண்மனைக்குப் போயிருந்தேன், அமலாவைப் பார்த்து வர. அங்கே ஹேச், நாட்டோர் ராஜா படம் எழுதிக் கொண்டிருந்தான். ராணியின் படமும் கொஞ்சம் எழுதி வைத்திருந்தது. அமலாவுடன் பேசிக் கொண்டே கடுதாசு எழுதினேன். அமலா, "இதோ அகப்பட்டுக் கொண்டுவிட்டீர்கள்; இனிமேல் விடுவேனு? ஸங்கீத ஸம்பந்தமாக ஏதாவது பேசலாம். எங்கள் வீட்டுக்கு வாருங்கள்" என்ருள். இன்று மூன்று மணி சமயத்துக்கு, **பிர்ஜ்ஜிதலாவி**லுள்ள அவர்கள் வீட்டுக்குப் போகவேண்டும். அங்கே தித்திப்புப் பக்ஷணமெல்லாம் சாப்பிட்டுவிட்டு அப்புறம் இனிய ஸம்பாஷணையில் ஈடுபடவேண்டியது. நாட்டோர் அரண்மனையிலிருந்து **ஸரளா**வைப் பார்க்கப் போனேன். அவள் வீட்டில் இல்லை; **தாரக்** பாபுவும் 'ஞஅக்காவும் இருந்தார்கள். அக்கா, "நாளைக் காலை வந்து இங்கே சாப்பிட்டு விட்டுப் போயேன். ஸரளாவுக்கும் பாட்டுச் சொல்லிக் கொடுக்கலாம்" என்ருள். 'சரி' என்று ஒப்புக் கொண்டேன். தாரக்பாபு, "சாப்பிடுவதற்கு முன்ஞலே எங்கள் வீட்டுக்கு வாயேன். அந்தப் புரி வீடு விஷயமாகப் பேசலாம்" என்ருர். அதற்கும் 'சரி' என்று தலையை ஆட்டினேன். இன்று காலை ஸ்நானம் பண்ணிவிட்டு முதலில் தாரக்பாபுவையும் அப்புறம் 'ஞஅக்காவையும் அதற்கப்புறம் ஸுரேனையும், கடைசியாக அமலாவையும் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து மாசி 11-ஆம் தேதிப் பாட்டைப்

பழகவேண்டும். அப்புறம் ராத்திரி 'ஸங்கீத ஸமாஜ'த்துக்குப் போய்விட்டு 12-மணிக்குப் படுக்கச் செல்லவேண்டும். அந்தப் பக்கம் மப்பும் மந்தாரமுமாயிருக்கிறது. ராத்திரி கொஞ்சம் தூற்றல் போட்டது. மறுபடியும் பெய்யும்போல் மூட்டம் போட்டிருக்கிறது. குளிர் நாளில் இந்த மாதிரி இருந்து நான் பார்த்ததே இல்லை! அங்கேகூட இப்படித்தான் இருக்கிறதோ என்னவோ? இந்த நாளில் மழை பெய்தால் உங்களுக்கெல்லாம் பிடிக்காது; வாஸ்தவந்தான். நானோ நாள் முழுவதும் சுற்றிக்கொண்டே காலங் கழிக்கிறேன். அதைப் பற்றி யோசிக்க அவகாசங்கூட இல்லை எனக்கு. சாயங்காலம் உடம்பு ஓய்ந்தாற்போல் இருக்கும்போது தான் உங்களைப்பற்றி எண்ணம் வருகிறது. வண்டி கல்கத்தா ஜனசந்தடிக்கு நடுவிலே போய்க்கொண்டிருக்கும். சிலாயிதஹ் வீட்டைப் பற்றித்தான் எண்ணமிட்டுக் கொண்டிருப்பேன் அப்போது. கல்கத்தா தெருவில் வண்டியில் போகிறபோதும், நடுராத்திரி படுக்கையில் படுக்கிறபோதுந்தான் உங்களைப் பற்றி நினைக்க அவகாசம் இருக்கிறது. மற்றச் சமயங்களில் ஒரே குழப்பந்தான். இன்று உன் கடுதாசு கிடைப்பதற்கு முன்னேயே வெளியே போக வேண்டியிருப்பதால், காலை எழுந்ததுமே உனக்கு இந்தக் கடிதம் எழுதி வைத்துவிடுகிறேன். அப்புறம் குளிக்கப் போகவேண்டும். குளித்தவுடனே ஓடவேண்டியது தான். அன்று **ஸத்யன்** குழந்தைகளைப் பார்த்தேன். சின்னஞ் சிறுக்க மத்து மதுக்கென்று இருக்கிறார்கள். பார்க்கப் பார்க்க ஸந்தோஷமாக இருந்தது. **பெரிய அக்கா** 11-ஆம் தேதிக்கு முன்னாலேயே புறப்பட்டு வருகிறாள். **ககன்** வீட்டார்கூட மாசிமீ 10-ஆம் தேதி வருவார்கள். மறுபடியும் வீடு கலகல என்று நிரம்பி இருக்கும். ககன் அகத்தில் எலெக்ட்ரிக் விளக்குப் போடப் போகிறார்கள். அங்கே போட்டு

முடிந்த கொஞ்ச நாளுக்கெல்லாம் நம் காலி வீட்டிலும் மின்சார விளக்கு எரிய ஆரம்பிக்கும்.

[கல்கத்தா, ஜனவரி, 1901] உன் ரவி

நாட்டோர் : காலஞ்சென்ற நாட்டோர் மகாராஜா ஜக திந்திரநாதர்.

அமலா : தேசபந்து சித்தரஞ்ஜன் தாஸின் சகோதரி.

ஹேச் : மய்மன்ஸிங் ஓவியன் சசி ஹேச்.

ஸரளா : கவியின் மருமகள், (தமக்கை புதல்வி) ஸரளா தேவி சௌதுராணி.

தாரக் பாபு : தாரக் பாலித்.

'ஹ அக்கா : கவியின் தமக்கை ஸ்வர்ண குமாரிதேவி.

பெரிய அக்கா : கவியின் மூத்த தமக்கை ஸௌதாமினி தேவி.

ககன் வீட்டார் : கவியின் சகோதரர் புதல்வர் ககனேந் திரநாத் முதலியோர்.

27

ஓம்

சின்னி !

நேற்று ஸுரேன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவனுக்கு உடம்பு சற்றுச் சுமார்தானும். பிரதாப் மஜூம்தார்தாம் அவனுக்குச் சிகித்ஸை செய்கிறார். நாளைக்கு அமாவாசை ; அது கடந்தால்தான் ஜுரம் நிற்கும்போல் இருக்கிறது. நேற்றைக்குக்கூட நடுமன்னி, பேலாவையும் ரேணுகாவையும் அழைத்து வரக்கூடாதா என்று எத்தனையோ தரம் கேட்டாள். பிபி அகத்தில் அவர்களுக்கு ஓர் அசௌகரியமும் இராதபடி பார்த்துக்கொள்வார்கள் என்றெல்லாம் சொன்னாள். உனக்கு என்ன தோன்றுகிறது ? அவர்கள் இவ்வளவு வற்புறுத்திக் கூப்பிடும்போதும் வராவிட்டால் அவர்களுக்கு வருத்தமாக இருக்கும்.

குழந்தைகள் மேலே அவ்வளவு உயிராக இருக்கிருர்கள். இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்று 'ரிஸர்வ்' பண்ணச் சொல்லி நகேந்திரனேடு ராணி, ரதி, பேலா மூன்று பேரையும் அனுப்பினுயானுல் தேவலே. 9-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று புறப்பட்டு வரட்டும். மாசி 11-ஆம் தேதி நாடகத்தைப் பார்த்து விட்டு நீதுவோடு திரும்பிப் புறப்பட்டுப் போகலாம். 'எந்த ரெயிலுக்கு வருவார்கள்?' என்று மன்னி கேட்கச் சொன்னுள். அவர்களே அழைத்துவர வண்டி அனுப்புகிருளாம். வருகிறது நிச்சயமானுல் தந்தி கொடு. இல்லாவிட்டால் வரவில்லேயாக்கும் என்று எண்ணிக்கொள்கிறேன். இரண்டு மூன்று நாள்தான் பேலா பிபி அகத்தில் இருக்கட்டுமே! அதில் என்ன தப்பு? எதுவோ - உனக்கு எது நல்லது என்று படுகிறதோ அதைச் செய். தாதி அகப்படுகிருளாம் — மன்னி சொல்லச் சென்னுள். சீக்கிரம் அனுப்புவாள் போல் இருக்கிறது. தையல் முதலிய வேலேயெல்லாம் தெரிந்த நல்ல குடும்பத்துக் கிறிஸ்துவத் தாதிகூட அகப்படுகிருளாம். இஷ்டமானுல் சொல்லு: சம்பளம் 8 ரூபாய்தானும். இந்தமாதிரித் தாதி அகப்பட்டால் உனக்குப் போதுமோ இல்லேயோ? இந்தத் தடவை படகிலேயே நாம் காலங்கழிக்கலாம். அங்கே ஆள்காரனேப்பற்றி அவ்வளவாகக் கவலே இல்லே; தபஸி மீனுக்கும் குறைவில்லே. படகோட்டிகளும் இருப்பார்கள்; உன் படிக், புடே எல்லோரும் கூட இருப்பார்கள். விபின் இருப்பான். குப்பைக்காரனும் இருப்பான். நிம்மதியாக வசிக்கலாம். விளக்கு ஏற்றுகிற தொந்தரவும் இராது; ஜலம் தூக்க வேணுமேயென்ற கவலேயும் இல்லே; வீடு பெருக்க வேண்டிய அவசியமும் இராது. குளித்துக் கொண்டும் சாப்பிட்டுக்கொண்டும் திரிந்துகொண்டும் தூங்கிக்கொண்டும் இருக்கலாம். நேற்று ராத்திரி கூடப் பன்னிரண்டு மணிக்குத்தான் திரும்பிவந்தேன்.

நாள் முழுவதும் அலைச்சல்தான். இன்று காலையில் சிலபேர் என்னைப் பார்க்க வந்திருந்தார்கள். பாட்டுக் கற்றுக் கொடுக்கிற தொல்லை யெல்லாம் ஓய்ந்ததும் சாப்பிட்டு விட்டு உனக்கு எழுத உட்கார்ந்தேன். இதோ இப்போதே 'ஸங்கீத ஸமாஜ'த்தார் அவர்கள் 'ரிஹர்ஸலு'க்கு என்னை அழைத்துக்கொண்டு போக வந்து விடுவார்கள். அங்கே நாலு மணி வரைக்கும் கத்தி விட்டு, ஸூரேனைப் பார்க்கப் போகவேண்டும், பாலிகஞ்ஜூக்கு. அங்கிருந்து ஸரளாவை அழைத்துக் கொண்டு வந்து பாட்டுச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்குள்ளே மணி ஒன்பதாகி விடும். அப்புறம் ஸங்கீத ஸமாஜத்தில் மறுபடியும், 'ரிஹர்ஸல்'. அது முடிய ராத்திரி பன்னிரண்டு மணி ஆகிவிடும். சைதன்ய பாகவதரை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். விபின் சகலாத்தும் ஜமுக்காளமும் கொண்டுவந்திருக்கிறான். சகலாத்து எதற்காக எடுத்துவந்தான் என்றுதான் எனக்குப் புரியவில்லை. பல அலுவல்களுக்கு நடுவில் சற்று அவகாசம் இருந்தது; ஆற அமர யோசித்து எழுத முடியவில்லை. அவசர அவசரமாக எழுதித் தள்ளவேண்டியதாயிற்று.

[கல்கத்தா, ஜனவரி, 1901] ரவி

ரேணுகா : கவியின் இரண்டாம் புதல்வி ; ராணி என்று அழைப்பது வழக்கம். ஸங்கீத ஸமாஜத்தில் 'விஸர்ஜன' (பலி) என்ற நாடகத்தின் ஒத்திகை நடக்கும் சமயம்.

28

ஓம்

சின்னி !

நேற்றுப் '**புண்யாஹம்**'* ; அந்தத் தடபுடலில் உனக்குக் கடிதம் எழுத முடியவில்லை. முந்தா நாள்

* வருஷத்தில் புதுப் பசலி ஆரம்பமாகும் நாள். ஜமீன் தார்களிடம் அன்று குடியானவர்கள் வந்து காணிக்கை செலுத்துவது வழக்கம்.

சாயங்காலம் சிலாயிதஹ் வந்து சேர்ந்தோம். வீடு வெறிச்சென்று இருக்கிறது. வெகு நாளுக்கப்புறம் அலைச்சல் எல்லாம் ஓய்ந்து வீட்டில் தன்னந்தனியே நிம்மதியாய் இருக்கலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், எத்தனையோ பேர் அடிக்கடி வளைய வந்த இடமோ இல்லையோ? எல்லோரும் ஒன்றாக வாழ்ந்த அடையாளங்கூட இன்னும் மறையவில்லை. அப் பேர்ப்பட்ட வீட்டில் தனியாக நுழைகின்றதென்றால், முதலில் பிடிக்கவேயில்லை. அதிலும் வந்த அலுப்பில் வீட்டில் நுழைந்ததும் அங்கே சுசுருஷை செய்யவோ, முகம் மலர்ந்து ஆதரவு காட்டவோ யாரையும் காண வில்லை. என் பாடு மிகவும் ஏமாற்றமாய்ப் போய் விட்டது. படித்துக்கொண்டிருக்கலாம் என்று பார்த் தேன்; முடியவில்லை. தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பவும் அந்த அறையில் நுழைந்தேன். கெரோஸின் விளக்கு வெளிச்சத்தில் அது இன்னும் வெறிச்சென்று இருந்தது. இரண்டாம் மாடி அறைக்குப் போனேன்; அதைவிடச் சூனியமாய் இருந்தது. கீழே இறங்கி வந்து விளக்கைத் தூண்டி மறுபடியும் படிக்கப் பார்த்தேன். ஒன்றும் பிடிக்க வில்லை. சீக்கிரமாகவே சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டு விட்டோம் - இரண்டாம் மாடி மேலண்டை அறையில் நானும், கீழண்டை அறையில் ரதியும். ராத்திரி வழக்கம்போல் குளிர்தான். சகலாத்துப் போர்த்திக் கொள்ள வேண்டியிருந்தது. பகலில்கூட ஒரே சிலுசிலுப்புத்தான். நேற்று மேள தாள சகிதம் உபாஸனை நடந்து புண்யாஹம் முடிந்தது. சாயங் காலம் ஜமீன் கச்சேரியில் பஜனைக் கோஷ்டி ஒன்று வந்திருந்தது; ராத்திரி பதினொரு மணி வரைக்கும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

உன் கறிகாய்த் தோட்டம் செழிப்பாயிருக்கிறது. ஆனால் செடிகள் மிகவும் அடர்த்தியாக இருப்பதால் ஓங்கி வளரவில்லை. பணம் அனுப்பும்போது உனக்குக்

கறிகாய் கொஞ்சம் அனுப்பி வைக்கிறேன். பூசுணிக் காயும் நிறையப் பறித்து வைத்திருக்கிறேன். நீது அனுப்பி யிருந்தானே ரோஜாச் செடி, அதெல்லாம் பூத்து இருக்கிறது. ஆனால் முக்கால்வாசி, காட்டு ரோஜாதான்: அவன் ஏமாந்து போய்விட்டான். நிலஸம்பங்கி, கந்தராஜம், மல்லிகை, ஜிமுக்கி, மேதி எல்லாம் பூத்து இருக்கின்றன. 'ஹாஸுஹானு'ச் செடிகூடப் பூத்துத்தான் இருக்கிறது. ஆனால் வாசனையே இல்லை. மழை நாளில் பூத்தால் வாசனை இராதோ என்னவோ?

இரண்டு சாவிகள் அகப்பட்டன. என் கற்பூர மர 'டிராயர்' சாவிதான் கிடைக்கவில்லை. அதில் ரதியின் ஜாதகக் குறிப்பு இருக்கிறது. அது சரியாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதை இந்தக் கடிதம் கிடைத்தவுடன் அனுப்பி வை.

நீது எப்படி இருக்கிறான்? எழுது. பிரதாப் பாபு பிரதிதினமும் அவனைப் பார்க்க வருகிறாரா? தவறாமல் மருந்து சாப்பிடும்படிக் கவனித்துக்கொள்.

குளத்தில் ஜலம் நிரம்பி இருக்கிறது. எதிரே யுள்ள கரும்புத் தோட்டம் ஓங்கி வளர்ந்திருக்கிறது. நாலு பக்கமும் எங்கே பார்த்தாலும் இடைவிடாமல் வயல்களில் பச்சைப் பசேலென்று பயிர் தழைத் திருக்கிறது. 'அம்மா எப்போது வருவாங்க?' என்று எல்லோரும் கேட்கிறார்கள். நாம் இங்கே திரும்பி வரமாட்டோம் என்று கேள்விப்பட்டதும் இங்கே இருக்கிறவர்கள் மூஞ்சி யெல்லாம் வாடிப் போய் விட்டன.

சரத்திடமிருந்து மறுபடியும் கடிதம் வந்ததா? அவனைப் பற்றி வேறு ஏதாவது தகவல் உண்டா? பேலா அவனுக்குச் சரியாகக் கடுதாசு எழுதுகிறாளா? எப்படி அழைப்பதென்று புரியாவிட்டால் நம் பழைய காலத்து ரீதியாக 'ஸ்ரீ சரண கமலங்களில்' என்று

எழுதினுல் தீர்ந்தது. அதே வழக்கப்படி எழுதினுல் ஒரு கவலையும் இல்லை. இங்கிருந்து ஏதாவது வேண்டுமானுல் எழுது : தயிர், மீன் எல்லாம் வாங்கி அனுப்புகிறேன்.

[சிலாயிதஹ், 1901] ரவி

சரத் : கவியின் மூத்த மாப்பிள்ளை, சரத் சந்திர சக்ரவர்த்தி.

29

ஓம்

சின்னி!

'புண்யாஹ'த் தடபுடல் எல்லாம் தீர்ந்தன. இப்போதுதான் மறுபடியும் எழுத ஆரம்பித்திருக்கிறேன். என் நல்ல காலம், எப்படியோ ஒரு விதமாக அதில் உத்ஸாகம் மூண்டுவிட்டால் பாதகமில்லை; அப்புறம் கரையிலிருந்து தண்ணீரில் குதித்துத் தப்பிய மீன் மாதிரிதான். இப்போது இங்கே தனியாக இருந்து பழகிப் போய்விட்டது எனக்கு. குடும்பத் தொல்லைகள் என்னைப் பாதிக்கவில்லை. என்மேல் குரோதம் பாராட்டுகிறவர்களை யெல்லாம் எளிதில் மன்னித்துவிட்டேன். உங்களுக்கெல்லாம் தனியாக இருக்க ஏன் பிடிக்கவில்லை என்பது இப்போதுதான் எனக்கு நன்ருகப் புரிகிறது. என் மனசில் கண்ட இந்த அநுபவத்தை நீங்களும் கொஞ்சமாவது உணரும்படி பண்ணமுடிந்தால் எனக்கு எவ்வளவு ஸந்தோஷமாக இருக்கும் தெரியுமா? ஆனுல் அது முடியாதே! கல்கத்தா ஜன சந்தடியை விட்டுத் திடீரென்று இதைப்போல் வெறிச்சென்றிருக்கும் இடத்துக்கு வந்தால் கொஞ்சநாள் வரைக்கும் உங்களுக்கெல்லாம் வாஸ்தவமாகவே பிடிக்கத்தான் பிடிக்காது. அப்புறம் பழகிப் போய்விட்டால்கூட

மனசுக்குள்ளேயே ஓர் ஏக்கம் இருந்துகொண்டுதான் இருக்கும். ஆனாலும் என்னதான் சொல்லு, கல்கத்தா சந்தடியிலே இருக்கும்போது வாழ்நாளே வியர்த்தமாகப் போய்விட்டமாதிரிதான் இருக்கிறது எனக்கு ; அதனால் சுபாவமே மாறிப்போய், எதற்கெடுத்தாலும், ஆக்ஷேபணை செய்துகொண்டுதான் இருக்கத் தோன்றுகிறது. எல்லோரையும் மனப்பூர்வமாக மன்னிப்பதோ, விரோதத்தை விட்டு விடுவதோ, மன நிம்மதியோ அங்கே சாத்தியமில்லை. ரதிக்கும் மற்றக் குழந்தைகளுக்கும், அங்கே சரியான படிப்பும் இல்லை. எல்லா விஷயத்துக்கும் சங்கடமாகத்தான் இருக்கிறது அங்கே. அதனாலேயே இந்த 'வனவாஸ தண்டனை'யை ஏற்று அநுபவிக்கலாம் என்கிறேன். ஸாமர்த்தியம் உண்டானால் நல்ல இடமாகப் பார்த்து வாங்கிக் கொள்ளலாம். ஆனாலும் கல்கத்தாவில் இருந்தேனே, என் சக்தியையெல்லாம் குழி தோண்டிப் புதைக்க வேண்டியதுதான் ! ஆகாயம் இருட்டிக்கொண்டு மேகம் திரண்டு வருகிறது ; தூற ஆரம்பித்திருக்கிறது. என்னுடைய கீழண்டை அறையில் நாலு பக்கத்துக் கண்ணாடிக் கதவையும் மூடிவிட்டு, மழை பெய்யும் காட்சியைப் பார்த்து அநுபவித்துக்கொண்டே உனக்குக் கடிதம் எழுதுகிறேன். அங்கே உன் இரண்டாம் மாடி அறையிலிருந்து பார்த்தால் கூட இவ்வளவு ஜோராக இராது. நாலு பக்கமும் பசும் வயல்களில் தாரை தாரையாகப் புது மழை பெய்வது எவ்வளவு அழகாயிருக்கிறது ! ....இங்கே உட்கார்ந்துகொண்டு 'மேக தூத'த்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுகிறேன். இன்று அடர் மழை பொழியும் ஓசையோடு இந்தக் காரிருளையும் என் கட்டுரையில் எப்படியாவது சித்திரித்துக் காட்டி விட்டேனானால்,—சிலாயிதஹ்ஹில் உள்ள என் பசும் வயல்களில் படிந்திருக்கும் இந்தக் கருமையை என்றும் நிலைக்கும்படிச் செய்ய

முடிந்தால்—எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் தெரியுமா? என் கட்டுரையில் பல விஷயங்களைப் பல தினுசாகச் சொல்லுகிறேன். ஆனாலும் அதில் இந்த மேகாடம்பரம் எங்கே? கிளைகள் ஆடுவது எங்கே? ஓயாமல் பொழியும் இந்த மழைத் தாரை தான் எங்கே? விண்ணும் மண்ணும் ஒன்ருனதுபோல் கருமை போர்த்திருக்கும் காட்சிதான் எங்கே? எவ்வளவு சகஜமாக இருக்கிறது அது? நீர், நிலம், வானம் எங்கும் பரவி, இந்த ஜனசந்தடியற்ற இடம் முழுவதும் எவ்வளவு அனுயாசமாக இன்று மழை பொழிகிறது! வேலை வெட்டி வெயில் ஒன்றும் இல்லாமல் மழையும் மப்புமாய் மத்தியான்னப்போது கழிந்துகொண்டே வருகிறது. ஆனாலும் என் கட்டுரையில் அதன் சின்னம் ஒன்றைக்கூட நிலைக்கப் பண்ண முடியவில்லையே என்னால்! என்றைக்கோ ஒருநாள் ஜனசந்தடியற்ற வீட்டில் எங்கேயோ உட்கார்ந்துகொண்டு நீண்ட ஓய்வு நேரத்தில் இதையெல்லாம் எழுதினேன் என்று அப்புறம் யாருக்குத் தெரியப்போகிறது? சற்று உரப்பாகத் தூற்றல் போட்டு விட்டு மழை ஓய்ந்துகொண்டு வருகிறது. கடிதத்தைத் தபாலுக்கு அனுப்ப வேண்டியதுதான் இனிமேல்.

[சிலாயிதஹ், ஜூன், 1901] ரவி

இதில் (......) இக் குறியிட்ட இடங்கள் அசல் கடிதத்திலேயே காணவில்லை.

'விசித்ரப்பிரபந்தம்' என்ற நூலில் 'நவவர்ஷா' என்ற கட்டுரையைக் காண்க.

30

ஓம்

இன்னி!

'புண்யாஹ'ப் பணத்தை இன்று அனுப்பலாமென்று பார்த்தேன். ஆனல் இன்னும் கொஞ்சம்

ரூபாய் வரவேண்டி யிருப்பதால் அனுப்ப முடிய வில்லை. நாளைக்கு அனுப்புவேன். மாம்பழம் எல்லாம் ஆகிவிட்டன. இன்னும் கொஞ்சமாவது அனுப்பி வை; இல்லாவிட்டால் என்பாடு திண்டாட்டமாய் விடும். மிதமான ஆகாரம்; அதனால் உடம்பு நன்றாக இருக்கிறது. சிலாயிதஹ்ஹில் பெயர்போன லால்மோஹனை*ப் பரிசாரகப் பிராமணன் பண்ணி யிருந்தான். எனக்கு ஆசையாக இருந்தாலும் அதைச் சாப்பிடவில்லை. தித்திப்புப் பண்டம் சாப்பிடாதிருந் தாலே உடம்பு நன்றாக இருக்கிறது; இல்லாவிட்டால் வயிறு கெட்டு விடுகிறது. குஞ்ஜனை என்னோடு அழைத்துக்கொண்டு வந்துவிட்டேனே; அங்கே சமையல் எல்லாம் எப்படி நடக்கிறது? இடிஇடிக் கிறுப்போல் விபின் பேசிக்கொண்டிருப்பான்; அவன் இங்கே இராததால் எல்லாம் நிச்சந்தடியாய் இருக் கிறது. இரைச்சல் இல்லாமல் அதன்போக்கில் காரியம் நடந்துகொண்டு வருகிறது: இப்போது மனசுக்கும் நிம்மதியாக இருக்கிறது. அவன் இருந்தா னானால், காரியம் நடக்கிற தடபுடலில் வீடே அதிர்ந்து போய் விடுகிற மாதிரித் தோன்றும்! அப்படி இப்படி யாருக்கும் மூச்சுவிடக் கூட அவகாசம் இல்லை என்று தான் படும். ஒரு வார்த்தையும் பேசாமல் எல்லாக் காரியத்தையும் சந்தடியின்றி ஒழுங்காகச் செய்து கொண்டுபோகவேண்டும். அப்போதுதான் எனக்குப் பிடிக்கும். இங்கே அதிக ஆர்ப்பாட்டமும் இல்லை; எல்லாம் வழக்கம்போல் செவ்வையாகவும் சரியாகவும் சுத்தமாகவும் நடக்கின்றன. அதோடு சீக்கிரமாகவும் சந்தடி யின்றியும் எல்லாக் காரியமும் ஆகின்றன; தனியாக இருப்பதில் ஒரு சுகம் இருக்கிறது; நாலு பக்கமும் காரியம் செய்கிற ஆர்ப்பாட்டமோ அதிக மாகச் சாமான்களோ வேண்டியிரா. இதனாலே மனசுக்கு நிம்மதி ஏற்படுகிறது. நான் ஒருவன் இருக்

---

* ஓர் இனிப்புப் பண்டம்.

கிறேன் என்று என்னைச் சுற்றித் தடபுடல்படுமே; அது இல்லாமல் 'ஹாய்' என்று இருக்கிறேன். இப்போதெல்லாம் என்னைச் சுற்றி யாரும் 'ஆஹா ஓஹோ' என்று ஆர்ப்பாட்டமோ கூச்சலோ போட்டு அலட்டிக் கொள்வதில்லை. இதனால் எனக்கு நிறைய அவகாசம் இருக்கிறது. காலை வேளையில் தவறாமல் இரண்டு மாம்பழம் சாப்பிடுகிறேன். மத்தியான்னம் சாப்பாடு; சாயங்காலமும் இரண்டு மாம்பழம்; ராத்திரி சூடாக லூசியும், பொரியலும். மிதமாகவும் ஒழுங்காகவும் சாப்பிடுவதால் பசியும் எடுக்கிறது; சாப்பிடவும் பிடிக்கிறது. புட்டி புட்டியாக மருந்து சாப்பிட வேண்டுமே என்கிற கவலையும் இல்லை. எப்படியோ ஒரு விதமாக எளிமையான வாழ்வு வாழப் பழகிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வாழ்வில் உள்ளூற இன்பம் காணமுடியாது; சாமான் வாங்குவதிலும், கூச்சலிலும், சண்டை சச்சரவிலும், கணக்கு வழக்குகளிலுமே பொழுது போய்விடும்; சுகமாகவோ ஸந்தோஷமாகவோ இருக்க நேரம் ஏது? நிம்மதியாக இருக்கவேண்டுமென்று நாம் பிரயத்தனப்படப் பட இருக்கிற நிம்மதியும் போய்விடும். வெளி விஷயங்களைக் குறித்துக் கவலை கொள்ளாமல், மனத்தைத் திடமாக்கப் பழகிக் கொள்ளவேண்டும்; அதுதான் மனுஷ்யனுக்குள்ள கடமை. சின்னஞ்சிறு விஷயங்களிலேயே வாழ்நாள் முழுவதும் அழுந்திக் கிடந்தால், பெரிய பெரிய காரியங்களை நிறைவேற்றுவது எப்படி? அவைகளை மறக்கவேண்டியதுதான்; அப்புறம் ஸம்ஸாரத்தில் ஸாதாரண விஷயமாயிருந்தாலும் பெரிய சிக்கலாகத் தோன்றும்; எல்லாருடனும் சண்டை மூளவேண்டியதுதான். இந்தச் சூழல் நடுவே ஏதாவது வழி - இடைவெளி - தெரியாதா என்றுதான் என் மனம் ஏங்குகிறது. வெறும் வெளியோ, காற்றோ, வெளிச்சமோ நான் விரும்பவில்லை? ஸம்ஸாரத்திலிருந்தும், அலுவல் ஆர்ப்பாட்டங்களிலிருந்தும்,

கவலை தொல்லைகளிலிருந்தும் மீளும் வழிதான் தேடு கிறேன். ஆகார ஆசார வியவகாரம் எல்லாம் எளிமையாகவும் அடக்கமாகவும் திட்டமாகவும் சுத்த மாகவும் இருக்கவேண்டும். சுற்றிலும் அமைதி யாய்க் கொஞ்சமாக இருந்தாலும் அதை வைத்துக் கொண்டே காலங் கழிக்கவேண்டும். 'டிராயிங் ரூமோ' (வரவேற்கும் வெளியறை), 'டைனிங் ரூமோ'(போஜனக்கூடமோ), நவாப் ரீதியோ கூடாது. ஒரு தவிசும், மடிப்புக் கட்டிலும் போதும். அமைதியும் ஸந்தோஷமும் நிலவும். யாரோடும் போட்டியோ பொருமையோ விரோதமோ கூடாது. இப்படி இருந்தால்தான் வாழ்நாள் ஸாபல்யம் அடைய இடமுண்டு. சரி; குளிக்கப் போகிறேன்.

[சிலாயிதஹ், 1901] ரவி

31

ஓம்

சின்னி !

...........இங்கே ஒரே இறுக்கமா யிருக்கிறது. உடம்பு ஒன்றுமில்லை; நன்ருகத்தான் இருக்கிறது. ஆனுல் ராத்திரி சரியாகவே தூங்கவில்லை. ராத்திரி அதிக நேரம் இருக்கும்; எழுந்து நிலாவில் வந்து உட்கார்ந்தேன். பனியே துளிக்கூட இல்லை. நேற்று அந்த மொட்டை மாடியில் உட்கார்ந்திருக்கும்போது அங்கே நீ எத்தனையோ நாள் சாயங்காலமும் ராத்திரி யும் உள்ளூற வேதனைப் பட்டுக்கொண் டிருந்த தெல்லாம் கவனம் வந்தது. நானும் இங்கே எவ் வளவோ வேதனை அநுபவித்திருக்கிறேன். ராத்திரி வெகு நாழிகைக்குமேல் இங்கே வந்து நிலாவில் உட் கார்ந்துகொண்டாயானுல் மறுபடியும் மெதுவாக மனம் உருகிக் கண்ணீர் வரும். இப்போதெல்லாம் பார்த்தால், ஸம்ஸாரமே வெறும் மாயை - கானல் நீர் - என்றுதான் எனக்குப் படுகிறது. பழைய

வருத்தம் ஏதாவது ஞாபகத்துக்கு வந்தால், உடனே தாமரை இலையில் நீர்போல் அது தானகவே நழுவி விடுகிறது. 'இன்னும் ஒரு நூறு வருஷம் போனல் நம்முடைய சுகதுக்கம், அந்யோந்யம் இந்த ஸங்கதியெல்லாம் எங்கே மறைந்து போகுமோ? யார் கண்டார்கள்?' என்று எனக்குள்ளேயே எண்ணிக் கொள்கிறேன். எல்லை இல்லாத இந்த நக்ஷத்திரமண்டலங்களைப் பார்த்துவிட்டுப் பிரபஞ்சத்திற்கே மௌன ஸாக்ஷியாக நிற்கிறனே, அவனையும் உள்ளூறக் கண்டு மகிழும்போது, இவ்வற்பமான க்ஷணநேர சுகதுக்கம் எல்லாம் சிலந்தி வலைபோல் சின்னபின்னமாகிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றன!

[சிலாயிதஹ், 1901] உன் ரவி

32

ஓம்

நின்னி!

குஷ்டியாவுக்கு வந்து சேர்ந்தேன். ஆனல் இங்கே வந்தும் ஒரு விஷயத்தில் ஏமாற்றந்தான். மைத்துனனைப் பார்த்தேன்; உங்கள் மதனியம்மாளைத் தான் காணவில்லை. அவளை நேற்றுக் காலையே காசியில், அவள் தாய் வீட்டுக்கு அனுப்பியாயிற்றும்; அதுதான் ஊரே இப்படி நிச்சிந்தையாக இருக்கிறது! அவள் கட்டில் மெத்தையெல்லாம் போட்ட பிரகாரமே கிடக்கின்றன. கொடியில் அவள் அழுக்குத் துணிகூட அப்படியேதான் தொங்கிக்கொண் டிருக்கிறது - ஆனல் அவளைத்தான் காணவில்லை. ஐயோ!

உன் தாயார் கீல் வாயுவினல் அவஸ்தைப்படுகிறள். சிலாயிதஹ்ஹில் இருந்த வரைக்கும் நன்றுகத்தான் இருந்தாள்; குஷ்டியா வந்ததும் கீல் வாயு பிடித்துக்கொண்டு விட்டது. உங்கள் கினுராம்

தெம்பாக மத்து மதுக்கென்று இருக்கிறான்; அவனைப் பார்த்ததில் மிகவும் திருப்தி. அவன் என்னோடு ஏதோ பேசவேண்டுமென்று அடிக்கடி வந்து பார்க்கிறான். அப்படியும் இப்படியும் அலைந்து கொண்டே இருக்கிறான். ஆனால் நான் கடுதாசு எழுதுவதைப் பார்த்துவிட்டு முகம் வாடிப் போய் விடுகிறான்.

கப்பலுக்காகக் காத்துக்கொண் டிருக்கிறேன். சாயங்காலம் சிலாயிதஹ்ஹுக்குப் புறப்பட்டுப் போகவேண்டும்.

கல்கத்தா புது வீட்டிலுள்ள அந்தப் புஸ்தக அலமாரி சாவி யாரிடம் இருக்கிறது? அதில் சில புஸ்தகம் எனக்கு வேண்டி யிருக்கிறது?

நேற்று நடு ராத்திரி கல்கத்தாவில் புயலும் மழையும் பலமாக இருந்தன; ஆனால் நான் புறப்படு கிறது என்றால்தான் அப்படித் தடபுடல் ஒன்றும் இல்லையே! இங்கே மூன்று நாலு நாளாக மழையே இல்லை. வெயில் கொளுத்துகிறது. இறுக்கமும் அதிகமாகத்தான் இருக்கிறது. சிலாயிதஹ் போய்ச் சேர்ந்ததும் அங்கே சணல் அழுகுகிற நாற்றத்தைத் தான் மோந்துகொண் டிருக்கவேண்டும்.

உன் தாய்க்கு மாத்திரை கொடுத்திருக்கிறேன். ஸத்யனுக்கும் கொடுத்தேன். **மனீஷா** முதலியவர் களெல்லாரும் இத்தனை நாளைக்குப் போல்புர் வந்து சேர்ந்திருப்பார்கள், நிச்சயமாக. நீங்களெல்லாரும் அங்கே காரியமும் கையுமாய் இருப்பீர்கள்! நன்றாக உலாவிவிட்டு வருகிறாயா? **ஜகந்நாதன்,** மனீஷாவிடம் உன் துணிமணி, பழம் பண்டம் எல்லாம் கொடுத்து அனுப்பி யிருப்பானென்று எண்ணுகிறேன்.

இன்றைக்குச் சாப்பிடும்போது என்பாடு திண் டாட்டமாய் விட்டது. உன் தாய் என்னைக்

கொஞ்சத்தில் விட்டால்தானே? வெகு நாளுக் கப்புறம், அவள் தொந்தரவு சகிக்காமல் மீன் குழம்பு சாப்பிட்டேன். ஆனால், வாயண்டை கொண்டு வரக் கூடப் பிடித்தால்தானே, அதன் வாசனை? பிரதிதினம் ஒரு ரூபாய் கொடுத்து ஒரு சமையற்காரப் பிராமணனை ஏற்பாடு பண்ணி, கூடவே அவனையும் அழைத்து வந்திருக்கிறேன். கொஞ்ச நாள்தானே என்று அவ்வளவு சம்பளம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டேன். பிராமணனாகப் பிறந்துவிட்டேனே! விபின் கையால் எப்படிச் சாப்பிடுவது!

ரதி சரியாகப் படித்து வருகிறானா? நீதான் ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும்! இங்கே ....சரி. விடைபெற்றுக் கொள்கிறேன்.

உன் ரவி

[குஷ்டியா, சிலாயிதஹ் செல்லும் வழியில், 1901.]

மனீஷா: கவியின் தமையனார் ஹேமேந்திரநாதரின் பெண்களுள் ஒருத்தி. ஜகந்நாதன்: பழைய குமாஸ்தா ஒருவன்.

33

ஓம்

சின்னி!

இங்கே மாப்பிள்ளையின் வீட்டுக்கு வந்த பிற்பாடு எப்படி யெல்லாம் உடுத்துகிறேனென்று உன் பெண்ணைக் கேட்டுப்பார்! டாக்கா வேஷ்டியும் அங்க வஸ்திரமும் தவிர வேறெதையும் உடுத்துகிறதில்லை. நான் "சரத்தின் மாமனார், 'வங்கதர்சனத்தின் ஆசிரியர், பிரம்ம ஸமாஜத் தலைவர், உலகம் புகழும் பெருமை வாய்ந்த ரவி டாகுர்' என்று இங்கே இருக்கிறவர்களுக்கெல்லாம் தெரியும். நான் இருக்கிற ரீதியையும் உடுத்துகிற விதத்தையும் பார்த்து எல் லோரும் அப்படியே நிற்கிறார்கள். ஒவ்வொரு

நாளும் சாயங்கால வேளையில் எத்தனையோ பேர் இந்த வேடிக்கையைப் பார்க்கக் கூடிவிடுகிறார்கள். சரத்தின் அறையில் இடங்கொள்ளவில்லை! இனிமேல் டாக்கா வேஷ்டியையும் அங்க வஸ்திரத்தையும் விட்டுவிட வேண்டியதுதான்! இல்லாவிட்டால் அவர்கள் வருவதை நிறுத்தவே முடியாது. இப்படிக் கூட்டம் வரவர, சரத் பாடு திகிலாய் இருக்கிறது. உன் பேச்சைக் கேட்டாலே இந்த ஸங்கடந்தான்! இந்தத் தடபுடலில்தான் பேலாவின் நகைகூடக் காணுமல் போய்விட்டது! இனிமேல் உன் புத்தியைக் கேட்கவே கூடாது என்று தீர்மானித்து விட்டேன். அதனுல்தான் நம் ஹிந்து சாஸ்திரத்தில்கூட, 'ஸ்திரீ புத்தி பிரளயங்கரி' (பெண்புத்தி பின்புத்தி; நாசத்துக்கு ஹேது) என்று சொல்லியிருக்கிறது. சாஸ்திர கர்த்தாக்களின் மனைவிமார்கூட இப்படித்தான் தங்கள் புருஷர்களைக் கட்டாயப்படுத்தி டாக்கா வேஷ்டி உடுத்தச் சொல்லி இருப்பார்களோ? எனக்கு என்னவோ அப்படித்தான் படுகிறது.

பேலா இப்போது குடித்தனமாய் அமர்ந்து வீட்டுக் காரியம் எல்லாம் ஒழுங்காகச் செய்ய ஆரம்பித்துவிட்டாள். தட்டுமுட்டுச் சாமானெல்லாம் சரியாக அடுக்கி வைக்க இன்னும் கொஞ்சநாள் ஆகும். அவள் சோமுயும் கிளிஞ்சலும் போன இடம் தெரியவில்லை. அந்தப் படிப்பு அறை அவளுக்கும் பிடித்துத்தான் இருக்கிறது. சாயங்கால வேளையில் அங்கே சரத்தும் அவளும் சேர்ந்து 'குமார ஸம்பவம்' படிக்கப் போவதாக யோசனை. அது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்றுதான் எனக்குப் புரியவில்லை! சூரியோதயமாகி இன்று நாலுதிக்கும் சுப்பிரமாக இருக்கிறது. வந்து இரண்டுநாள் வரைக்கும் மப்பும் மந்தாரமுமாக இருந்தது; இறுக்கம் வேறே. புது இடத்திற்கு வந்து, அதிலும் புதுக்குடித்தனம் நடத்த ஆரம்பிக்கும்போது இப்படி மூட்டம்போட்டு

இருண்டு இருந்தால் மனசுக்குப் பிடிக்காமல்தானே இருக்கும்? இன்று அது நீங்கிவிட்டது. சூரிய வெளிச்சத்தில் எல்லாம் மகிழ்ச்சி பொங்க விளங்கு கின்றன. இதில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், இந்தக் கல்யாணமே ஆரம்பமாகி முடிகிறவரைக்கும், ஒவ்வொரு விஷயத்திலும் முதலில் சச்சரவும் தடங்க லுந்தான். அப்புறந்தான் எல்லாம் நீங்கிச் சரிப் பட்டது. வண்டி 'ரிஸர்வ்' பண்ணுகையில் என்ன நடந்தது ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ? புறப் படும்போது பிரமாதமாக மழை பிடித்துக்கொண்டு விட்டது. அப்புறம் போகப்போக ஒருவிதமாக ஓய்ந்தது. 'யாதொரு விக்கினமும் ஆபத்தும் இல் லாமல் இவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்தவேண்டும்; இவர்களுக்குள் மனஸ்தாபமோ வேற்றுமையோ ஏற்படக் கூடாது' — இதுதான் ஈசுவரனை வேண்டிக் கொள்கிறேன். சரத்தைக் கண்டால் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. வெளி ஆடம்பரம் ஒன்றும் இல்லை அவனிடத்தில்; இருந்தாலும் காட்டிக் கொள்வது இல்லை; அடக்கமாகத்தான் இருக்கிறான். வெட்கப்படு கிறான்; அதிகமாகப் பேசுகிறதில்லை. அதிலிருந்து எதையும் ஆழ்ந்து யோசிப்பவன் என்று தெரிகிறது. பேலாவிடம் அதிகப் பிரியமாகத்தான் இருக்கிறான்; போகப்போக இன்னும் பற்று ஏற்படும். சம்பாத்தி யத்தில் கருத்து உள்ளவன். சிரமப்பட்டு முன்னுக்கு வரக்கூடியவன். உறுதியோடு சுறுசுறுப்பும் இருக் கிறது ஆனால் தன் இஷ்டப்படி நடப்பவன்; ஜாக் கிரதை போதாது. ஸந்தேகப்படுகிற சுபாவம் இல்லை; துட்டு விஷயத்தில் அக்கறை இல்லை. அதைப் போட்ட இடத்தில் அப்படியே விட்டுவிட்டுப் போய் விடுகிறான்; தொலைத்து விடுகிறான். ஆனாலும் யார் மேலும் ஸந்தேகப்படுவதில்லை. புருஷரீதியாக இருக் கிறான். புருஷன் சுபாவப்படி எந்தக் கட்டுக்கும் அடங்காமல் இருக்கிறான். இதனால்தான் எனக்கு

அவனை அதிகமாகப் பிடித்திருக்கிறது. ....ன் இதற்கு நேர்மாறு. எல்லாவற்றையும் நூற்று நூற்றுக் கணக்குப் பண்ணிப் பார்ப்பான். பெண் பிள்ளைகளைப்போல் சின்ன விஷயமாயிருந்தாலும் அதை அக்கறையாகக் கவனிப்பான். பிறர் மேல் ஸந்தேகப்படுவான். தேனொழுகப் பேசத் தெரியும்; ஆனால் அதில் ஆந்தரிகம் இராது. சரத்திடத்தில் இந்த வெளிப் பகட்டெல்லாம் இல்லை; அப்படி இருந்தும் எல்லோரும் அவன் மேல் பிரியமாகத்தான் இருக்கிறார்கள்! 'சரத்பாபுவைப்போல் எல்லோருக்கும் பிடித்த மனுஷ்யர் மஜஃபர்புரில் வேறு எவருமே இல்லை' என்றுதான் பேசிக்கொள்கிறார்கள் இங்கே. பெண்பிள்ளைகளுக்கு ....னைப் பிடித்திருக்கலாம். ஆனால்...னைவிடச் சரத் எல்லா விஷயத்திலும்—புருஷர்களுக்குள்ள உதாரகுணத்திலும் சரி, ஆடம்பரமில்லாத தன்மையிலும் சரி, சகஜமாகவும் ஆந்தரிகமாகப் பழகுவதிலும் சரி—ஆயிரம் மடங்கு மேல் என்றுதான் சொல்வேன். நம் மனசுக்குப் பிடித்தாற்போல் இந்த மாதிரி ஒரு பையன் அகப்பட வேண்டுமே! ஆள் அதிக ஆழம் என்றுதான் நீ நினைப்பாய்; அதுதான் இல்லை. ஆசாமிக்கு உள்ளுக்குள்ளே எவ்வளவு குறும்புத்தனம் தெரியுமா? பேலாவுடனும் சிநேகிதர்களுடனும் பேசும்போது வேடிக்கை, தமாஷ் எல்லாம் பலமாகத்தான் இருக்கும். இந்தக் காலத்து நாகரிகப் பிள்ளைகளைப்போல் கண்ட இடத்திலும், கண்ட சமயத்திலும், கண்டபேரோடும் முன் யோசனை இல்லாமல் வம்பளக்க மாட்டான். சரத்தைப்பற்றி இனிக் கவலைப்படாதே! இப்படிப்பட்ட யோக்கியமான மாப்பிள்ளை நீ ஆயிரம் தேடினாலும் அகப்படவே மாட்டான். குடும்பத்தில் நிச்சயமாக நல்ல பெயரும் எடுப்பான், பார். பேலாவும் அவனுக்கேற்ற மனைவி என்று பெயரெடுத்து விட்டால் நான் பாக்கிய

சாலிதான். அமாவாசை கழிந்து விட்டது. நீது வைப்பற்றித்தான் கவலையாய் இருக்கிறது எனக்கு. இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதாதே! கடிதம் எழுதக் காகிதமோ, புஸ்தகமோ எதுவும் இங்கே அனுப்பவேண்டாம் என்று சொல்லிவிடு. நாளைக்கு மறுநாள் இங்கிருந்து புறப்பட்டுப் போல்புருக்குப் போய், வருகிற திங்கட்கிழமைக்குள் வீடு திரும்புவேன். கடிதத்தையும் மற்றச் சாமான்களையும் போல்பூர் விலாசத்துக்கு அனுப்பு.

[மஜஃபர்புர், ஜுலை, 1901] உன் ரவி

புதிதாக விவாகமான தம் பெரிய பெண் மாதுரீலதாவைக் கவி மஜஃபர்புரில் அவள் கணவன் வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டார். 1308, சிராவணம் 1-ஆம் தேதியன்று அங்கே 'முகர்ஜி லெமினரி'யில் கவியைப் பாராட்ட ஒரு கூட்டம் கூடியது.

34

ஓம்

சின்னி!

பேலாவைக் கொண்டு விட்டு வந்தாயிற்று. நீங்கள் எல்லாரும் தூரத்திலிருந்தபடி என்ன என்னவோ எண்ணியிருப்பீர்கள்; அதுதான் இல்லை. பேலா அங்கே நிம்மதியாகத்தான் இருக்கிறாள்; புதிதாக ஸம்ஸாரம் பண்ண ஆரம்பித்தாலும் அது பிடித்துத்தான் இருக்கிறது, அவளுக்கு; இனிமேல் அவளுக்கு நாமெல்லாரும் அவசியமே இல்லை. கல்யாணமான பிற்பாடு பெண்களைக் கொஞ்ச நாள் அவர்கள் அப்பா, அம்மாவை விட்டுத் தூரத்தில் புருஷனோடே நன்றாகப் பழகும்படி விடவேண்டியது அவசியந்தான். இப்படி முன்னேயே யோசித்து வைத்திருந்தேன். அப்பாவும் அம்மாவும் இவர்களுக்குக் குறுக்கே இருப்பது கெடுதல். ஏனென்றால், அப்பா, புருஷன்

இரண்டு பேர் வழக்கமும் ருசியும் அப்படியே ஒத்துப் போக முடியாது; சில விஷயத்தில் மாறுபட்டுத் தான் தீரும். அப்போது அப்பாவும் அம்மாவும் அருகில் இருந்தால் பிறந்த வீட்டு வழக்கத்தை அடியோடு மறந்து விட்டுப் புருஷனுடன் கலந்து பழகுவது சாத்தியமில்லை. கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாயிற்று. மறுபடியும் நம்மிடமே வைத்துக் கொள்ளப் பார்ப்பானேன்! 'பெண் சௌக்கியமாயிருக்கிறுளா, நன்ருக வாழ்கிருளா'—இதுதான் நமக்கு முக்கியம். நம்முடைய கஷ்ட சுகங்களை உத்தேசித்துப் புருஷன் வீட்டுத் தொல்லை போதாதென்று பிறந்தகத்துப் பாரத்தையுமா பெண்மேல் ஏற்றவேண்டும்? பேலா நிம்மதியாகத்தான் இருக்கிருள் என்று தேற்றிக்கொண்டு சும்மா இரு. கல்யாணமான பிறகும் நாம் இரண்டு பேரும் அவர்களைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருந்தோமானுல் ஒரு நன்மையும் ஏற்படாது. தசரா பூஜை ஸமயத்தில் அவர்கள் இங்கே வந்தாலோ, நாம் அவர்கள் வீட்டுக்குப் போனுலோ அப்போது நமக்கு அண்டு கொள்ள முடியாதபடி ஆனந்தம் ஏற்படும். அன்பு என்று இருந்தால் கொஞ்சம் பிரிந்திருக்க வேண்டியதும் அவசியந்தான்; சுயேச்சையாகவும் இருக்க வேண்டியதுதான். பரஸ்பரம் கட்டிக் கவிந்துகொண்டு இருப்பதால் ஒரு நன்மையும் ஏற்படாது. ராணிக்கும் விவாகமாகி அவளும் தூரப் போய்விட்டால் நல்லதுதான். கல்யாணமாகி இரண்டு வருஷம் நம்மோடே இருக்கட்டும்; அப்புறம் வயசானதும் அவளைத் தூர அனுப்பிவிடுவதே மேல். நம் குடும்ப சிக்ஷை, அபிருசி, பழக்க வழக்கம், பேச்சு, பாவனையெல்லாமே தனி. மற்ற வங்காளிகளுக்கும் நமக்குமுள்ள வித்தியாசம் இதுதான். அதனுல்தான் விவாகமானதும் நம் பெண்கள் சற்றுத் தொலைவில் போய் இருப்பது அவசியம் என்கிறேன். இல்லா

விட்டால், அந்தப் புதுவிதச் சுற்றத்தில், எவ்வளவு சின்ன விஷயமாயிருந்தாலும் கொஞ்சங் கொஞ்சமாக அவளை வாட்டி யெடுத்துவிடும்; அதனால் புருஷனிடத்தில் உள்ள சிரத்தையும் நம்பிக்கையும் போய் விடும். பிறந்தகத்தை விட்டுப் பிரிந்து இருந்தால் தான் ராணி உருப்படுவாள்; அந்த மாதிரிச் சுபாவம் அவளுக்கு. நம்மோடு நெருங்கின ஸம்ஸர்க்கம் இருந்தால் பழைய ஸகவாஸ தோஷம் போகாது. உன் விஷயத்தைத்தான் யோசித்துப் பாரேன்: கல்யாணமானதும் நான் புலதலாவில் இருந்திருந்தால் உன் சுபாவமும் நடத்தையும் வேறு விதமாகவே மாறியிருக்கும். 'நம் குழந்தைகளாயிற்றே' என்று வருத்தப்படக் கூடாது; அதை அடியோடு மறந்து விடுவதுதான் நல்லது. நம்முடைய சுகத்தின் பொருட்டா அவர்கள் வாழ்கிறார்கள்? அவர்கள் சுகமாக வாழ்ந்தாலே நமக்கு இன்பம். நேற்று முழுவதும் பேலாவின் சின்ன வயசுக் கவனமெல்லாம் மனசில் வந்துகொண்டே யிருந்தது. அவளை எவ்வளவு ஆதரவாக என் கையால் வளர்த்துப் பெரியவளாக்கினேன்! திண்டுக்குள் ஒளிந்துகொண்டு அப்போது என்ன என்ன சேஷ்டையெல்லாம் பண்ணுவாள்! தனக்கு ஈடான குழந்தையைக் கண்டால் எப்படியெல்லாம் ஹுங்காரம் செய்து அதன்மேல் போய் விழுவாள்! — கருமியாயிருந்தாலும் நல்ல குணமும் உண்டு அவளுக்கு. பார்க்தெரு வீட்டிலே நானேதான் அவளைக் குளிப்பாட்டுவேன். தார்ஜிலிங்கில் ராத்திரி எழுந்து பாலைக் காய்ச்சிப் புகட்டுவேன்! அவள்மேல் எனக்கு எப்போது அதிகமாக ஆசை ஏற்பட்டதோ! — இந்த விஷயமெல்லாம் அடிக்கடி ஞாபகத்துக்கு வருகின்றன. இதெல்லாம் அவளுக்குத் தெரியாது; அப்படி இருப்பதே மேல். ஒரு தொல்லையும் இல்லாமல் புதுக் குடித்தனம் நடத்தி வரட்டும். அதிலேயே

லயித்து, பக்தி, பிரேமை, அன்பு, குடும்பக் கடமை இவைகளில் ஈடுபட்டு நிறை வாழ்வு வாழட்டும். நாம் கவலை நீங்கி இருக்கலாம்.

இன்று சாந்திநிகேதனம் வந்து சேர்ந்து, அமைதியில் ஆழ்ந்திருக்கிறேன். நடுநடுவே இப்படி வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பது அவசியந்தான். இல்லாவிட்டால் தூர இருப்பதாகக் கற்பனை பண்ணிக் கொள்ளப் பார்த்தாலும் முடிகிற தில்லை. தன்னந்தனியாக நான் எல்லையற்ற வானமும், காற்றும், ஒளியும் சூழ இங்கே ஆதியன்னையின் மடியில் அமர்ந்து ஞானப்பால் பருகுகிறேன்.

[சாந்திநிகேதனம், ஜூலை, 1901] உன் —

புலதலா: குல்னு ஜில்லாவிலுள்ள கவியின் மாமனுர் வீடு.

35

ஓம்

சின்னி !

வழியெல்லாம் பல தடங்கல், அவற்றை யெல்லாம் மீறி இன்றுதான் இங்கே வந்து சேர்ந்தேன். முதல் இரண்டொருநாள் வரைக்கும் காற்று எதி ராகவே அடித்துக்கொண் டிருந்தது. அந்தக் காற்றில் படகு அப்படி இப்படிக்கூட அசைய முடியவில்லை. மெதுவாகப் போய்க்கொண்டே ஏரியில் நுழைந்து விட்டது. ஏரி என்ருல் இங்கே ஸமுத்திரம் மாதிரி தான். நாலுபக்கமும் ஜலம் தைதை என்று கொந் தளிக்கிறது. நடுநடுவே பயிர் முக்கால்வாசி மூழ்கித் தலை மட்டும் தண்ணீரில் தெரிகிறது. நடுவில் நடுவில் ஒவ்வொரு கிராமமும் ஒரு சின்னத் தீவு மாதிரி நிற்கிறது. ஆடுமாடு மேயவோ மனுஷ்யர்கள் நடமாடவோ துளிக்கூட இடம் இல்லை. பரிசலிலும் படகிலும் ஏறி இந்தக் கிராமத்திலிருந்து அந்தக் கிரா

மத்துக்குப் போய் வருகிருர்கள். இந்த மாதிரிக் காட்சியைப் போல்புர் போன்ற இடத்தில் கற்பனையில் கூடக் காணமுடியாது. நாலுபக்கமும் கற்றை கற்றையாகப் பாசியும், நீர்ப்பூண்டும் மிதக்கின்றன. நடுவில் நடுவில் தாமரைச் செடி! நுரை வேறே. எல்லாம் சேர்ந்து ஒருவித முடைநாற்றம் வீசுகிறது. ஜலத்தில் கறுப்புக் கறுப்பாக நீர்க்கோழி. தலைக்கு மேலே மீன்கொத்தி பறந்து திரிந்துகொண்டே இருக்கிறது. சாயங்கால வேளையில் நாலுதிக்கும் கரை காணுமல் ஜலம் ஒரே நிலையாகப் பளபளக்கும் போது மனசில் என்னவோ பண்ணுகிறது. ஸமுத்திரத்திலேயானுல் அலைகள் பலவிதமாகக் கொந்தளித்து எழும்பும்; சப்தமும் கேட்கும். இங்கே அதுகூட இல்லை. நாலுபக்கமும் சந்தடியேயின்றிச் சூன்யமாய் இருக்கிறது. படகு கிளுகிளுவென்று நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் சப்தம் ஒன்றுதான். அதோடு மங்கலான நிலவும் வந்து படிந்தால், ஏதோ ஜன நடமாட்டமில்லாத பிரேத உலகில் இருப்பதுபோல் பிரமை மூள்கிறது. விளக்கை அணைத்துவிட்டு ஜன்னலருகில் கூர்ச்சியை இழுத்துப் போட்டுக் கொண்டு நிலவில் கம்மென்று உட்கார்ந்திருப்பேன். இந்த நீர்ப் பரப்பில் திகழும் அமைதி முழுவதும் என் உள்ளத்தைச் சூழ்ந்துகொள்வதுபோல் இருக்கும். மூந்தாநாள் இந்த ஏரியில் இருக்கும்போது, மேற்குப் பக்கம் கருமேகம் திரண்டு புயற்காற்று எடுத்து விட்டது. நல்ல வேளையாகப் படகு ஒரு வயலில் இருக்கவே, மடமடவென்று எப்படியோ ஜலத்தடியில் பிடியை விடாமல் நங்கூரம் போட்டு நிறுத்தி விட்டோம். புயல் நின்ற பிறகுதான் படகு புறப்பட்டது. ஆனுல் சற்று நாழிகை கழித்துத் திடீரென்று மறுபடியும் புயல் வந்துவிட்டது. அந்தத் தடவையும் தெய்வச் செயலாகச் சரியான இடத்தில் இருந்தோம். இல்லாவிட்டால், அந்தக் காற்றில் படகு எங்களை

எங்கே கொண்டுபோய்த் தள்ளியிருக்குமோ! சொல்ல முடியாது! இங்கே வந்ததுமே ஒரு ஸமாசாரம் தெரிந்தது. வருகிற திங்கட்கிழமை நான் ஹைக் கோர்ட்டில் ஆஜராகவேண்டும். ஆகவே, நாளைக்கே இதை விட்டுப் புறப்படவேண்டியதுதான். கல்கத்தாவில் அவ்வளவு சந்தடிக்கும் இரைச்சலுக்கும் நடுவிலே உனக்குக் கடுதாசு எழுத அவகாசம் இராதே என்றுதான் இப்போதே எழுதிவிடுகிறேன். கொஞ்ச நாள் இப்படி ஜலத்திலேயே என் ஆசை தீர, நிம்மதியாய், தனி வாசம் பண்ணினதில் உடம்பு எவ்வளவோ தேவலை! உடம்பு தேறவேண்டுமானுல் ஜலவாசம் பண்ணிஞல்தான் சரி என்று இப்போதுதான் தெரிந்தது. இதோ எழுதிக்கொண் டிருக்கும்போதே மறுபடியும் புயல் அடிக்க ஆரம்பித்துவிட்டது. மீன்கள் நங்கூரத்தை இழுத்து அமர்க்களம் பண்ணிவிட்டன. கல்கத்தா திரும்பினதும் உங்களைப்பற்றி ஏதாவது ஸமாசாரம் வந்திருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

[காளிக்கிராமம், 1901] உன் ரவி

௩௬

ஓம்

ஞின்னி!

சிலாயிதஹ் வந்ததும் மனசு என்னவோபோல் இருக்கிறது. எந்த இடத்தை விட்டு வந்துவிடுகிறோமோ அதுதான் நன்ருக இருப்பதுபோல் தோன்றிவிடுகிறது நமக்கு; அது நம் பிரமைதான். சிலாயிதஹ்ஹிற்கு வந்தால் அங்கே நாம் சுகமாக இருந்தது, கஷ்டப்பட்டது இரண்டும் ஞாபகத்துக்கு வருகின்றன. ஆனுலும் அங்கே தெம்பாகக் காலம் கழித்ததுதான் அதிகமாகக் கவனத்துக்கு வருகிறது. இருந்தாலும், இப்போது என்னவோ அப்படி நன்ருக இல்லை ஊர். எங்கே கண்டாலும் பனிதான், காலை

எட்டு மணி வரைக்கும். சாயங்காலமானதுமே மறுபடியும் பனி கவிந்துகொள்கிறது. கிணற்று ஜலமும் குட்டை ஜலமும் பழையபடியேதான் இருக்கிறது. நாலு பக்கமும் மலேரியா தாண்டவமாடுகிறது. சிலாயிதஹ்றைஹ விட்டுப் போனது நல்லதுதான். இல்லாவிட்டால் குழந்தைகளை வைத்துக்கொண்டு வியாதியில் அவதிப்பட வேண்டியதுதான். இதை விடப் போல்புர் எவ்வளவோ மேல்; நல்ல ஆரோக்கியமான இடம். ஆனால் இங்கே எவ்வளவு நன்றாய்ப் பெரிது பெரிதாக ரோஜாப்பூப் பூக்கிறது தெரியுமா? கணக்கே இல்லை! பாப்லாப்பூ வாசனை நாலு பக்கமும் கமழ்கிறது. வெகுநாள் பழகிய சிலாயிதஹ் பூ மணமும் இக்கடிதத்தில் கலந்து வீசுகிறது தெரியுமா?

இங்கிருந்து பருப்பு, வெல்லம், புஸ்தகப்பெட்டி எல்லாம் அனுப்பினேனே, வந்து சேர்ந்தனவா? பருப்புத் தினுசு பள்ளிக்கூடத்துக்காக. சோளம் விளைந்தால் அனுப்புகிறேன்.

ரதி பின்னாலே நல்ல பேர் எடுத்து வாழ வேண்டும்; இப்போதிலிருந்தே அதற்கேற்றபடி அவனைப் பழக்கவேண்டுமென்று பார்க்கிறேன். ஒரு நியமமும், கட்டுப்பாடும் கெடுபிடியும் இருந்துதான் தீரவேண்டும். அவன் உறுதி தளராமல் திடமாகத் தன் கடமைகளைச் செய்து வரவேண்டும்; அப்போதுதான் அவன் சரியான மனுஷ்யன் என்று பெயரெடுக்க முடியும். சின்ன வயசிலிருந்து நம் சொந்த விருப்பம் பூர்த்தியாகிறதா என்றுதான் கவனிக்கிறோம் நாம். அதனால் உயர்ந்த கருத்துக்களைவிட – சிறந்த நோக்கத்தைவிட – மனிதத் தன்மையைவிட - இன்னும் சொல்லப் போனால் அன்பு, நன்மை இவைகளை விட – நம்முடைய அற்ப ஆசையையே பெரிதாக மதிக்கிறோம். எப்படி இருந்தாலும் சரி, யாருக்காக இருந்தாலும் சரி, அதைத் துளிக்கூட விட்டுக் கொடுக்க

மனசு வருவதில்லை. காரியம் கெட்டுப் போகிறது; கடமையும் தவறிவிடுகிறது; நமக்கு மிகவும் வேண்டியவர்கள் மனசு புண்பட்டாலுங்கூட அணுவளவும் அந்த அற்ப ஆசையை நம்மால் அடக்கி ஆள முடிகிறதில்லை. சொந்த விருப்பத்திற்கு இடங் கொடுத்தால், 'நாம் தோற்று விட்டோம். நம்மிடத்திலுள்ள உயர்வான மனிதத் தன்மையை, கோழைத்தனத்திற்குப் பலியிட்டுவிட்டோம்' என்றுதான் அர்த்தம். வெறும் மமதையைத் தவிர இதில் வாஸ்தவமான இன்பம் ஏது? நடந்தது நடந்தாயிற்று; நம் விஷயத்திற்கு இனிமேல் பரிகாரமே இல்லை. இப்பொழுது நம் குழந்தைகளைக் கவனிப்போம். அவர்கள் நன்மையை உத்தேசித்து அவர்களை ஈசுவரன் கையில் ஒப்பித்து விட வேண்டியதுதான்; அவர்களுடைய பணப் பெருமை, இச்சை, தீவிரப்பற்று, தசாநோக்கம் இவைகளை யெல்லாம் அவனே போக்கி நல்லபடி கொண்டு செலுத்தட்டும்; நல்ல உறுதியோடு வீரியமும் அவர்களுக்கு அவன் அருளட்டும். இதுதான் என் கோரிக்கை. உறுதியோடு இருந்து நாம் நம்மைப் பிணிக்கும் இச்சைகளை யெல்லாம் அடக்கி ஈசுவரனுடைய ஆழ்ந்த தர்ம நியமங்கள் ஓங்கத் துணை புரியவேண்டும். ஒவ்வொரு முறையும் அந் நியமங்களை மீற மீற நம்முடைய கௌரவந்தான் பாழாகும்; அப்படி விடக்கூடாது. இவ்வளவு பாடு பட்டும் பலன் இல்லாமற் போனல் நாம் வாழ்வதே வியர்த்தம் என்றுதான் சொல்வேன்.

[சிலாயிதஹ், 1901] ரவி

அப்போது கவி சிலாயிதஹ்ஹைவிட்டுக் குடும்ப சகிதமாகச் சாந்திநிகேதனம் வந்திருந்தார். 'பிரஹ்மசர்யாசிரமம்' ஸ்தாபிதமாகி வித்தியாலய வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

கவியின் மனைவி மிருணாளினி தேவி எழுதிய கடிதங்கள்

1

ஓம்

ஸுகுமார்,

ஸந்தேஸ், மொரப்பா, பர்பி எல்லாம் வந்து சேர்ந்தன. பர்பியைப் பார்த்து எல்லாரும் ஆச்சரியப் பட்டோம். இவ்வளவு பெரிய பர்பி நாங்கள் பார்த்ததே இல்லை. ஸந்தேஸ் எங்களுக்கெல்லாம் மிகவும் பிடித்திருந்தது. மொரப்பாவும் நன்றாகத்தான் இருக்கும். இங்கேதான் எங்கள் சாப்பாடு எப்படி என்று உனக்குத் தெரியுமே! மீன் மாமிஸம் சாப் பிடவே வழியில்லை! இந்த ஸங்கடத்தின் நடுவில் இதெல்லாம் கிடைத்ததே எங்களுக்கு எவ்வளவோ ஸந்தோஷமாயிருக்கிறது! ஸுசீலா, ஸுதீ, க்ருதீ, தினு, நளினி எல்லாரும் இங்கேதான் இருக்கிறார்கள். —ஏகப்பட்ட பேர்தான் இருக்கிறோம். இந்தப் பக்க மாக வந்து விட்டுப் போவாயென்று இருந்தோம். நாங்களே அங்கே வருவதாகக் கடுதாசு போடலாம் என்றுதான் பார்த்தோம். அப்புறம் குழந்தைகளை விட்டுவிட்டு வருவதென்றால் சௌகரியப்படாதே என்று சும்மா இருந்து விட்டோம்.

[சாந்திநிகேதனம், 1890] **மிருணாளினி**

கவியின் மருமகள் (சகோதரியின் புதல்வி) ஸுப்ரபா தேவியின் புருஷர் ஸுகுமார் ஹால்தார் அவர்களுக்கு எழுதியது.

2

ஓம்

சாரு,

உன்னிடமிருந்து கடுதாசு வந்து வெகு நாட்களாகின்றன. இப்போதுதான் ஒரு கடிதம் கிடைத்தது. உனக்கு அழகாக ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறதாமே? ஏன் ஸமாசாரமே தெரிவிக்கவில்லை எனக்கு? தொந்தரவு பண்ணுவேன் என்று பயமா? அதன் தலை நிறைய மயிர் என்று கேட்டதிலிருந்து 'குந்தலீன்' தடவிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறேன். அவ்வளவு தலைமயிரையும் வைத்துக்கொண்டு உன் பெண் என் வழுக்கைத் தலையைப் பார்த்துச் சிரித்தாளானால் எனக்கு ஸகிக்காதடி, அம்மா! எனக்கு என்னவோ நிஜமாகவே உன் பேரில் கோபந்தான். இல்லாவிட்டால், அழகாக ஒரு பேத்தி பிறந்திருக்கிறாளே என்றுகூடச் சொல்லாமல் ஒரேயடியாக எங்களை இப்படியா மறந்துவிடுவாய்! உன் பெண்ணோடு நான் கொஞ்சம் சண்டை போடத்தான் போகிறேன். ரமாவைக் கண்டால்தான் எனக்கு ஆசை. அவளைவிட இந்தப் பெண் அழகு என்று சொன்னால் எனக்குப் பொறுக்காதடி அம்மா! ரமாவுக்குக்கூட நிச்சயமாகக் கோபந்தான் வரும். எதுவோ, ரமாவுக்கும் எனக்கும் அப்படிப் படாவிட்டாலும், எல்லோரும் இந்தப் பெண்தான் அழகு என்கிறார்கள். உனக்கு எப்படித் தோன்றுகிறது? — எழுது. ரமா தன் தங்கையை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறாள்? பார்க்கவேணும் என்று மிகவும் ஆசையாய் இருக்கிறது. நாள் முழுவதும் குழந்தையை வைத்துக்கொண்டே திரிகிறாளா? உன் கடுதாசில் ஒரு விசேஷமும் காணோமே? ரமா

என்ன பண்ணுகிருள், என்ன சொல்கிருள், எப்படி இருக்கிருள், இதையெல்லாம் இந்தத் தடவையாவது எழுது. கைக்குழந்தையைப் பற்றியும் எழுது. அதோடு சண்டை பிடிக்கத்தான் போகிறேன்; இருந்தாலும், அது என்ன செய்கிறது, எப்படி இருக்கிறது, துஷ்டா நல்லதா எல்லாம் விவரமாக எழுது. அதைப் பார்க்க இன்னும் வெகு நாளாகுமே என்றுதான் எனக்கு அதன்மேல் கோபம். மூன்ரும் மதனி, இவர்களெல்லாரும் எப்படி இருக்கிருர்கள்? அவர்கள் ஸமாசாரம் ஏதாவது தெரியுமா? தெரிந்திருந்தால் எழுது. நரூ இவர்களெல்லாரும் சீக்கிரத்தில் காசிக்குப் புறப்பட்டுப் போவார்கள் என்று கேள்விப்பட்டேன். அப்புறம் நீ ஒருத்திதான் வீட்டில்; வெறிச்சென்று இருக்கும் பாவம் உனக்கு. நீ, 'ஞஅக்கா, மூன்ரும் மதனி எல்லாரும் தனித்தனியாகத்தான் இருக்கிறீர்களாமே! உன் தங்கை தரூ வந்திருந்தாளா என்ன? உன்னிடம் இப்போது இருக்கிற வேலைக்காரி யார்? பிரஸவத்தின்போது மிகவும் சிரமமாக இருந்ததா? இப்போது எப்படி இருக்கிறது? ஒவ்வொரு விஷயத்தையும் எழுது. எனக்கு எவ்வளவு ஆவலாக இருக்கிறது தெரியுமா! தயிர் சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டாயே: இப்போது சாப்பிடாதே; சாப்பிட்டாயானுல் என் பேத்திக்கு இருமல் வந்துவிடும்; கூடாது. தாய்ப்பாலை நிறுத்திவிட்டால் சொல்லு; நிறையத் தயிர் அனுப்புகிறேன். "இப்போதே அனுப்பினுல்தான் என்ன? ஸுதீ சாப்பிட்டுவிட்டுப் போகிருன்!" என்கிருர் அவர். எனக்கு என்னவோ அது பிடிக்கவில்லை. பிள்ளை சாப்பிடுகிறதாம்! மாட்டுப் பெண் வாயைக் கட்டிக்கொண்டு இருக்கிறதாம்! அது எப்படி முடியும்! நீதான் நம் அகத்தில் மாட்டுப் பெண்களுக்குள்ளே லக்ஷ்மி போல் இருக்கிருய்! உன்னுல்தான் மற்ற மாட்டுப்

பெண்களும் சோபிக்கிருர்கள். இப்போதெல்லாம் யாருக்கு உன்னைப்போல் இப்படி அழகாகக் குழந்தை பிறந்து விடுகிறதாம்! ஒரு காரியம் மட்டும் மறக்கக் கூடாது நீ. ஸத்யனிடத்தில், யாராவது வருகிற போதோ, பரிசாரகப் பிராமணன் வருகிறபோதோ, ரமாராணி, குகுராணி இரண்டு பேர் மார்பு அளவை யும் கட்டாயம் எடுத்து அனுப்பும்படி சொல்லிவை. கைக்குழந்தைக்கு முன்பக்கம் திறந்து இருக்க வேண்டுமா, மூடியிருக்க வேண்டுமா, அதையும் சொல்லி யனுப்பு. ஒரு காரியம் செய்யவேண்டும்: பாலிகஞ்ஜ் தையற்காரன் அந்தப் பக்கம் போனுல் அவனிடம் கொடுத்து, எங்கள் தையற்காரன் வருகிற போது அவனிடம் தரச் சொல்லு. கொஞ்சம் சின்ன தாகவோ பெரிதாகவோ இருந்தாலும் எப்படி மாற்ற வேண்டு மென்று தெரிவித்து எனக்குக் கடிதம் எழுது. ரமாவின் மல் தயாராகிவிட்டதா? எவ்வளவு கூலி ஆயிற்று? 'அதை அனுப்பி விடுவேனும்; அப் போது அவசரத்தில் என்னுல் முடியவில்லையாம்' என்று சொல்லு. இன்னும் தயாராகாவிட்டால் சீக்கிரம் செய்யச் சொல்லு. ஸுதீ ஏன் ஹைக்கோர்ட்டுக்குப் போகிருன்? இப்போதே 'பிராக்டிஸ்' ஆரம்பிக்க லாமா என்ன? ஏதாவது 'கேஸ்' கிடைத்ததா? புடேயிடம் 'அவள் வரவேண்டும் என்று நான் எதிர் பார்க்கவில்லை; நிம்மதியாகத்தான் இருக்கிறேனும்' என்று சொல். அவள் போனதிலிருந்து சண்டை, கூச்சல் ஒன்றும் இல்லை. அவள் 'ஞஅக்கா வீடமே இருந்தாலும் எனக்கு ஆக்ஷேபணை இல்லை என்று சொல். அப்படி நான் ஆக்ஷேபித்து அவர்கள் வைத் துக்கொண்டால்கூட அவளைக் கட்டி ஆளமுடியாது. நாங்களெல்லாரும் சௌக்கியமே. குழந்தைக்கு நாலுநாளாக மார்ச்சளி கட்டிக்கொண்டு ஜுரம். இன்றைக்குக் குளிப்பாட்டவேண்டும். அதனுல் தான் இத்தனை நாளாக உனக்கு எழுதவே முடிய

வில்லை. உங்கள்மேல்தான் எப்போதுமே எனக்கு ஆசை. உங்களுக்கே தெரிந்திருக்கும்.

மிருணாளினி

கவியின் ஸகோதரர் புதல்வர் ஜ்ஞாநேந்திரநாத் டாகுரின் மனைவி சாருபாலா தேவிக்கு எழுதியது.

3

ஓம்

பேலா,

இத்தனை நாள் கழித்து இப்போதுதான் உனக்கு இலந்தை வடகம் அனுப்ப முடிந்தது. ஸுரேன் திரும்பிப் போயாயிற்று; அதிக நாள் இங்கேயே இருக்கிறது என்றால் முடிகிறதா? அடிக்கடி அவர்கள் வீட்டுப் பக்கம் வந்துவிட்டுப் போகக் கூடாதா என்று கேட்டுக் கொண்டாளாம், அவன் மாமியார். ஸுரேனுக்கு நிச்சயித்திருக்கிற பெண்ணை 'ஸதீ' என்று கூப்பிடுகிறார்கள், அவர்கள் வைத்த பெயர் 'சததள்.' இந்தத் தடவை 'எண்டிரன்ஸ்' பரீக்ஷைக்குப் போயிருக்கிறாள். 'பாஸ்' ஆகிறதும் ஆகாததும் இனி மேல்தான் தெரியவேண்டும். பெண் அடக்க ஒடுக்க மாக, அமைந்து இருக்கிறாள். நல்ல பெண்தான்; புத்திசாலி. அப்படி அதிக அழகோடு சேர்த்தி யில்லை; நடுத்தரம்.

ஸம்பந்தியம்மாளும் தேவலை; வயசு அப்படி அதிகமாக ஆகவில்லை. நல்ல மனுஷி; சற்று ஆசாரமா யிருக்கிறாள். முன்னாலேயே அவளைத் தெரியும் எனக்கு; டபிள்யூ. ஸீ. பானர்ஜி*யின் தங்கை. உங்களவர் ஸம்மதித்தால், ஸுரேனுடைய கல்யாணத் துக்கு நாங்கள் போகிறபோது உன்னையும் அழைத்

---

* முதல் காங்கிரஸ் தலைவர்.

துக்கொண்டு போகிறதாக இருக்கிறோம். 'ஞஅக்கா இங்கேதான் இருக்கிறாள். இன்னும் இரண்டு மூன்று நாளில் புறப்பட்டுப் போவாள். ராணிக்கு எழுதப் பாடக் கற்றுக் கொடுக்கிறாள். உன் பெரிய மைத்துனர் வேறே போகிறதாக இருந்ததே; நிச்சயமாயிற்றா? சாப்பிட்டானதும் இன்று திடீ ரென்று அவர் (டாகுர்), "புறப்படு, புறப்படு! பேலா வைப் போய்ப் பார்க்கலாம் வா" என்றார். பள்ளிக் கூட அலுவலாகவே இருக்கிறார் ஸதா. தாமேகூடப் பாடம் சொல்லித் தருகிறார். ரதிக்கென்று பேஷான குதிரை ஒன்று வாங்கி யிருக்கிறோம். அதில் ஏறிச் சவாரி பண்ணச் சற்றுப் பயப்படுகிறான். மிஸ் பார் ஸன்ஸ் மறுபடியும் 'வேலைக்கு வருகிறேன்' என் கிறாள். இங்கே எங்களுக்கே இடம் போதவில்லை; இல்லாவிட்டால் வைத்துக் கொள்ளலாம் அவளை. உனக்காக மேஜை விரிப்பு ஒன்று கொடுத்தாள். அதை மறந்து வைத்துவிட்டு வந்து விட்டேன். நீ எதற்கும் அவளை விசாரித்து ஒரு கடுதாசு போடு.

கலைமகள் சிறுகதைத் தொகுதிகள்

தமிழ் நாட்டில் பெயர் பெற்ற எழுத்தாளர்களின் சிறு கதைகளைத் திரட்டி அழகிய அட்டைப் படத்துடன் அழுத்தமான காகிதத்தில் ஒவ்வொன்ருக வெளியிட்டு வருகிறோம். இதுகாறும் பின் கண்ட தொகுதிகள் வெளியாகியிருக்கின்றன.

விலை ஒவ்வொன்றுக்கும் ரூ 2/-

1. கலைஞன் தியாகம் - கி. வா. ஜகந்நாதன்
2. ஸரஸாவின் பொம்மை – சி. சு. செல்லப்பா
3. பொன் வளையல் – புரசு பாலகிருஷ்ணன்
4. புனர்ஜன்மம் - கு. ப. ராஜகோபாலன்
5. காளியின் கண்கள் - து. ராமமூர்த்தி
6. பச்சைக் கிளி - கி. சந்திரசேகரன்
7. காஞ்சனை - 'புதுமைப்பித்தன்' (ரூ. 2/4)

அடுத்து வருபவை

8. கி. ரா. வின் கதைகள்
9. த. நா. குமாரஸ்வாமியின் கதைகள்
10. கி. சாவித்திரி அம்மாளின் கதைகள்
11. ரா. ஸ்ரீ. தேசிகன் கதைகள்
12. கா. ஸ்ரீ. ஸ்ரீ யின் கதைகள்
13. பி. எம். கண்ணன் கதைகள்
14. 'ரூஸி' யின் கதைகள்
15. ஸரோஜா ராமமூர்த்தியின் கதைகள்

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்